புதிய சமுதாயம்

KDN. 10509 ஆசிரியர்: முருகு சுப்பிரமணியன் 10.5.1977



PUTHIYA SAMUDHAYAM

50 காசு

கல்வி



பாவலர் சி. வேலுசுவாமி

கற்பதற்குச் சொன்னார்கள் ''கல்வி" அஃது
"கல்"என்னும் சொல்லடியாய்ப் பிறந்த சொல்லாம்!
முற்பட்டு மாந்தரெலாம் முழுமை காண
முறையாகப் பெறற்கரிய முதன்மைச் செல்வம்!
பிற்பட்டுப் பாமரராய்க் குருட ராகப்
பிறர்தூற்ற வாழாமை வேண்டும் என்பார்!
நற்புகழும் நல்லறிவும் நிலைத்த வாழ்வும்
நனிவிளைக்கும் கல்வியினை நயத்தல் வேண்டும்!

கல்லாத சமுதாயம் நாட்டில் என்றும்
கண்ணற்ற கதியற்ற சமுதா யம்காண்!
நல்லார்கள் இவ்வுண்மை யுணர்ந்து கொண்டு
நாட்டாரின் கல்விக்கண் திறக்க வேண்டும்!
இல்லாராய் எளியாராய் இகழப் பட்டே
இருப்பாராய் வாழ்கின்ற நம்மி னத்தை
வல்லாராய் நல்லாராய் வளமிக் காராய்
வாழ்விக்கக் கல்வியினை வழங்கல் வேண்டும்!

உயர்கல்விச் சாலையில்லை! சமூகத் துக்கே
உருப்படியாய்ப் பணியாற்றத் தலைவர் இல்லை!
அயர்வுற்றார் அறிவுள்ளார்! சிலர்தா மிங்கே
அவ்வப்போ தெழுச்சிக்காய்ப் பேசு கின்றார்!
பயன்மிக்க செயலெதுவும் கல்விக் காகப்
பண்டிருந்து இன்றுவரை படைக்க வில்லை!
"செயலற்ற சமுதாயம்" என்றே எங்கும்
செப்புவதை மடுக்கின்றோம்! சிறப்பே யில்லை!

தொடக்கநிலை உயர்நிலையிற் றொடர்ந்து கற்கும்
துடிப்புமுயர் குறிக்கோளும்
கொண்டோர்க் கெல்லாம்
இடந்தந்து கல்வியினில் ஏற்றம் உற்றே
இனிதுயர்ந்து நாட்டினிலே சிறப்ப தற்கு
நடவடிக்கை துறைதோறும் எடுக்க வேண்டும்;
நற்பயனை விளைக்கமனம் நாடல் வேண்டும்!
'முடமான சமுதாயம்" எனப் பழிக்கும்
முற்பட்ட இழிசொல்லை முறிப்போம் இன்றே!

புதிய சமுதாயத்தின் புதிய முகவரி

131, ஜாலான் துவாங்கு அப்துல் ரஹ்மான்,

[2ஆவது மாடி]

கோலாலம்பூர் 01-08 தொலைபேசி:80839

வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு — குறள்

புதிய சமுதாயம்

வள்ளுவர் ஆண்டு 1008 சித்திரை 28
கம்பம் 1 ∴ 10-5-1977 ∴ குடும்பம் 4

தேர்தல்களும் தீர்ப்புகளும்

ஆசியாவில் ஒன்றன் பின் ஒன்றாகப் பல நாடுகளில் பொதுத் தேர்தல் நடைபெற்று மக்களின் தீர்ப்புக்கள் வெளியாகி வருகின்றன.

இந்தியாவில் பழைய பிரதமர் இந்திரா காந்தி தாம் சர்வதிகாரி அல்ல என்பதையும் ஜனநாயகத்தில் தமது நம்பிக்கையையும் நிலைநிறுத்திக் கொள்வதற்காகத் திடீர்த் தேர்தலை அறிவித்துத் தனது பிரதமர் பதவிக்கு முற்றுப்புள்ளி வைத்துக் கொண்ட பரிதாப நிலைக்கு இலக்காகி நிற்கிறார்.

இந்தியக் கண்டத்திலுள்ள மற்றொரு நாடான பாகிஸ்தானில் அதன் அதிபர் பூட்டோ பொதுத் தேர்தலை நடத்தி மீண்டும் தம்மை அதிகாரத்தில் அமர்த்திக் கொண்டுவிட்ட போதிலும், தேர்தல் மோசடிக் குற்றசசாட்டுக்களையும் எதிர்க்கட்சிகளின் முழு மூசசான எதிர்ப்பையும் எதிர் நோக்குகிறார்.

பாகிஸ்தான் தேசியக் கூட்டணி என்று அழைக்கப்படும் எதிர்க்கட்சியின் முன்னணி பூட்டோ பதவியிலிருந்து இறங்கிப் பொதுத் தேர்தலை மீண்டும் நடத்த வேண்டுமென்று கோரிவருகின்றது. எதிர்க்கட்சிகளின் போராட்டம் 'உள்நாட்டுப் போர்' என்று வர்ணிக்கும் அளவுக்கு வலுவ்டைந்த பின்னர், எதிர்க்கட்சிகளின் உசசத் தலைவர்களுடன் பேசசு நடத்த பூட்டோ இணங்கியிருக்கிறார். இந்தப் பேசசு பாகிஸ்தானில் மறுபடியும் அரசியல் அமைதியும் ஜனநாயகமும் தழைப்பதற்கு வழிவகுக்குமென்று நம்பலாம்.

இந்தோனேசியாவில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் அதிபர் சுகார்த்தோவின் கோல்கார் கட்சி எதிர்பார்த்தபடி வாகை சூடியிருக்கிறது.

ஜாகர்த்தா, தென் கலிமந்தான், ஆசசே ஆகிய இடங்களில் கோல்கார் கட்சி தோல்வி கண்டிருந்த போதிலும் இந்தோனேசியாவின் ஆட்சி தொடர்ந்து அதிபர் சுகார்த்தோ தலைமையில் நீடிக்கும் என்பதும் அதற்குரிய பெரும்பான்மையைக் கோல்கார் கட்சி பெற்றிருப்பதும் அந்த நாட்டின் அரசியல் உறுதிப்பாட்டிற்கும் பொருளியல் நிலைத்தன்மைக்கும் நம்பிக்கையூட்டுகிற நல்ல அறிகுறியாகும். அதுமட்டுமன்றி இவ் வட்டாரத்தின் நிலைத்தன்மைக்கும் பாதுகாப்புக்கும் கூட ஆசியானில் அங்கம் வகிக்கும் பெரிய

நாடான இந்தோனேசியாவின் அரசியல் நிலைத்தன்மை மிக இன்றியமையாதது. இவ்வகையில் அதிபர் சுகார்த்தோவின் ஆளும் கட்சி இந்தோனேசிய வாக்காளர்களின் நம்பிக்கையை மீண்டும் பெற்றிருப்பது இவ்வட்டார நாடுகளுக்கும் பெரிதும் மன நிறைவை வழங்கும்.

ஈழத்துக் காந்தி

ஈழத்துக் காந்தி என்று போற்றப்பட்டு வந்த இலங்கைத் தமிழர் விடுதலை முன்னணியின் பெருந் தலைவர் எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் மறைவுச் செய்தி இலங்கைத் தமிழர்களுக்கு மட்டுமன்றித் தமிழ்கூறு நல்லுலகத்திற்கே அதிர்ச்சி ஊட்டுவதாகும். இலங்கைத் தமிழர்களின தந்தையாக அவர்களின நல்வாழ்வுக்கே தம் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்து வாழ்ந்தவர் முதறிஞர் செல்வா. அதனால் தான் தள்ளாடும் 80 வயதில் அப்பெருமகனின் மறைவு நேரிட்டிருந்தும், இலங்கைத் தமிழ்ச் சமூகம் வழிகாட்டும் ஒப்பற்ற உன்னத தலைவனை இழந்துவிட்டோமே என்று கலங்கி நிற்கிறது. இலங்கைத் தமிழ் மக்களிடையே நிலவிய வேற்றுமைகளை எல்லாம் களைந்து பொது முன்னணி காண்பதிலும் தந்தை செல்வா வெற்றியடைந்தார். எல்லாத் தலைவர்களாலும் எல்லா இயக்கங்களாலும் அப்பெருமகன் மதிக்கப்பட்டுவந்தார். பண்டா–செல்வா ஒப்பந்தம், டட்லி–செல்வா ஒப்பந்தம் இலங்கை அரசுகள் அன்னாருக்கு வழங்கிய அங்கீகார முத்திரைகளாகும்.

தந்தை செல்வா இலங்கைத் தமிழர்களின் ஏகத் தலைவர் என்றபோதிலும், மலேசியாவில் பிறந்தவர்–மலேசியா இலங்கைக்கு நல்கிய சொத்து அவர். ஆகவே செல்வாவின் இழப்புத் துயரத்தில் மூழ்கியிருக்கும் இலங்கைத் தமிழர்களின் ஆற்றுமையில் மலேசியர்கள் பங்கு கொள்வது நியாயமே.

தந்தை செல்வாவின் தியாக வரலாறு இலங்கைத் தமிழ் மக்களுக்குத் தொடர்ந்து வழிகாட்டும் ஒளிவிளக்காய்த்திகழ்வது உறுதி.

சிலாங்கூர் பேராளர்கள்

சிலாங்கூர் ம. இ. கா. மாநாட்டில் கலந்துகொண்ட 300க்கு மேற்பட்ட பேராளர்கள் ம. இ. கா. வின் கட்டுக்கோப்பிலும் இந்திய சமூகத்தின் ஐக்கியத்திலும் தங்களுக்குள்ள அசையாத நம்பிக்கையைப் புலப்படுத்தும் வகையில் மிகவும் பொறுப்புடன் நடந்துகொண்டிருக்கிறார்கள்.

இரண்டு அணிகளின் பகிரங்கப் பயங்கர மோதலினால் ம.இ.கா. வின் கட்டுக்கோப்பு உடைந்துவிடுமோ என்று கூட அஞ்ச வேண்டியிருந்தது. ஆனால் விவேகமிக்க பேராளர்கள், இரண்டு அணிகளுக்குமே வெற்றியையும் தோல்வியையும் வழங்கிக் 'கூட்டு' நிர்வாகத்தைச் சிலாங்கூர் ம.இ.கா. வுக்கு ஏற்படுத்தியுள்ளனர், இதன் மூலம் அணிகளின் அமைப்பையும் முக்கிய தலைவர்களிடையே நேருக்குநேர் போட்டி நிகழ்வதையும் தாங்கள் விரும்பவில்லை என்பதையும் குறிப்பாகப் புலப்படுத்தியிருக்கிறார்கள்.

நாடாளுமன்ற உறுப்பினர் மாண்புமிகு சாமிவேலுக்குத் தலைவர் பதவியை வழங்கிய பேராளர்கள் அவரை எதிர்த்துத் தோல்வியுற்ற சிலாங்கூர் ஆட்சிக் குழு உறுப்பினர் மாண்புமிகு காந்தனுக்கு மத்திய செயற்குழு உறுப்பினர் பதவியை அதிகபட்ச வாக்குகள் மூலம் வழங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது. துணைத் தலைவர் பதவி காந்தன் அணியைச் சேர்ந்த திரு. வடிவேலுக்குக் கிடைத்திருக்கிறது.

இளைய சமுதாயத்தின் பிரதிநிதியாகவும் ம. இ. கா. அரசியலில் ஒரு புதுநட்சத்திரமாகவும் தோன்றியிருக்கும் இளைஞர் பண்டிதனை மத்திய செயற்குழுவுக்குப் பேராளர்கள் தேர்ந்தெடுத்திருப்பது அவர்களின் தொலைநோக்கையே காட்டுகிறது.

இரண்டு அணிகளும் வாக்களிப்பில் காணப்படுகிற "குறுகிய" இடைவெளியை மனத்தில் கொள்ளும் என்று நம்புகிறோம். அதிகம் பூரித்து போகவோ, மட்டு மீறி மனம் நொந்து போகவோ எந்த அணிக்கும் இடமில்லை.

இந்தப் பயங்கரச் சூறாவளியிலும் பொதுச் செயலாளராக ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் அதிசயமனிதர் பெட்டாலிங் ம.இ.கா. கிளையின் தலைவர் கோ. இராசரத்தினம் ஆவார். தேர்தல் கசப்புகளை மறந்து சிலாங்கூர் ம. இ. கா. கட்டுக்கோப்போடு இயங்குவதற்கும் மக்கள் எதிர்பார்க்கும் திறமான சேவைகளை ஆற்றுவதற்கும் திரு. இராசரத்தினம் இணைப்புப் பாலமாகத் திகழ்வார் என்று நம்புகிறோம்.

கடைசி மூச்சு! கடைசிப் பேச்சு!

கடந்த ஆண்டு இதே மே மாதம் 9ஆம் தேதி பிரதமர் துறையின் அமைச்சர்களில் ஒருவராக நியமனம் பெற்றதை முன்னிட்டுத் தமக்கு அளிக்கப்பட்ட விருந்தில் டத்தோ ஆதிநாகப்பன் பேசிக் கொண்டிருந்தார்.

"இந்தப் பாராட்டு விருந்தை ஏற்பாடு செய்த ம.இ.கா. தலைமையகத்திற்கும் அதன் தேசியத் தலைவர் டான்ஸ்ரீ மாணிக்கவாசகம் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன்.

என்னை கௌரவிப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட இவ் விருந்து மனப்பூர்வமானது. மகிழ்ச்சியோடு செய்யப்படுவதுமாகும். இதைக் கண்டு நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். என்னை முழு அமைச்சராக உயர்த்துவதற்குக் காலம் கனிய வேண்டியதிருந்தது. எக்காரியமும் காலம் கனியும் போது தான் பூர்த்திபெறும். தேசியத் தலைவர் டான்ஸ்ரீ மாணிக்கவாசகம் இதற்காக பெரு முயற்சி எடுத்துக் கொண்டார்கள். காரிய வெற்றி தரக் கூடிய எல்லா முயற்சிகளையும் அவர்கள் மிக ஆணித்தரமாக மேற் கொண்டார்கள். ஆனால் அடக்கமாகவே எல்லாம் நடைபெற்றன. என்னை முதன் முதலில் துணை அமைச்சராக நியமனம் செய்தவுடனேயே இது தற்காலிகமானதே. விரைவில் நீங்கள் முழு அமைச்சராவீர்கள் என டான்ஸ்ரீ என்னிடம் உறுதி கூறினர்கள். துன் ரசாக் அவர்கள் இதைக் கூறியதாகவும், என்னிடமும் தெரிவிக்கச் சொன்னதாகவும் கூறினர்கள். டான்ஸ்ரீ அவர்களின் விடா முயற்சிக்கு நான் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

என்னை முழு அமைச்சராக நியமனம் செய்த பிரதமர் டத்தோ உசேன் ஒன் அவர்களுக்கும் நான் நன்றி கூறுகின்றேன்.

என்னை முழு அமைச்சராக்க வேண்டும் என ம.இ.கா. மத்திய செயற்குழு தீர்மான மூலம் கேட்டுக் கொண்டது. பல அன்பர்கள் பத்திரிகைகளில் எழுதினர். பல நிறுவனங்களும் வேண்டுகோள் விடுத்தன. தமிழ் நேசன் தலையங்கம் தீட்டியது. இவர்கள் அனைவர்க்கும் எனது நன்றி.

நமது சமூகம் இரண்டு முழு அமைச்சர்கள் வேண்டும் எனக் கேட்டுக் கொண்டிருந்தது. அது நிறைவேறிவிட்டது.

கூட்டணியிலும் தேசிய முன்னணியிலும் நமது இந்திய சமூகம் என்றென்றும் முக்கியமான இடத்தை வகித்து வருகின்றது. இந்திய சமூகத்தின் ஒருமித்த பலம் தேசிய முன்னணியின் முக்கியமான பலம் என்று கூறுவது மிகையாகாது.

கடந்த தேர்தலில் தேசிய முன்னணி அபேட்சகர்கள் வெற்றிபெற்றதின் மூலம் சந்தேகத்திற்கிடமின்றி இந்திய சமூகத்தின் உறுதியை, ஒற்றுமையை, நாட்டிற்கு அது செலுத்தும் விசுவாசத்தை நிரூபித்தது.

இந்நாட்டின் மீது நமது இந்திய சமுதாயம் கொண்டுள்ள விசுவாசம் நாடாளுமன்றத்தில் கிடைத்துள்ள சில நாற்காலிகளைக் கொண்டோ அல்லது ஒரு சிலரைக் கொண்டோ நிர்ணயிக்க முடியாது. நன்றியோடும் விசுவாசத்தோடும் இருந்து வரும் இந்திய சமூகம் நாடாளுமன்றத்தின் எல்லா நாற்காலிகளுக்கும் தருகின்ற ஆதரவையும் ஒத்துழைப்பையும் கொண்டே அது நிர்ணயிக்கப்பட வேண்டும்.

இந்திய சமூகத்திற்கு இரண்டு அமைச்சர்களை வழங்கியிருப்பது திருப்தி யென்றாலும் இன்னும் நிறைய இந்திய சமூகம் அரசாங்கத்திடமிருந்து எதிர் பார்க்கிறது. நமது தலைவர் டான்ஸ்ரீ மாணிக்கவாசகம் அவர்கள் ஹில்டன் ஓட்டலில் நடைபெற்ற விருந்தில் பேசும்போது சில முக்கியமான கருத்துக்களை என்னிடம் கூறினர்கள். அவை இன்றும் என் மனதில் நிலைத்து நிற்கின்றன. அவை என்றும் நிலைத்து நிற்கும். நமக்கு உரிய இடத்தை வாங்கிக் கொடுத்து சிறப்பாகப் பணிகளைச் செய்து வருகின்ற நமது தலைவர் டான்ஸ்ரீ அவர்களுக்கு நாம் அனைவரும் நன்றி செலுத்தி ஆதரவு நல்க வேண்டும். டான்ஸ்ரீ அவர்களை முன் நிறுத்தி ம.இ.கா. கிளைகளும் அதன் தலைவர்களும் அர்ப்பண உணர்வோடு சமுதாயத்திற்கு சேவையாற்ற வேண்டும். காலம் என்ற ஒன்று இருக்கிறது.



சேவை செய்யாமல் வெறும் வாய்ப்பந்தல் போடுபவர்களை காலம் கண்டு கொள்ளும். அப்படி சேவை செய்யாதவர்கள் கீழே இறங்கத்தான் வேண்டும். ஒரு சேவையும் செய்யாதவர்கள் பலர் எப்படியோ மேலே ஏறிக் கொண்டு கீழே இறங்க மறுக்கின்றனர். சேவையும் செய்வதில்லை கீழேயும் இறங்குவதில்லை என்றால் அது தவறு. உரிய காலத்தில் தன்னைக் காட்டிலும் சேவை செய்யக் கூடியவர்களிருந்தால் அவர்களுக்கு விட்டுக் கொடுத்து இறங்க வேண்டும். இரண்டு மூன்று ஆண்டுகட்கு முன் இந்த அனுபவத்தை நாம் பெற்றோம். இந்த அனுபவ வ முறையை கீழ் மட்டத்திலிருந்து நாம் கடைப்பிடிக்க வேண்டும். நாம் அரசியலில் கட்டுப்பாட்டுடனும் கண்ணியத்துடனும் செயல்பட வேண்டும். பிரச்சினைகள் யாவும் சமரச வழியி

லேயே தீர்க்கப்பட வேண்டும். அரசியலில் சமரசம்தான் காரிய வெற்றிதரும். சமரசம் இல்லாத அரசியல் அரசியலல்ல. அரசியலில் தீர்க்க முடியாத பிரச்சினைகளும் இருக்க முடியாது.

டான்ஸ்ரீக்கும் எனக்குமுள்ள உறவு மிகவும் நெருக்கமானது. சுமுகமானது. அரசியல் வளர்ச்சியில் நாங்கள் இருவரும் மிக நெருக்கமாக இருந்து வளர்ந்துள்ளோம். என்றுமே நெருக்கமாக இருந்து அரசியல் பணி புரிவோம்.

டான்ஸ்ரீ கூறியது போல ம.இ.கா. அமைப்புக் கூட்டத்தில் நான் கலந்து கொண்டேன். என்னை ஒரு பாட்டுப் பாடச் சொன்னார்கள். நான் புரட்சிக் கவி பாரதியாரின் "விடுதலை! விடுதலை!!" எனும் பாடலைப் பாடினேன். நான் பாடிய பாடலையும் குரலையும் ஒரு பெண் ரசித்தது எனக்கு அப்போது தெரியாது. எனது குரலையும் ரசிக்க ஒரு பெண் இருப்பாளென்று நான் நம்பவில்லை. ஆனால் அதன் விளைவால் நான் விடுதலையை இழக்க வேண்டி வந்தது. எனவே அதன்பிறகு நான் விடுதலைப் பாட்டை பாடுவதில்லை. காரணம் எனக்கிருக்கும் கொஞ்ச நஞ்ச விடுதலையையும் இழந்து விடுவேன் என்கிற பயம்தான்.

இந்த நேரத்தில் திருமணத்தைப் பற்றிய அரேபிய நாட்டுப் பழமொழி ஒன்றை இங்கு கூற விரும்புகின்றேன். "திருமணம் என்பது ஒரு கோட்டையைப் போல. உள்ளே இருப்பவர்கள் வெளியேற விரும்புவர். வெளியே இருப்பவர் உள்ளே வரத் துடிப்பர்".

பெண்களுக்காகவும் ஒரு பழமொழி உண்டு. "தூரத்தில் இருக்கும் கணவனை நம்பாதே. கிட்டத்தில் இருக்கும் ஆடவனையும் நம்பாதே!" என்பது. எனவே எனது மனைவி என்னை தூரத்திலும் இருக்க விடுவதில்லை. கிட்டேயும் நெருங்க விடுவதில்லை.

நான் சட்டம் பயில லண்டன் சென்றேன். அங்கேயும் என் மனைவி என்னுடனேயே தொடர்ந்தாள். சட்டத் தேர்ச்சிப் பெற்று எனது காரியாலயத்தை திறவினேன். அங்கேயும் எனது மனைவி என்னைவிடவில்லை. காரியாலயத்தையும் என்னையும் காக்க அங்கு வந்து அமர்ந்து கொண்டாள்.

நான் சட்டத்துறை துணையமைச்சராக ஆன பிறகுகூட விடுதலைப் பாட்டை பாட நான் அச்சப்பட்டுக் கொண்டிருந்தேன். காரணம் விடுதலைப் பாட்டைப் பாடி எனது வாழ்க்கை முறை மாறியதையும் நான் விடுதலையை இழந்ததையும் நினைத்துத்தான்.

டத்தோ அவர்கள் யார் மனதும் புண்படும்படியாகப் பேசியது கிடையாது. அமைதியாக சம்பாஷணை செய்வார்கள். சில சமயங்களில் அடுத்த நிகழ்ச்சியை மறந்தும்கூட வந்தவர்களைத் திருப்திபடுத்த மணிக் கணக்கில் பேசிக் கொண்டிருக்கும் தன்மை படைத்தவர்கள்.

அவர்களது எண்ணங்கள் தீர்க்கமானவைகளாகவே இருக்கும். அவர்களது செயல்கள் சிறந்த முறையில் அமைந்திருக்கும். எந்த விஷயத்திலும் அவரது முடிவு உறுதியானதாக இருக்கும்.

ம.இ:கா.வைப் பொறுத்தவரை அவர் கொண்டுள்ள கருத்துக்கள் தியாக உணர்வோடு கூடியவைகளாகும். கட்சியின் நன்மைக்காகவும் சமுதாயத்தின் நன்மைக்காகவும் தன் மனதில் தோன்றுகின்ற கருத்துக்களை எவ்வித அச்சமுமின்றி வெளியிடுவார்கள். மற்றவர்களின் விருப்பு வெறுப்பிற்காக தமது கருத்தை மறைக்கும் சுபாவம் அவர்களிடமில்லை. மற்றவர்களின் தவறான எண்ணங்களைப் புறக்கணித்து தனது கருத்துக்களைக் கூறும் துணிவு மிக்கவர். தனது நிலையிலிருந்தும் உறுதியிலிருந்தும் எப்போதும் அவர் மாறுவதில்லை. எனக்கு மிகவும் உறுதுணையாகவும் விசுவாசமாகவும் இருந்து ஒத்துழைப்பை நல்கக் கூடியவர். டத்தோ அவர்களை ம.இ.கா.வின் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுத்துத் தந்த உறுப்பினர்களுக்கு இத்தருணத்தில் நான் நன்றி கூறிக் கொள்ள விரும்புகின்றேன்.

— 9-5-1976 பாராட்டு விருந்தில் தேசியத் தலைவர் டான்ஸ்ரீ ஆற்றிய புகழுரை.

ஆனால் முழு அமைச்சராக ஆன பிறகு ஓரளவு விடுதலை கிடைத்துள்ளது. நான் இப்போது முழுக்க முழுக்க அரசியல் பணியையும் அரசாங்க சேவையையும் செய்ய வேண்டியுள்ளது. எனது விடுதலையை இழக்கக் காரணமாயிருந்த எனது மனைவியும் வாணிபத் துறையில் இப்போது தீவிரமாக இறங்கிவிட்டார்கள்.

இழந்த விடுதலையை வாங்கித் தந்த ம.இ.கா.வை நான் என்றும் மறக்க முடியாது. அதற்கு நான் கடமைப்பட்டுள்ளேன். எனது முழுமையான சேவையை ம.இ.கா.விற்கும் அரசாங்கத்திற்கும் வழங்குமாறு பிணைக்கப்பட்டு விட்டேன்.

1958-ல் நான் வக்கில் தொழில் நடத்திக் கொண்டிருந்தபோது என்னை அப்போது உப தலைவராக இருந்த டான்ஸ்ரீக்கு எதிராக போட்டியிடுமாறு நண்பர்கள் கேட்டுக் கொண்டனர். அதற்கு நான் ஒப்பவில்லை: காரணம் டான்ஸ்ரீ அவர்கள் நிர்வாகத் திறமையும் என்னைவிட இளமையும் உள்ளவர். எனவே அவரே இப்பொறுப்பிற்குத் தகுதியானவர் எனக் காரணம் கூறினேன்.

அதே போன்று 1971-லும் துன் சம்பந்தன் அவர்களை எதிர்த்து என்னைப் போட்டியிடுமாறு கேட்டுக் கொண்டனர். ம.இ.கா.வின் .நன்மையைக் கருதி தலைமைத்துவத்தை மாற்ற வேண்டும் எனும் எண்ணம் வந்தது. 1971-ல் இந்த எண்ணம் உறுதி பெற்றது. அது செயலுருப் பெற ஆரம்பித்தது. இதற்கு முக்கியமாக நாலைந்து பேர் விதை போட்டதாகச் சொல்லலாம். சிலாங்கூர் மாநிலத்தைச் சேர்ந்த திருவாளர்கள்: ச. சாமிவேலு, டத்தோ மணியம், ஐ. குருதயாள் சிங் ஆகியோர் மிகவும்' வேகமாக இருந்தனர்.

இப்போது என்னை அவர்கள் கேட்டுக் கொண்டபோதும் துன் சம்பந்தனை எதிர்த்து போட்டியிடுமாறு டான்ஸ்ரீ அவர்களைக் கேட்டுக் கொள்ளலாம் என்று கூறினேன். என்னைப் போட்டியிடச் சொன்னவர்கள், இதற்கு டான்ஸ்ரீ ஒப்புக் கொள்வாரா? அவரும் துன் சம்பந்தன் அவர்களும் மிகவும் சுமுகமாக இருக்கிறார்களே என்பதைச் சுட்டிக்காட்டினார்கள். ஆனால் நான் கட்சியின் நன்மைக்காக டான்ஸ்ரீ அவர்கள் இதனை ஒப்புக்கொள்வார்கள். அவரிடம் நாம் சென்று அதனை எடுத்துக் கூறுவோம். அவர் ஒப்புக் கொள்ளவில்லையெனில் நான் போட்டியிடுகிறேன் என்று கூறினேன்.

உண்மையில் நான் துன் சம்பந்தனை எதிர்த்து போட்டியிட்டாலும் என்னால் ஜெயிக்க முடியாது என்பது எனக்கு நன்கு தெரியும். காரணம் கட்சியின் தலைவராக துன் சம்பந்தன் பல ஆண்டுகளாக இருந்துள்ளார். அமைச்சரவையிலும் மூத்த அமைச்சராக உள்ளார். எனவே அவருக்கு அரசியல் பலம், சமூக பலம் இரண்டும் உண்டு. ஆகவே துன் சம்பந்தனை எதிர்த்துப் போட்டியிட தகுதி வாய்ந்தவர் டான்ஸ்ரீ அவர்களே என்ற முடிவிற்கு வந்தேன். டான்ஸ்ரீ அவர்கள் முதலில் யோசிப்பதாகச் சொன்னார். அதிர்ஷ்டவசமாக சில

[தொடர்ச்சி 39-ம் பக்கம்]

பக்கத்தில் அன்று வந்த தினசரிப் பத்திரிகை கிடந்தது. காந்தம் முகத்தில் களையிழந்து துயரமே வடிவாக இருந்தாள். வீட்டில் அப்போது வேறு யாரும் இல்லை.

அவள் துயரத்திற்குக் காரணம், அன்று பத்திரிகையில் வந்த ஒரு விளம்பரமே. அந்த விளம்பரத்தை அவள் திரும்பத் திரும்பப் படித்தாள். படிக்கும்தோறும் அவளுக்குக் கண்ணீர் முட்டிக்கொண்டு வந்தது. அதனை அடக்க வழியறியாது திகைத்தாள்.

காந்தம் ஏழாவது வரையில் தமிழ் படித்தவள், ஒரு தமிழ்ப் பள்ளியில் ஆசிரியையாகப் பணியாற்றி வந்தாள். படிப்பு அவளிடம் அடக்கத்தை உண்டாக்கியிருந்தது. யாரிடமும் அதிகமாகப் பேசமாட்டாள். "தான் உண்டு தன் வேலை உண்டு" என்று இருப்பாள்


அண்டை அயல் வீட்டுக்காரர்கள் "காந்தமா? அவள் தங்கமாச்சே" என்று ஒரேமாதிரி சொல்வார்கள்.

இரண்டு ஆண்டுகளுக்குமுன் வேலாயுதத்தைக் காந்தம் மணந்தாள். இருவரும் இல்லற வாழ்வில் காதல் சிட்டுகளாக வாழ்ந்தனர். வேலாயுதமும் தமிழ்ப்பள்ளியிலேயே பணியாற்றினார். தமிழ்தான் அவர்களை இணைத்து வைத்தது. அவர்களின் அன்புக்கு அடையாள முத்திரையாக வேலாயுதத்தை வார்த்துவைத்த மாதிரி ஒரு ஆண் குழந்தை கல்யாணமான ஒரு வருஷத்திலேயே பிறந்தது.

இருவராக இருந்த குடும்பத்தில் குழந்தையின் வரவு புதுக் கலகலப்பை ஏற்படுத்தியது. காந்தமும் வேலாயுதமும் தங்கச்சிலை போன்றிருந்த கண்ணனை-அதுதான் அவர்கள் தங்கள் குழந்தைக்கு இட்ட பெயர்- ஒருவர் மாற்றி ஒருவர் தூக்கி வைத்துக்கொண்டு கொஞ்சிக் கொஞ்சி மகிழ்ந்தனர். அது அபூர்வ இன்பம்!

ஒரே கணவன்

முருகு சுப்பிரமணியன்



ஆனால் இதெல்லாம் பழைய கதை. இப்போது காந்தத்தின் வாழ்வில் தென்றல் மாறிப் "புயல்" வீசுகிறது குழந்தையும் அவளும் தாய் வீட்டிற்கு வந்து மூன்றுமாதத்திற்கு மேலாகிவிட்டது. திரும்பவும் அவர்கள் வேலாயுதம் வீட்டிற்குப் போகப் போவதில்லை. அவர்கள் கணவன்—மனைவி உறவு அவ்வளவுதான்.

அன்று பத்திரிகையில் வந்த விளம்பரம் அவர்கள் பந்தத்திற்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டது.

காந்தத்தின் உருவப்படத்துடன் வெளியாகி இருந்தது விளம்பரம். குழந்தையையும் தன்னையும் சரிவரப் பராமரிக்கத் தவறியதாலும் தாய் வீட்டிற்கு வந்தவளை மூன்று மாதமாகியும் திரும்ப அழைத்துச் செல்ல வராததாலும் இருவரிடையே உள்ள கணவன்-மனைவி உறவு அறுந்துவிட்டதென்று காந்தம் வேலாயுதத்திற்கு அறிவிப்புச் செய்திருந்தாள். அந்த விவாகரத்து விளம்பரமே பத்திரிகையில் பிரசுரமாகி இருந்தது.

காந்தம் மீண்டும் ஒரு முறை பத்திரிகையை எடுத்துப் பார்த்தாள். விளம்பரத்தைப் பார்த்தாள். தன் கணவர் என்ன நினைப்பார் என்று அவளால் யோசித்துப் பார்க்கவே முடியவில்லை. "நான் இனிமேல் அவருக்கு மனைவி இல்லையா? இது உண்மைதானா?" இரண்டு வருடகாலம் அவரும் நானும் மனமொன்றி வாழ்ந்ததெல்லாம் வெறும் மாயைதானா? என்று அவள் தனக்குத் தானே கேட்டுக்கொண்டாள்

தீராத கவலை உள்ளத்தைக் கவ்வ அவள் சிந்தனை பழைய நிகழ்ச்சிகளை நோக்கித் தாவியது.

அன்று குழந்தைக்குப் பெயர் வைக்கும் நாள். வேலாயுதம் வீடு ஒரே கோலாகலமாக இருந்தது. அறிந்தவர்கள் தெரிந்தவர்கள் யாவரையும் பாக்கிவிடாமல் அழைத்திருந்தார்கள் கணவனும் மனைவியும்.

வேலாயுதம் நண்பர்களை உபசரிப்பதில் மும்முரமாக இருந்தான். காந்தம் தன் செல்வனைச் சிங்காரிப்பதில் தன் திறமையெல்லாம் காட்டிக் கொண்டிருந்தாள்.

விருந்தினர்களுக்குச் சிற்றுண்டி வழங்கப்பட்டது. அதன்பின் பெயர் வைக்கும் சடங்கு நடைபெற ஆயத்தம் செய்தார்கள்.

குழந்தைக்குப் பெயரிடுவதற்காக வேலாயுதத்தின் உறவினரான பெரியவர் ஒருவர் வந்திருந்தார். ஆடவர்கள், பெண்கள், குழந்தைகள் எல்லோரும் அமர்ந்திருந்தனர். காந்தம் கண்ணனை அழைத்துக் கொண்டு வந்தாள். இயற்கைப் பொலிவோடு செயற்கைச் சிங்காரமும் சேர்ந்துவிடவே கண்ணனையே அனைவரும் கண்கொட்டாமல் பார்த்தனர். தாய்க்கு ஆனந்தம் தாங்க முடியவில்லை.

சபை நடுவே தாய் மடியில் கண்ணன் அமர்ந்தான் பெரியவர் ஒரு சிறு மாலையைக் குழந்தைக்கணிவித்துத் தம் முதுமை வாய் திறந்து "கண்ணு" என்று அழைத்தார் அவனைத் தூக்கி முத்தமிட்டு வாழ்த்தினார். கண்ணன் வாழ்க என்று விருந்தினர்கள் ஒரே குரலில் முழங்கினர். சின்னஞ்சிறு குழந்தைக்கு இந்தச் சடங்குகளெல்லாம் புரியவில்லை.

பெயரிடுவது முடிந்ததும் புகைப் படம் பிடித்தார்கள். அப்போது கண்ணன், தாயாரின் மடியில் உட்கார மறுத்துவிட்டான். அப்பாவின் மடியில் தான் இருப்பேனென்று அடம் பிடித்தான். அவன் விருப்பத்திற்கு மறு பேச்சேது? வேலாயுதம் பிள்ளையை வைத்துக் கொண்டான். கண்ணன் முகமெல்லாம் வெற்றிச் சிரிப்பு; போட்டோக்காரர் அந்த மகிழ்ச்சியை அப்படியே படம் பிடித்துவிட்டார்.

காந்தத்தின் சிந்தனை கலைந்தது. வீட்டில் தொங்கிக்கொண்டிருந்த கண்ணன் பெயரிடு விழாப் படத்தை ஒருமுறை எடுத்துப் பார்த்தாள். அவளுக்கு அழுகை அழுகையாக வந்தது.

உடனே காந்தத்திற்குத் தன் தாயார் மீது அடங்காத ஆத்திரம் பிறந்தது. இவ்வளவுக்கும் காரணம் அவள்தானே என்று மனத்தில் எண்ணினாள் அவள்.

காந்தம் லெட்சுமி அம்மாளுக்குப் பிறந்தவளல்ல; அவள் வளர்ப்புக் குழந்தை... லெட்சுமி அம்மாளுக்கு ஆரம்பத்திலிருந்தே வேலாயுதத்தை அடியோடு பிடிக்கவில்லை. காந்தம் அவனை மணம்புரிந்துகொள்வதற்கு அவள் அரைகுறையாகவே சம்மதித்தாள் கல்யாணமான பிறகும் வேலாயுதம்—காந்தம் குடும்ப வாழ்வைப் பொறுத்தவரையில் லட்சுமி அம்மாள் கண்டும் காணாதது போலவே நடந்து கொண்டு வந்தாள்.

லெட்சுமி அம்மாளின் தம்பி மகன் தங்கராசு இந்தியாவிலிருந்து சமீபத்தில்தான் வந்தான். அவனுக்குச் சொந்தமாக ஒரு ரப்பர் தோட்டம் இருந்தது ஊரிலும் அவர்கள் பணக்காரர்கள். காந்தத்தை அவனுக்குக் கட்டிக்கொடுத்துவிடவேண்டுமென்பதுதான் லெட்சுமி அம்மாளின் திட்டம். காந்தத்தின் பிடிவாதத்தால் முதலில் அது தகர்ந்து விட்டது. அது தவிர அப்போது தங்கராசு இந்தியாவில் இருந்ததாலும் ஒன்றும் செய்யமுடியவில்லை.

தங்கராசு மலாயா வந்ததும் லெட்சுமி அம்மாள் சிந்தனைக்கு வேலை கொடுத்தாள். அன்றாடம் காய்ச்சி வேலாயுதத்தைக் காந்தம் கட்டியழுவதில் என்ன பயனென்று யோசித்தாள். காந்தத்தை வேலாயுதத்திடமிருந்து பிரித்து தங்கராசுவுக்கு மறுமணம் செய்தாலென்ன என்று நினைத்தாள். காந்தம் ராசாத்திபோல வாழ்வாள். தனக்கும் வாழ்க்கை நிறையும் என்று மனக் கோட்டை கட்டினாள். அடபடி அவள் போட்ட திட்டம்தான் படிப்படியாக நிறைவேறி முடிவில் 'விவாகரத்து" விளம்பரமாகப் பத்திரிகையில் காட்சி அளித்தது.

தங்கராசுவுக்கும் காந்தத்திற்கும் விடிந்தால் திருமணம். லெட்சுமி அம்மாள் ஆடியோடிக் கல்யாண ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தாள். காந்தத்தை எடுத்து வளர்த்தபோது அவள் மனத்தில் உருவான கனவு நாளை நனவாகப் போகின்றது. அவள் மனம் கொண்டாட்டம் போட்டுக் கொண்டிருந்தது. இவ்வளவு பூரிப்பை அவள் முகத்தில் என்றுமே கண்டதில்லை.

லெட்சுமி அம்மாளின் மகிழ்ச்சிக்குக் காரணம் இருந்தது காந்தம் மகிழ என்ன வருகிறது! பணக்காரக் கணவனுக்கு வாழ்க்கைப் படப் போகிறாள்: பஞ்சை வாழ்வு தீரும்: சொகுசாகப் பங்களாவிலும் பூங்காவிலும் காரிலுமாகக் காலத்தைக் கழிக்கலாமே என்று அவளும் திருப்தியடைந்திருக்கலாம்.

லெட்சுமி அம்மாள் தினந்தினம் படித்த பாடம் அதுதான் ஆனால் அவள் நினைத்தபடி காந்தத்தின் மனம் கரைந்துவிடவில்லை. வேலாயுதத்தை அவ்வளவு எளிதாக அவளால் மறந்துவிட முடியவில்லை.

கல்யாணம் என்பது விருப்பம் போல் மாற்றிக்கொள்ளக் கூடிய உடையென்று நம்ப அவளால் முடியவில்லை. தங்கள் வாழ்க்கையில் ஐந்தாறு கணவன்மார்களை ஒருவர் பின் ஒருவராகக் கைப்பிடிக்கும் காரிகைகளை அவள் பார்த்துக் கொண்டுதானிருந்தாள். ஆனால் அவள் மனப் போக்கு வேறுவிதமாக இருந்தது.

வேலாயுதம் நல்லவன். மனைவியின் உள்ளமறிந்தவன். அவள் நோக்கத்திற்கு மாறாக அவன் நடந்ததேயில்லை. காந்தத்தின் மனம் புண்படும்படியாக இதுவரை அவன் ஒரு வார்த்தை கூடச் சொன்னதில்லை.

தூசி

"நீ தரைக்குத் திரும்புவாய், ஏனெனில் நீ அதிலிருந்தே எடுக்கப்பட்டாய். ஏனெனில் தூசியாகவே நீ இருக்கிறாய். தூசிக்கே நீ திரும்புவாய்" (ஆதியாகமம் 3: 19)

அதற்கு மாறாக அவள் சொல்லும் யோசனைகளை அட்டி சொல்லாமல் ஏற்பான். அப்படிப்பட்ட கணவனை மறந்து தாயின் வலுக்கட்டாயத்திற்காக வேறொரு ஆடவனைக் கைப் பிடிப்பதா? தாயின் சதிக்கு இரையாவதா? காந்தம் பெரிய சூறாவளியில் சிக்கித் தவித்தாள்.

தென்றல் அடித்ததுபோல் அப்போது அங்கே வந்தான் கண்ணன். அம்மாவின் முகவாட்டம் அவனுக்கே புரியவில்லை. பிள்ளையைக் கண்டதும் தன் கணவனின் அன்பு முகமும் காந்தத்தின் நினைவில் வட்டமிட்டது. குழந்தையை அணைத்தபடி அவள் கண்ணீர் சொரிந்தாள்.

தாயின் கண்ணீரைக் கண்டு கண்ணன் திகைத்தான். அவனுக்கு என்ன தோன்றியதோ? விறுவிறென்று தாயை விட்டு ஓடிப்போய் அங்கே கீழே கிடந்த புகைப் படத்தை எடுத்து வந்தான். "அம்மா அப்பா" என்று சொல்லிப் படத்தில் கையைக் காட்டி கூத்தாடினான். அது அவனுக்கு பெயரிட்டபோது எடுத்த படம்.

காந்தம் கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள். அவள் முகத்தில் ஒரு உறுதி பளிச்சிட்டது. கண்ணனைத் தூக்கி இடுப்பில் வைத்துக் கொண்டாள் "கண்ணே வாடா அப்பாவிடம் போவோம்" என்றாள். அவள் சொன்ன வார்த்தை அவனுக்கும் புரிந்தது போலும்! கண்ணன் முகத்தில் குறுநகை பிறந்தது.

நாளெல்லாம் வேலை செய்த களைப்பில் லெட்சுமி அம்மாள் உட்பட வீட்டில் எல்லோரும் தூங்கிக் கொண்டிருந்தனர். நேரம் நள்ளிரவை நெருங்கிக் கொண்டிருந்தது.

அத்தருணத்தில் தாயும் பிள்ளையும் வீட்டைவிட்டு வெளியேறினர்.

அவர்கள் இருவர் உள்ளத்திலும் அப்போது வேறு யாருமில்லை; வேலாயுதம் என்னும் ஒரே உருவம் தான் அங்கு கொலுவிற்றிருந்தது. அந்த உருவம் வாழும் திக்கை நோக்கி அவர்கள் நடந்தனர்.

தெருவெல்லாம் இருளின் ஆட்சி, எனினும் என்ன! அவர்கள் உள்ளத்தில் நேரிய அன்பு நிலவு ஒளி வீசியது. அந்த ஒளியின் துணை கொண்டு காந்தமும் கண்ணனும் நடந்தார்கள். கட்டுக்கோப்பான சமுதாயத்தின் லட்சியப் பயணம் அது!

(22 ஆண்டுகளுக்கு முன்பு— 30–10–1955— தமிழ் முரசில் வெளி வந்த கதை).

கையாலக்திடிமேளம்

ஸ்ரீ யோகேஸ்வரானந்த சுவாமிகள் திவ்ய சரிதம்

'ஆவன்னா'



அவதார சருக்கம்:

பரமேஸ்வராதிகளால் பரிபாலனம் செய்யப்பெற்றதும் சரித்திரப் பிரசித்தி வாய்ந்ததுமான மலாக்கா என்னும் திவ்ய க்ஷேத்திரத்திற்கு வடகிழக்குத் திசையில் ஒன்றரைக் கல் தொலைவில், கனிவிருக்ஷங்களால் சூழப்பட்ட புண்யஸ்தலமொன்றிலே, 'ஒட்டுக்கடை லோகு' என்று ஊர் ஜனங்களிடையே பிரக்யாதி பெற்றிருந்த உலகப்பருக்கும் அவரின் தர்மபத்தினியான மங்களாம்பிகைக்கும், அவர்கள் மும்மையில் செய்த தர்ம கைங்கர்யங்களின் பலனாக ஏக புதல்வராக மகான் ஒருவர் அவதரிக்கப் போகிறார் என்னும் செய்தியை ஈரேழு பதினான்கு லோகங்களுக்கும் பிரகடனம் செய்வான்வேண்டிக்ஷணத்திலே ஆகாயம் இருண்டு இடி இடிக்க, மின்னல் வெட்ட, சூறைக்காற்று சுழன்றடிக்க, மழை வர்ஷிக்க, விருக்ஷங்கள் புஷ்பமாரி பொழிய, பக்ஷியினங்கள் கூடுகளிலிருந்து கோஷிக்க, தெருநாய்கள் ஊளையிட, மாடுகளும் எருமைகளும் ஹுங்காரம் செய்ய, உண்மையான தத்துவார்த்தம் விளங்காத மூட ஜனங்கள் "இது என்ன பிரளயமோ" என்று நினைத்துக் கிலேசமுற்று வீடுகளுக்குள் முடங்கிக் கிடக்க, மார்கழி மாதப் பின்னிராப் பொழுதில் மூல நக்ஷத்திரத்தோடு கூடிய சுப வேளையில் ஸ்ரீ மௌன மௌட்டிய யோகீஸ்வரானந்த சுவாமிகள் திருஅவதாரம் செய்தருளினர்.

பால சருக்கம்:

சுப்பையா என்று நாமகரணம் செய்விக்கப்பட்ட சுவாமிகள், அன்னையார் வட்டித்த அன்ன பானாதிகளையும் அண்டை அயலிலுள்ள பிள்ளைகளின் கையிலிருந்த பக்ஷணங்களையும் குறைவற உண்டு நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து, அக்ஷராப்யாஸமும் ஏனைய வித்தியாப்யாஸங்களும் இகலோக பந்தபாசத்தைப் பெருக்குமே என மனஞ்சலித்து அவற்றை முற்றாக ஒதுக்கி, தம் பிராயத்தொத்த சிறார் பலர் புடைசூழத் தெருவலம் வந்து, பரம புருஷார்த்தம் அடையும் முகத்தான் யௌவனப் பருவம் எய்தினர்.

விவாஹ சருக்கம்:

முற்பிறப்பிலே 'கத்தாழைக் கண்ணியார்' என்ற திருநாமத்தோடும், அதற்கு முந்திய பிறப்பிலே 'இளங்கூழை நாச்சியார்' என்ற திவ்ய நாமத்தோடும், அதற்கும் முந்திய பல பிறப்புகளிலும் சுவாமிகளின் காதல் மனையாளாகத் திகழ்ந்து இனிதே இல்லறம் நடாத்தியவரும், இடியப்பம் விற்கும் முத்தம்மா என்ற முடக்கு வாதக் கிழவிக்கு இப்பிறப்பிலே பேர்த்தியாராகத் தோன்றியவரும், 'அரம்பையோ ஊர்வசியோ' என்று கண்டவர் மயங்கும் அதிசௌந்தர்ய ரூபவதியாயும் விளங்கிய 'காந்திமதியார்' என்ற மாதரசியை ஒரு சமயம் கிணற்றங்கரையிலே கண்டவுடன் சுவாமிகளுக்குப் பூர்வாசிரம நினைவுகள் ஸ்பஷ்டமாகவே, அவரை ஆட்கொண்டு கடைத்தேற்ற அவாவி, தம் எண்ணத்தைப் பிரஸ்தாபிக்க, அம்மாது சிரோமணியும் புளகாங்கிதமடைந்து ஒருப்பட, இருவரும் காதலறம் ஓம்பி வருங்காலையிலே, கற்புநெறி வழுவாத அம்மையார் மசக்கையால் பீடிக்கப்பட, விஷயமானது ஊர்முழுதும் பிரசித்தமாகிவிடவே, ஒரு சுப முகூர்த்தத்திலே இஷ்டஜன பந்து மித்திரர்கள் கூடி நிற்க, முப்பத்து முக்கோடி தேவர்களும், நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளும், கின்னரர், கிம்புருடர், கந்தர்வர் முதலிய பதினெண் கணங்களும் மங்கல ஒலியெழுப்பி மலர் மாரி பொழிய நடந்தேறிய பாணிக்கிரகண மகோற்சவத்திலே சுவாமிகள் காந்திமதியம்மையாரைக் கரம் பிடித்து அவரை உய்வித்தருளினர்.

மெய்ஞ்ஞானமுணர்ந்த சருக்கம்:

பெற்றவர்கள் ஒருவர்பின் ஒருவராகப் பரலோககதி அடையவே, ஒட்டுக்கடையைத் தொடர்ந்து நடத்தும் பெரும் பாரத்தையும் தாங்கிச் சுவாமிகள் இல்லறம் நடாத்தி வருங்காலையில், பொன்னையும் மண்ணையும் ஒன்றாக மதிக்கும் மகா சிரேஷ்டர்களாகிய முனிபுங்கவர்களின் தொடர்பு பூர்வாசிரமத்தில் இருந்தபடியாலே, நீரையும், பாலையும், கள்ளையும், எரிசாராயத்தையும் ஒன்றாகமதிக்கும் மனப்பக்குவத்தைப் பெற்று, சுயதேச - பரதேசப் பானாதிகளைக் கொண்டு தாகசாந்தி செய்து, எந்நேரமும் தம்மை மறந்து பரமானந்த வெள்ளத்திலே மூழ்கியிருக்க, புத்ர பாக்யமும்கடன்பாரமும் பெருகவே, மனம் கிலேசமுற்றுப் பல இரவுகள் நித்திரைகொள்ளாமல் ஆலோசித்து, முடிவில் ஓரிராப் போதிலே, 'உலகம் பொய், உற்றாரும் பொய், கடன் ஒன்றே மெய்' என்ற மகா உண்மை புலப்படவே ஞான ஸித்தியடைந்து, பத்தினியை எழுப்பி உபதேசம் செய்தருளி நடுநிசியில் அந்தர்த்யானமாயினர்.

எடுத்தாண்டுகொண்ட சருக்கம்:

தேச சஞ்சாரம் செய்ய வடதிசை நோக்கிப் புறப்பட்ட சுவாமிகள் பல ஸ்தலங்களைத் தரிசித்தும் தம் புண்ய கைங்கர்யத்துக்கு யாதொன்றும் பொருத்தமில்லாததை உணர்ந்து வியாகூலம் கொண்டு மேலும் யாத்திரை செய்து வருகையிலே, கோலாலம்பூர் என்னும் பெருநகரத்திற்குத் தெற்கே ஆறு கல் தொலைவில் இராஜபாட்டையின் ஓரத்திலே உயர்ந்து நின்றிருந்த ஒரு விருக்ஷத்தின் அடியில் ஓங்கி வளர்ந்திருந்த புற்றைக் கண்டு களிகூர்ந்து, புற்றீஸ்வரருக்குப் பூஜை புனஸ்காரங்கள் செய்து வருங்காலையிலே, புற்றிலே எழுந்தருளிய புற்றீஸ்வரரின் கீர்த்தியும் சுவாமிகளின் மகிமையும் ஜகத்பிரசித்தமாகவே, தரிசனத்திற்காகத் திரண்டு வந்த பக்தர்களின் காணிக்கையை ஏற்றுப் புற்றீஸ்வரப் பெருமானுக்குத் தகரம் வேய்ந்த திருக்கோவில் எழுப்பிப் பக்திமார்க்கத் திருப்பணியைத் தொடர்கையிலே, தத்துவ விசாரமும் ஹிதோபதேசமும் செய்தருளுமாறு மெய்யன்பர்கள் சமர்ப்பித்த விஞ்ஞாபனத்தை ஏற்று உபந்யாஸித்தால், பக்குவம் பெறாத அவர்கள் அர்த்தமாகாமல் சித்தம் குழம்புவார்களே என்றெண்ணி மௌன விரதம் மேற்கொண்டு யோகமார்க்கத்தில் ஈடுபட, வருஷங்கள் சில கழிய, பக்தகோடிகளின் எண்ணிக்கையும் உண்டியல் காணிக்கையும் பலமடங்கு பெருக, புற்றீஸ்வரப் பெருமான் ஒரு நாள் பிரஸன்னமாகிசுவாமிகளின் பக்திமார்க்கத்தையும் லோகோபகாரச் சிந்தையையும் மெச்சி, இல்லறத்திலேயே துறவறம் நாட்டுமாறு திருவாய் மலர்ந்தருளவே, இது விஷயம் பக்தர்களுக்குத் தெரியவந்தால் பக்திப் பெருக்கால் பிரியஇயலாதநிலை வருமேஎன்று மனமிரங்கி, எவருக்கும் தெரியாமல் நள்ளிரவிலே திருக்கோயிலை நீங்கி இல்லம் ஏகிக் குடும்பத்தாருடன் சேர்ந்து, ஏழேழு ஜன்மங்களுக்கும் போதுமான ஐசுவரியங்களோடு சகல சௌபாக்கியங்களும் அடையப்பெற்றுப் புனித வாழ்வு வாழ்ந்து வருவாராயினர். ■

அக்கினி வேலி

எத்தனை குளிரான குளிர்...? அதிகாலைப் பொழுதில் ரோமங்களெல்லாம் குத்திட்டு நிற்கும் இந்த மார்கழி மாதக் குளிர்கூட ஒரு இனிமைதானே......!

அவர் மெல்ல எழுந்து வாசலுக்கு வருகிறார். எதிர் வீட்டு வாசலில் அந்தப் பெண் அப்போதுதான் கோலத்தைப் போட்டு முடித்துவிட்டு, அதன் நடுவில் பூக்களை வைத்து அழகு பார்த்துக்கொண்டிருக்கிறாள். புள்ளிகளும் இழைகளுமாய் ஒரு பெரிய கல்யாணத்தேர் போல் அந்தக் கோலம் அமைந்திருக்கிறது.

அந்தக் கோலத்தின் நடுவே பெரிய பெரிய இதழ்களை விரித்துக்கொண்டு, மஞ்சள் பந்துகள் உருள்வதுபோல் அந்தப் பூசணிப் பூக்கள் எத்தனை லாவண்யமாய்ச் சிரிக்கின்றன...!

மார்கழி மாதத்தில் இந்தப் பூசணிப் பூக்களுக்குக்கூட ஒரு புதிய மதிப்பு வந்துவிடுமோ...? வரண்ட அந்த இதழ்களில் சிறு புன்னகையொன்று அரும்ப நினைத்து, வந்த சுவட்டிலேயே சுருங்கிக்கொள்கிறது!

மங்கலக்கோலங்கள் ஏதுமின்றி வெறிச்சிட்டுப் போய்க் கிடக்கும் தன் வீட்டு வாசலைப் பார்த்துவிட்டு, சாய்வு நாற்காலியோடு மௌனித்துப் போகிறார். அந்த வெறுமை வீட்டு வாசலில் மட்டும்தானா...?

தளர்ந்துகொண்டு வரும் நினைவு முடிச்சை இறுக்கப் பிரயாசைப்படுவதுபோல், முகத்தில் ஓர் இறுக்கம்... ஆனால், அது அவர் பிடிக்குள் அடங்காது நழுவுகிறதோ...! கரங்களை மடக்கி, தலைக்குப்பின்னால் கோத்துக்கொண்டு, நாற்காலியோடு சாய்ந்துகொள்ளும்போது, பக்கத்து அறையில் கட்டில் "கிறீச்"சிட்டு அடங்குகிறது.

அவர் அவளை—ஜானகியை நினைத்துக்கொள்கிறார். பொங்கும் பாலில் சுழன்றுவரும் நுரைகளைப் போல் அந்தப் பழைய நினைவுகள்...! சே, எத்தனை கசப்பானவை! கசப்பாய்க் கசக்கும் வேப்பம்பூக்களுக்கு நடுவே மாதுளை முத்துக்களாய் நெஞ்சில் தங்கிவிட்ட சின்னஞ்சிறு இனிமை...

ஆனால் சொட்டென்று நுனி நாக்கில் பட்ட இனிமை தொண்டைக்குள் போவதற்குள் கசந்தும் போகுமோ...!

ஓ, அப்படியொரு கசப்பு அவர்கள் வாழ்க்கையில் ஏன் படிந்தது...?

இருபது ஆண்டுகளுக்கு முன் ஜானகியோடு தொடங்கிய இல்லற வாழ்க்கையில் இந்தக் குடிப்பழக்கம் மட்டும் இல்லாதிருந்தால், எத்தனை நன்றாக இருந்திருக்கும்...? இரவு முழுவதும் இனிமேல் குடிக்கமாட்டேன், குடிக்கமாட்டேன் என்று அவளிடம் சத்தியம் செய்வதும், மறுநாள் அந்தச் சத்தியம் காற்றில் பறந்துபோக, தெருவெங்கும் புழுதியைப் போல் புரண்டுகொண்டு வருவதும்......சே!

ஜானகி, இயற்கையிலேயே சற்றுப் பிடிவாதக்காரி, கணவன், கொடுத்த வாக்கை நிறைவேற்ற முடியாதவன் என்று உணர்ந்தபோது, பல நாட்களாகவே உறங்கிக் கொண்டிருந்த வீம்பும், வெறுப்பும் மழையாகக் கொட்டத் தொடங்கி, வெள்ளப் பிரவாகமாகவும் ஓடத் தொடங்கியது...!

அன்று இரவும், செய்த தவற்றுக்காக மன்னிப்புக் கோரும் குழந்தையைப் போல், அவளின் நெருக்கத்தில் அந்த, நெருக்கத்தைக் கங்கையாக நினைத்து, அதில் மூழ்கித் திளைக்க அவன் வந்தபோது ..!

அவள் பட்டென்று அவன் கரத்தை உதறிவிடுகிறாள். காலில், ஒட்டிக்கொண்டு விட்ட அழுக்கை சட்டென்று கழுவிவிட நினைக்கும் ஒரு வேகம்.

"உங்க வாழ்நாளில் என்னைக்கி இந்த நரகத்தை நித்தியமாக உதறிவிட்டு வருவீங்களோ அன்னைக்குத்தான் உங்க கரத்திற்கு என்னைத் தீண்டும் உரிமை இருக்கிறது. அது வரைக்கும் நீங்க யாரோ- நான் யாரோதான்..."

தலை மீது யாரோ கொதிக்கக் கொதிக்க, சுடுநீரைக் கொட்டியதைப் போலவும்-ஏதோ ஒரு எதிர்பார்ப்புக்கு ஏங்கி நின்ற இதயத்தைப் பிடுங்கி, மண்ணில் விட்டெறிந்தது போலவும்...

ஓ, அவள்தான் எப்படிப் பேசிவிட்டாள்...? இப்படிக்கூட, அவளால் பேசமுடியுமோ...! அவன், உடல் விறைத்துக் கொள்வதுபோல் ஓர் உணர்வு! சில்லிட்டுப் போன உள்ளங் கைகளைத் தேய்த்துச் சூடாக்கிக் கொள்ளவேண்டும் போல், ஒரு நமைச்சல்...

கண்களுக்குப் பின்னால், நமநமத்து வரும் நீரைத் துடைக்கத் தூண்டும் உணர்ச்சி...

ஆனால், எதையும் செய்ய முடியாமல், அல்லது செய்யவிரும்பாமல், அப்படியே மரத்துப் போய் விட்டானே அவன்...!

நெருக்கமான அந்த இல்லறப் பிணைப்பில், அக்கினியால் இப்படியொரு அழுத்தமான வேலி போட்டுவிட எப்படி மனம் வந்தது அவளுக்கு...! ஆனால், அந்த அக்கினிக் குழம்பு அவன் நெஞ்சில் ஊழித்தீயாகப் பற்றிவிட்டதை அவள் அறிவாளோ...?



அன்றைக்குப் பார்த்ததுதான், அவள் முகத்தை..! ஒரே வீட்டில் வாழ்ந்தாலும் அவர்கள் இருவரும் இருவராகவேதான், இருந்தார்கள். தண்டிக்கப்பட்ட குற்றவாளியைப் போல், அவள் முகத்தைப் பார்க்கவே அவன் கூசுகிறான்.

இமை பிரிந்த அபஸ்வரமாக, அந்த வார்த்தைகள் இதயத்தில் வியாபித்திருக்கும் போது தாம்பத்திய வாழ்க்கையில் ஒட்டுறவு ஏது!

ஓட்டுக்குள் சுருங்கிக் கொண்ட நத்தையைப் போல் உள்ளத்து ஆசைகள்- கனவுகள்- மலர்ச்சிகள் எல்லாமே சுருங்கிக் கொண்டனவோ...!

இந்த உறவுக்கூட்டிலிருந்து வெளியாகி, வானத்துப் பறவையாகச் சிறகடித்துப் பறந்து கடல்களை -அலைத்தரங்களை- தீவுகளை எல்லாமே தாண்டி எங்காவது பெருக்கெடுத்து ஓடும், நதியோடு அப்படியே கலந்து நிர்மூலமாகிவிடமாட்டோமா என்ற பிரமையே வளர்ந்துகொண்டு போகிறது...

அன்று விட்ட, அந்தக் குடிப் பழக்கத்தோடு, எல்லாவற்றையும் விட்டு, மனதையும் துடைத்துக் கொண்டாயிற்று. அதை ஜானகி, புரிந்துகொண்டாளோ இல்லையோ -அன்று போட்ட அந்த அக்கினி வேலியை அவள் அகற்றவும் இல்லை. வேலியைத் தாண்டி இந்தப் பக்கம் வரவுமில்லை.

இந்த ஊமை நாடகம், வெளியே தெரியவராமல் அந்த இரண்டு உள்ளங்களுமே போராடிக்கொண்டிருந்தன. இந்தப் போராட்டத்திற்கு நடுவே, காலமும் ஓடிக் களைத்துவிட்டிருந்தது...

-அவரும் வேலையிலிருந்து ஓய்வு பெற்றுச் சாய்வு நாற்காலியோடு சாய்ந்து போகிறார்...

ஜானகி ததும்பிக் கொண்டிருந்த உள்ளத்து உணர்வுகளையெல்லாம் அர்த்தமற்றவைகளாக்கிவிட்டு- அர்த்தமற்றுப் போய்க் கொண்டிருக்கும் வாழ்க்கையோடு, அர்த்தமற்ற பிடிவாதத்தால் தானும் கரைந்து போய்க்கொண்டிருக்கிறாளோ...!

மெல்லிய சல்லாத் துணியாக ஊசலாடிக்கொண்டிருந்த திரை, இரும்புத்திரையாக விழுந்துவிட்ட அதிர்ச்சி - தான் போட்ட வேலி தன்னையே சுற்றி வளைத்துக்கொண்டு விட்ட ஏமாற்றம் எல்லாமே சேர்ந்து அவளை நிரந்தர நோயாளியாக்கிவிட்டிருந்தன.

எத்தனையோ முறை வேலியை உடைத்தெறிந்துவிட்டு, அவரோடு இணைந்துவிட நினைத்தபோதெல்லாம் பாழாய்ப்போன அந்த 'சுயமரியாதைத்'தனம் சண்டிமாடாகக் கிளம்பித் தடுத்துவிட்டது...!

ஏதோ ஒரு சக்தி - பேயைப் போல், அவர்கள் இருவர் மனதிலுமே, புகுந்து கொண்டது போலும்...

பக்கத்து அறையில், அவள் வேதனையால் வருந்தும் போதெல்லாம், கல்லுக்குள் கசியும் ஈரம் போல், அவர் மனதிலும், ஏதோ கசகசப்பதுபோல் தோன்றும் என்றாலும், அவள் கடைசியாகச் சொன்ன வார்த்தைகள் அடம் பிடிக்கும் குழந்தைகளைப்போல்எம்பிக்குதித்து ஆர்ப்பரிக்கையில் கசியும் அந்த ஈரம் அப்படியே காய்ந்துபோகும்.

ஆனால் இந்தப் பத்து நாட்களாக...

வேகமான நீரில் சுழன்றோடும் சிறு படகைப்போல் உள்ளுக்குள் ஒரு தத்தளிப்பு...!

ஜானகிக்கு உடம்புக்கு அதிகமாகிப்போய், இன்றோ நாளையோ, என்பதுபோல் உயிரின் ஊசலாட்டம் காற்றில் படபடக்கும் நூலிழை போல் - பிரக்ஞை தவறுவதும், மீளுவதுமாக அங்கே ஒரு மரணப் போராட்டம்...

"ஜானகி வாழ்ந்த காலம் பூரா நெறக்க நெறக்க வாழ்ந்துட்டா, ஆனா போற காலத்திலே எந்த ஏக்கத்தை நெஞ்சிலே வச்சிக்கிட்டு இப்படி துடிச்சிக்கிட்டு இருக்காளோ தெரியலையே, இப்படி சோறுதண்ணி இறங்காமே பேச்சும் அத்துப்போயி இத்தனை நாளா இழுத்துப்பறிச்சிக்கிட்டு...அடி ஜானகி, உம்மனசிலே என்ன ஏக்கத்தையடி சொமந்துக்கிட்டு இருக்கே...! புள்ளையில்லாத கொறையைத் தவிர உன் வாழ்க்கையிலே வேறென்னடி கொறையிருக்கு?! இப்படி துடிக்கிறதைப்பாத்தா எம்மனசே தாங்கலியேடி...."

தூரத்து அத்தைக்காரி ஒருத்தி துக்கம் தாளாது புலம்புவது அவர் காதுகளையும் தொட்டு விடத்தான் செய்கிறது...!

ஜானகிக்கு என்ன ஏக்கம்...?

பிள்ளையில்லையே என்ற ஏக்கமோ...!

அவருக்கு நன்றாக வாய்விட்டு "ஹோ" வென்று சத்தம் போட்டுச் சிரிக்கவேண்டும்போல் இருக்கிறது.

ஆனால், வீட்டைச்சுற்றி "கல்லென்று" கவிந்துபோய்க் கிடக்கும் மௌனப் பிரவாகத்தைக் கண்டு அச்சமுற்றது போல், அந்த உணர்வும் லேசாகக் கழன்று கொள்கிறதே...!

சிந்தனை மேடை

'கதிர்'

-அப்பாடா! எது நடக்க வேண்டும், நடக்கவேண்டும் என்று எதிர்பார்த்தோமோ அது இப்போது நடந்திருக்கிறது. அதற்காக ம.இ.கா.வின் இளைஞர் பகுதியைப் பாராட்டவேண்டும்.

எந்தெந்தப் பிரச்சினைகள் விவாதிக்கப்பட வேண்டும் என்று நம்சமூகம் எதிர்பார்த்ததோ அந்த அந்தப் பிரச்சினைகளை எல்லாம் விவாதித்திருப்பது மகிழ்ச்சியைத் தருகிறது.

தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகவிருக்கும் படங்களைப் பற்றி மிக நன்றாகப் பேசியிருக்கிறார்கள். பாவம், நாது படங்கள்! அவை பட்டபாடும், கதைகள் பட்டபாடும், பாடல்கள் பட்டபாடும் சொல்லி முடியாது. அதற்கும் விரைவில் ஒரு முடிவு ஏற்படும் என்று எதிர்பார்க்கலாம்.

தொலைக்காட்சியில் பாடும் நம் பாடகர்கள் ஆண் பெண் இருபாலரும் "இந்தியில் தான் பாடுவேன்!" என்று சத்தியப் பிரமாணம் எடுத்துக் கொண்டாற்போலப் பாடி ஆடுகிறார்கள்.

ஆர்.டி.எம். இசைக்குழுவுக்குத் தமிழ்ப் பாடல்களுக்கேற்ற இசையை வழங்கத் திறமை இல்லை என்றும், இந்திக்கு இசைக்க மட்டும் திறமை இருக்கிறதென்றும் தொனிக்கிறமாதிரி விடை சொல்லியிருக்கிறார்கள். மலேசிய வானொலியில் தமிழிசைக் கலைஞர்களைக் கொண்டு "சிவரஞ்சனி" இசைக்குழு ஒன்றை வைத்திருக்கிறார்கள். அதனைத் தாராளமாகப் பயன்படுத்தலாமே!

"ஆட முடியாதவள் கூடம் கோணல்" என்று சொன்னதுபோல காலம் முழுதும் கதை சொல்லிக் கொண்டிருக்கக் கூடாது.

இந்துசமயம் பற்றிக் குழுவினர் சமர்ப்பித்த கருத்துக்கள் வரவேற்கப்படவேண்டியவை மட்டுமல்ல, உடனடியாகக் கவனிக்கப்பட வேண்டியவையுங்கூட!

சிலாங்கூர் மாநில மணிமன்றப் பேரவையின் தலைவர் திரு. சை. பீர்முகமது கூறியிருப்பதுபோலத் தமிழ் அல்லது இந்து சமய இலக்கிய, புராணப் படைப்புக்களைத் தொலைக்காட்சியில் இடம்பெற வைப்பதால் "ஏதோ" நடந்துவிடும் என்கிற அச்சம் அர்த்தமற்றது.

அரசாங்கக் கொள்கைகளைச் செயற்படுத்தும் பூசாரிகளின் உடுக்கை அடி ஏறுக்குமாறாக இருப்பது வேடிக்கையாக மட்டுமல்ல, விநோதமாகவும் இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் அரசாங்கக் கொள்கைகளுக்கு எதிரான நடவடிக்கைகளாகவும் அது இருக்கிறது.

மலேசிய இந்தியர்களில் பெரும்பாலோரின் மொழியாகிய தமிழுக்குரிய இடத்தை வழங்குவதில் தயக்கம் அவசியமில்லை. மலேசிய இந்தியர்களில் பெரும்பான்மையோர் பேசும் மொழி இந்தியல்ல தமிழ்தான் என்பதை தகவல் துறைக்கு உணர்த்தியுள்ள குழுவினர்க்கு ஒரு "சபாஷ்" போடவேண்டும் சிறப்பாக, இந்த அறிக்கையின் நாயகரான குழுவின் செயலாளர் சகோதரர் திரு. மாசிலாமணி பாராட்டுக்குரியவர்.

வழங்கப்பட்ட அறிக்கையில் கண்டுள்ளபடி தமிழ் நிகழ்ச்சிகளில் தக்க மாற்றம் ஏற்படும் என்று எதிர்பார்க்கிறோம்.

அல்லது அந்தச் சிக்கலிலிருந்து அதை விடுவிப்பதா...?

கைநிறைய குண்டுமணிகளை அள்ளிச் சிதறவிட்டதுபோல் நெஞ்சில் குழப்பங்களின் சதிராட்டம்.

குற்றம் செய்த குழந்தையை அடித்துத் திருத்தும் தந்தையாகவோ — தவறிழைத்த மனைவியை மன்னிக்கும் கணவனாகவோ அல்ல... அல்ல ..

உறவுகளைசிருஷ்டித்துக்கொண்டு போருக்குப் புறப்பட மறுத்த அர்ஜுனனின் உள்ளப்போராட்டத்திற்காக - அதில் சாந்தி நிலவவேண்டும் என்பதற்காக- "கீதோபதேசம்" செய்த கண்ணனைப்போல்...

அவர் ஒரே எட்டில் அடுத்த அறைக்குள் நுழைந்துவிடுகிறார்... கட்டிலில் கிழிந்த நாராகக் கிடக்கும் அவள் முகத்தை உற்றுநோக்குகையில் "குப்"பென்று ஓர் உணர்வு மின்சாரம்போல்...! அவர் மனம் இரக்கத்தில் நனைகிறது. இருபது ஆண்டுகளுக்கு முன் பார்த்த அந்த ஜானகியா இவள்! அசட்டுத்தனமான வீம்பினால் தன்னையே அழித்துக்கொண்ட ஒரு பைத்தியக்காரியாக அங்கே அவள் படுத்திருக்கிறாளோ...?

"கல்நெஞ்சக்காரி, சாகப்போகும் நேரத்தில்கூட அந்த ஆத்மா அமைதியில்லாமல் துடிக்கிறதாமே. நன்றாகத் துடிக்கட்டுமே.........அவளுடைய சுயமரியாதையை காக்கப்பட வேண்டும் என்பதற்காக அக்கினி வேலி போட்டுக்கொண்டவளல்லவா அவள்...! அந்த நெருப்பிலேயே வெந்து சாம்பலாகட்டும்......அவள், சொன்னதுபோல் அவள் யாரோ நான் யாரோதான்...!

அவருள் ஒரு அலட்சிய பாவம்...! உறங்க மறுக்கும், இமைகளை பலவந்தப்படுத்தி வெறுமனே மூடிக்கொள்கிறார். உள்ளுக்குள் ஜனித்துக் கொண்டு வரும் பந்தங்களைக்கூட, அவரால் உறங்க வைக்க முடியுமோ...!

எங்கோ. ஒரு சாமக்கோழி கூவி ஓய்கிறது. பக்கத்து அறையில், மரணவேதனையால் அவள் எழுப்பும் துன்பக்குரல் ஈனஸ்வரமாக ஆனால், நெஞ்சில் ஓங்கியடிப்பதுபோல் விழுகிறது.

கூண்டுக்குள் சிக்கிக்கொண்ட பறவை அதைவிட்டுப் பறக்கத் துடிக்குமே, அப்படியொரு ஓலம் அந்தக்குரலில். அவர் அப்படியே பிரமித்துப்போகிறார்...

அந்தப் பறவையை அப்படியே துடிக்கத் துடிக்க விடுவதா


சடாரென விரியும் ஊதாப்பூக்களாக ஒரு மென்மை உணர்வு! மெதுவாக அவள் தலையைத் தூக்கி மடிமீது சாய்த்துக்கொண்டு கேசங்களைப் பரிவுடன் கோதிவிடும்போது இத்தனை நாள் கள்ளிப் புதர்களாக மண்டிகிடந்த கோபங்களும் வெறுப்புக்களும் பஞ்சைப்போல் பறந்து... அன்பும் கருணையும் அங்கே பூத்து மணக்கின்றனவோ...!


அந்த அன்பு - அந்த நெருக்கம், அந்த ஸ்பரிசம், பிரக்ஞையற்றுப் போயிருந்த அவள் உணர்வுக்கு எப்போதோ உணர்ந்த இனிமையாக அல்லது இத்தனைநாள் நோற்றுவந்த நோன்புக்கு ஒரு வரமாகப் பட்டிருக்குமோ...! ஜானகியின் ஒளி மங்கிய விழிகளில் ஒரு நிழலாட்டம். ஓ... அந்த விழிகளில்தான் எத்தனை தீபங்களின் சுடர்கள்? அண்ணாந்த வாக்கில் அவர் விழியோடு சங்கமமாகும் அந்தக் கண்கள் அப்படி நிலைத்துப்போகின்றன...

எதிர்விட்டு வாசலில் தேராகப் படர்ந்திருந்த கோலத்தின் மீது இப்போது அந்தப் பூசணிப் பூக்கள் வாடிச்சுருண்டுபோய்கிடக்கின்றன.

மார்கழி மாத கோலத்திற்குத் தவிர மற்ற எதற்குமே பயன் படாத பூசணிப்பூக்கள்... இவர்கள் இருவருமே அதைப்போல்தானே! ●

ரிப்பன் பிஸ்கெட்





தேவையான சாமான்கள்.

பிளாண்டா - 12 அவுன்ஸ்
கோதுமை மாவு - 1 கட்டி
உப்பு - சிறிதளவு
தேங்காய் - 1
தேங்காயெண்ணெய் -1 போத்தல்

செய்யும்முறை

தேங்காயைத் துருவி முதல் இரண்டாவது பாலை இரண்டு கோப்பை அளவு எடுத்துக் கொள்ளவும். கோதுமை மாவைச் சலித்து தேவைக்கேற்ற உப்பிட்டு பிளாண்டாமுழுவதையும் போட்டுப்பிசையவும். பிறகு முதல் பாலை விட்டு மீண்டும் மாவைப் பிசைந்து கொள்ள வேண்டும். மாவு இறுக்கமாக இருந்தால் இரண்டாவது பாலை உபயோகப்படுத்தலாம். இல்லாவிட்டால் தேவையில்லை.

பிஸ்கட் மாவுபோல் பிசைந்த பின்னர் சிறிது சிறிதாகத் தட்டி உருட்டி நீளவாக்கில் வெட்டிக்கொள்ளவும். (படம் 1) பின்னர் வெட்டப்பட்ட துண்டின் நடுவில் கத்தியால் ஒரு சிறு கீறல் போட வேண்டும் [படம் 2] கீறலின் வழி ஒரு தலைப்பை நுழைத்து மெல்ல படம் மூன்றில் உள்ளது போல் இழுத்தால் ரிப்பன் பிஸ்கட் உருவாகும்.

(படம்4) எல்லா மாவையும் இவ்வாறு செய்து முடித்த பின்னர் பொன்னிறமாகப் பொரித்தெடுக்கவும். பாகில் போட்டுவைத்துக் கொள்ள விருப்பம் இருந்தாலும் அதுபோல் செய்யலாம்.

—கௌரி

புதிய சமுதாயத்தில் இடம்பெறும் கதை, கட்டுரை, கவிதைகளில் வரும் பெயர்களும் சம்பவங்களும் கற்பனையே.



பாலு: என் காலுக்கு சிகிச்சை அளித்த டாக்டர் ஆறு மாதத்திற்குள் என்னால் நன்றாக நடக்க முடியும் என்று உறுதிகூறினர்!

கோபு: டாக்டர் கூறியபடி நடந்ததா?

பாலு: இதுவரை மூன்று பில் டாக்டர் அனுப்பி விட்டார். அதைக் கட்டுவதற்குப் பணம் இல்லாமல் என் காரை விற்றுவிட்டு இப்பொழுது நடந்து கொண்டிருக்கிறேன்.

மலேசியமொழித் தேர்வில் வெற்றி பெற....(2)

சுருக்கி எழுதுக!

வெ. ஆறுமுகம்

எஸ். பி. எம்./எம். சி. இ. மலேசியமொழி வினாத்தாள் இரு பிரிவுகளாக அமைந்திருக்கும். முதல்தாள், கட்டுரைத் தலைப்புகளைக் கொண்டது; இரண்டாவது தாள், வெவ்வேறு வகையிலான ஐந்து வினாக்களைக் கொண்டது.

இரண்டாவது தாளிலுள்ள ஐந்து கேள்விகளுள் முதலாவது கட்டாயமான கேள்வியாகும்; நீங்கள் விடையெழுதியே ஆகவேண்டும். எழுதாமல் விடுவீர்களாயின், அதற்குரிய நாற்பது மதிப்பெண்களையும் முழுமையாக இழந்துவிடுவீர்கள்.

தரப்படும் கட்டுரையையோ கட்டுரையின் பகுதியையோ சுருக்கி எழுதவேண்டிய இந்த முதற்கேள்வி கட்டாயமான கேள்வியாதலால், சுருக்கி எழுதுவதன் முக்கியத்துவத்தை நீங்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்; உணர்ந்துகொண்டு நன்கு பயிற்சிபெற வேண்டும்.

சுருக்கி எழுதுவதற்கென்று தரப்படும் கட்டுரை, ஏறத்தாழ முந்நூறு சொற்களைக் கொண்டிருக்கும். அதை நீங்கள் நூறு சொற்களுக்குள் சுருக்கி எழுத வேண்டும்.

பொருளைப் புரிந்து கொள்க!

தேர்வில் வினாத்தாள் கிடைத்தவுடன், சுருக்கப்படவேண்டிய கட்டுரையை ஒருமுறை படியுங்கள். படிக்கும்போதே விளங்காத சொற்களின்கீழ் கோடிட்டுக்கொள்ளுங்கள். முதன்முறை படித்தவுடன் கட்டுரையின் பொருள் உங்களுக்கு ஏறத்தாழ விளங்கிவிடும். வாக்கியங்களின்வழி, விளங்காத சொற்களின் பொருளையும் யூகித்துக்கொள்ள வேண்டும்.

மீண்டும் ஒரு முறை படித்து, கட்டுரையின் பொருளையும், பொருள் குறித்த விளக்கத்தையும் பிரித்தறிந்து கொள்ளவேண்டும். இது மிக முக்கியம். சுருக்கி எழுதும்போது கட்டுரையின் பொருளை மட்டுமே நீங்கள் எழுதவேண்டும்; விளக்கத்தைப் பெரும்பாலும் விட்டுவிட வேண்டும். அவசியம் என்று நீங்கள் கருதும் விளக்கத்தை மட்டும் ஓரிரு இடங்களில் எழுதலாம்.

வெற்றுத்தாளில் மேலிருந்து கீழாக ஐந்து கோடுகளைக் கிழித்து, தாளை ஐந்து பிரிவுகளாக்கிக்கொள்ள வேண்டும். இப்படிப் பிரிக்கப்பட்ட தாளில் எழுதுவீர்களாயின் எத்தனை சொற்கள் எழுதியாயிற்று என்று அடிக்கடி எண்ணிப்பார்க்க எளிதாக இருக்கும்; நேரம் வீணாகாது. நான்காவது வரி முடிந்தால் 20சொற்கள், பத்தாவது வரி முடிந்தால் 50சொற்கள் என்று வரிசையாகக் கணக்கிட்டுக் கொள்ளலாம்.

இரண்டு விதிகள்

சுருக்கி எழுதத் துவங்குமுன் இரண்டு விதிகளை நீங்கள் மனத்திற் கொள்ள வேண்டும். இயன்றவரை சொந்தச் சொற்களைப் பயன்படுத்துதல் ஒன்று; கட்டுரையின் பொருளும் அமைப்பு முறையும் மாறிவிடாமல் பாதுகாத்தல் (memelihara susunan dan maksud asalnya) மற்றொன்று. இவ்விதிகளை விருப்பம்போல் மீறுவீர்களாயின் மதிப்பெண்கள் குறைக்கப்படும். எக்காரணத்தை முன்னிட்டும், உங்களின் சொந்தக் கருத்துக்களை நுழைக்காதீர்கள்.

கோடிடப்பட்டுத் தயாராக உள்ள தாளில் இயன்றவரை சுருக்கமாக, விரைவாக, கவனமாக எழுதி முடித்துவிடுங்கள். முடித்ததும் மறவாமல் எண்ணிப்பார்க்கவேண்டும். நூறு சொற்களுக்கு மேல் இருக்குமாயின், எழுதியதைப் படித்துத் தேவையற்ற சொற்களை நீக்கிவிடவேண்டும். நூறு சொற்களுக்கும் குறைவாக இருக்குமாயின் சில சொற்களைச் சேர்த்து எண்ணிக்கையைக் கூட்டவேண்டும்.

'நூறு சொற்களுக்கு மேற் போகாமல் இருக்கவேண்டும்" (tidak lebih daripada '100 patah perkataan) என்று வினாத்தாளில் குறிக்கப்பட்டிருந்தால் கண்டிப்பாக நூறு சொற்களைத் தாண்டக்கூடாது. நூறு சொற்களுக்குக் குறையலாம்; ஆனால் ஒரேயடியாக 70, 80 சொற்களில் எழுதிவிடாதீர்கள். 90 சொற்களுக்கு மேல் இருக்கவேண்டியது அவசியம். ஆனாலும் தேவையில்லாமல் வம்பை ஏன் விலைக்கு வாங்கிக் கட்டிக் கொள்ளவேண்டும்? 97, 98, 99, 100 சொற்களில் எழுவதே பாதுகாப்பானது.

வால் எதற்கு!

'ஏறத்தாழ நூறு சொற்களில்' (lebih kurang 100 patah perkataan) என்றிருந்தால் 95 முதல் 105 சொற்கள் வரை எழுதலாம். எனவே, எழுதத் துவங்குவதற்கு முன்னர் கேள்வியையும், அதற்கான விளக்கத்தையும் ஒருமுறைக்கு இருமுறை படித்துப் புரிந்துகொள்ள வேண்டியது அவசியம். கேட்டது ஒன்று, நீங்கள் எழுதியது ஒன்று என்று ஆகுமானால் மதிப்பெண்கள் கிடைக்குமா? தும்பை விட்டுவிட்டு வாலைப் பிடிக்காதீர்கள்! கவனம்!

கூட்டிக் குறைத்துச் சரி செய்த விடையை, வேறொரு தாளில் அழகாக எழுதிவிடுங்கள்; 40மதிப்பெண்களில் ஒரு கணிசமான பகுதி கிடைக்கும் என்னும் நம்பிக்கையோடு அடுத்த கேள்வியைச் செய்யத் துவங்கலாம்.

ஏழு செய்திகள்

சுருக்கி எழுதுவது தொடர்பாக இன்னும் சில பொடிச் செய்திகளை நீங்கள் தெரிந்துகொள்ளவேண்டும். பொடிச் செய்திகள்தாமே என்று அலட்சியப்படுத்திவிடாதீர்கள்! மதிப்பெண்களைப் பாதிக்கும் அளவுக்கு இவை முக்கியத்துவம் வாய்ந்தவை.

அ. தரப்படும் கட்டுரையில் எத்தனை பத்திகள் இருந்தாலும், நீங்கள் அவற்றையெல்லாம் சேர்த்துச் சுருக்கி ஒரே பத்தியாக எழுத வேண்டும். பத்தி பிரிக்காதீர்கள். நூறு சொற்களையும் ஒரே பத்தியாக எழுதிவிடுங்கள்.

ஆ. வாக்கியங்கள் தெளிவான முறையில் பொருள் தருவனவாக இருக்கவேண்டும். சுற்றி வளைத்து எழுதாதீர்கள்.

இ. ஒவ்வொரு வாக்கியத்திற்கும் தொடர்பு இருக்க வேண்டும். தொடர்பின்றி, தனித்தனியான பொருள் கொண்ட வாக்கியங்களாக அமைத்தல் ஆகாது. எல்லா வாக்கியங்களும் சேர்ந்து, முழுமையான ஒரு சிறு கட்டுரையாகத் தோற்றம் தரவேண்டும்.

ஈ. தரப்படும் கட்டுரையில் நேர்கூற்றுகள் (Cakap Ajuk.) இருந்தால் அவற்றை அப்படியே எழுதிவிடாதீர்கள். சுருக்கி எழுதும்போது எல்லாமே அயற்கூற்றாகத்தான் (Cakap Pindah) இருக்க வேண்டும்.

உ. இந்தக் கேள்விக்கு மட்டுமன்றி எந்தக் கேள்விக்குமே எழுத்துப் பிழைகளும், இலக்கணப் பிழைகளும் ஆகா, இவற்றை முற்றாக விலக்கிவிடுங்கள்.

ஊ. நீங்கள் எழுதிய சொற்களின் எண்ணிக்கையை விடையின் கீழ் மறவாது குறிப்பிடுங்கள்.

எ. எத்தனை நிமிடங்களில் எழுதி முடிக்கவேண்டும் என்று முன்கூட்டியே திட்டமிட்டுக் கொண்டு, குறிப்பிட்ட நேரத்தில் முடித்துவிடுங்கள்.

போதுமான அளவு பயிற்சி பெற்றிருந்தால், சுருக்கி எழுதுவது உங்களுக்கு மிக எளிதாகிவிடும். பயிற்சி இல்லையெனில் அதுவே மிகக் கடுமையான ஒரு சோதனையாகிவிடும்.

தரப்படும் பகுதியை மூன்றிலொரு பாகமாகச் சுருக்குவதே சுருக்கி எழுதுவதன் அடிப்படையாகும். கண்ணில் படும் கட்டுரைகளையெல்லாம் எடுத்து வைத்துக் கொண்டு, சுருக்கி எழுதிப் பயிலுங்கள்.

எல்லாம் சரி, எப்போது பயிற்சியைத் துவங்குவதாக எண்ணம்? நாள் நட்சத்திரம் பார்த்துக் கொண்டு நாட்களைக் கழிக்காதீர்கள்; இன்றே, இப்போதே துவங்குங்கள்! வெற்றி நிச்சயம்! ■



1. பொன்மாலைப் பொழுது

பொன் அந்தி மாலைப்பொழுதின் எழில் கொஞ்சும் கோலங்கள்! காணுகின்ற காட்சிகளிலெல்லாம் இனிமை! கண்டு ரசிக்கும் இளம் உள்ளங்களில் இன்ப மயக்கம்.

இயற்கையின் இளமை கொஞ்சும் எழில் எங்கும் நிறைந்து வழிந்தது. மாலையும் இரவும் சந்திக்கப் போகும் இனிய நேரம் நெருங்கிக் கொண்டு வந்தது. புதுமணப்பெண்ணின் முகம்போல் மஞ்சள் வானில் செம்மை படர்ந்து வந்துகொண்டிருந்தது!

இளம் உள்ளங்களில் இன்னிசை மீட்டி இனிமை கூட்டும் அந்திப் பொழுதல்லவா?

இயற்கையின் சூழலில் இளமையின் சுகங்காணப் பருவ நெஞ்சங்கள் பரபரத்தன.

ஜோடிப் புறக்கள் மரக்கிளைகளை நோக்கிப் பறந்தன!

காதல் பறவைகளோ ஸ்கூட்டர்களிலும், கார்களிலும் பறந்தன! இரை தேடிச் சென்ற பறவைகள் கொஞ்சி மகிழ்ந்திடக் கூட்டுக்குள் அடைந்துகொள்ளத் தொடங்கும் அந்த மாலை நேரம்!

தனிமையை நாடி வீட்டைவிட்டு வெளியேறி இளங்காதலர்கள் இன்பச் சிறகடித்துப் பறக்க விழையும் அந்த மாலைப்பொழுது!

லல்லி பரபரப்படைந்தாள்!

சே! இந்த அருமையான அந்திப் பொழுதை அறைக்குள்ளேயா கழிப்பது? கையிலிருந்த பெரிய புத்தகத்தைப் பட்டென்று மூடினாள்! மேசையின்மீது தூக்கிப்போட்டு விட்டு விருட்டென எழுந்தாள்!

இடுப்புக்குமேல் சுருண்டுகிடந்த குர்தாவைப் பட்டென்று இழுத்து விட்டாள்! பிரஷினால் தலைமுடியை இரண்டுமுறை இழுத்து வாரிவிட்டாள்!

அவ்வளவுதான்! அலங்காரம் முடிந்துவிட்டது!

"ஜிவ்"வென்று பறந்து செல்லும் சிட்டுக்குருவியைப் போல்தான் அவளும்! இதோ கிளம்பி விட்டாள்!

"ஷாம்பு" போட்டு அலசிய கருங்கூந்தல் பளபளவென்று மின்னி இளங்காற்றில் மென்மையாகப் பறந்து அலைந்தது! ஆனால் கலைந்து விடவில்லை! முதுகில் அரைவட்டம் போட்டு அழகு நடம் புரிந்தது!

நல்ல அடர்த்தியான முடி! அளவாக வெட்டிவிடப்பட்டு நேர்த்தியாக நாசூக்காகக் காட்சியளித்தது!

"சீஸ்" துணியில் தைக்கப்பட்டிருந்த அந்தக் குர்தா "டீன் ஏஜ்" உடலின் அங்கங்களை அளந்து காட்டிற்று.

"லாங் பேண்ட்ஸ்" போட்டுக் கொள்வதுதான் அவளுக்கும் பிடிக்கும்! அவளது துள்ளல் நடைக்கும், துருதுருவென்ற செயலுக்கும் அது தான் வசதியாக இருக்கும்!

நவீன உடைகள்! புதிய பாணி! இவற்றை விரும்பி அணியும் இள மங்கைதான் அவளும்!

என்றாலும் அதை ஆடம்பரமின்றி எளிமையாக, இதமாக அணிந்துகொள்ளும் சுபாவம் கொண்டவள்! அதுவே அவளுக்கு நல்ல கவர்ச்சியான தோற்றத்தைக் கொடுத்தது என்றுதான் சொல்ல வேண்டும்!

சுஜாதாவைப் போல "மினி டிரஸ்" போட்டுக்கொண்டு நளினமாக நெளியவும் அவளால் முடியாது!

அது மட்டுமா?

காற்றில் பறந்து விடாமல் கண்காணித்துக் கொள்ளவேண்டும்! ஒரு லாவகமாகக் குனிய, உட்கார, ஒய்யாரமாக நடை நடப்பது என்பதெல்லாம் அவளுக்குச் சரிப்படாது!

அது சுஜாதாவுக்கு இயல்பாகவே கைவந்த கலையாயிற்றே! அவளைப்போன்ற பூஞ்சை உடல் கொண்ட அலங்காரப் பதுமைகளுக்கே அது பொருத்தமாகவும் இருக்கும்!

குர்தாவை மாட்டிக்கொண்டு ஜீன்ஸ், பெல்பாட்டம் போன்றவற்றில் குதியாட்டம் போடும் லல்லிக்கு அதெல்லாம் சரிப்பட்டு வருமா?

"ஹை ஹில்ஸ்" கூடப் போட விரும்பாத புதுமையான "நவ நாகரிக நங்கை" என்றுதான் அவளைப்பற்றி விவரிக்கவேண்டும்!

"ஏய் லல்லி! கொஞ்சம் மெதுவாய்த்தான் போயேண்டி!" என்று சிணுங்கிக் கொண்டு வந்த சுஜாதாவின் குரல் காதில் நுழையுமுன் லல்லி, சரோவின் வீட்டுக்குள்ளேயே நுழைந்து விட்டாள்.

பாதத்துக்குக் கீழே ஐந்து அங்குல நீளம் தொங்கும்படி அளவு பார்த்துத் தைத்துக் கொண்ட மெக்ஸியை நாசூக்காக விரல் நுனியால் தூக்கிப் பிடித்துக் கொண்டு குதிகால்களை உயர்த்தியபடி விரல் நுனியால் நடைபோட்டுக் கொண்டிருந்த சரோவைப் பார்க்க அவளுக்கு வேடிக்கையாக இருந்தது! "ஏய், எதுக்குடி இப்படி அவஸ்தைப் படுறே......? என்ன தேடுறே?"

"என்னோட ஹைஹில்ஸுக்கு அளவுபார்த்துத் தச்சது...... அதைப் போட்டால்தான் சரியாயிருக்கும்..."

சரோ அங்குமிங்கும் தேடிக் கொண்டே அலைந்தாள்! "போட்டுக் கொள்ளேன்! அதுக்கு ஏன் இப்படி டான்ஸ் ஆடுறே......"

"அதைத்தானே இப்போ தேடிக்கிட்டு இருக்கேன்......"

"அது இல்லாட்டி என்னவாம்? நீ தான் ஒரு குட்டிக்கடையே வீட்டிலே வெச்சிருப்பியே! ஏதாவது "ஹைட்" சரியா இருக்கா என்று பாரேன்!"

"ஹைட் இருக்கும்! கலர் மாட்ச் பண்ணாதே..."

"சே! என்னடி நீ... சுத்த நியூசென்ஸா இருக்கிறே... அந்த மெக்ஸியை மாற்றித் தொலையேன்...!"

லல்லிக்கு எரிச்சலாக இருந்தது!

"ஆங்" என்று சுள்கொட்டினாள் சரோ!

"ஏன் இன்னைக்குப் பச்சை மெக்ஸியோடு வருவேன் என்று உன் "பென்பால்ஸ்" யாருக்காவது பிராமிஸ் கொடுத்துத் தொலைச்சிட்டியா...?"

லல்லியின் குரலில் வெடித்த கேலியைப் புரிந்துகொண்டு "ஓ" வென்று சிரித்தாள் சுஜாதா!

"போடி! நீ எப்பவும் இப்படித் தான்! இப்போ டிரஸ் மாத்தினல் பச்சை ரிபன், பச்சை மணிபர்ஸ்! வாட்ச், இயரிங்... எத்தனை மாத்தி யாக வேணும்! நீ என்னமோ சிம் பிளா சொல்லிட்டியே...?"

சரீனு வரிசையாக அடுக்கிக் கொண்டே போவதைக் கேட்டதும் லல்லியால் தாங்கமுடியவில்லை!

"அப்போ நீ அதையெல்லாம் மாற்றிக்கொண்டுவா! அதற்குள் நாளைக்குச் சாயந்திரம் வருவதற்குச் சரியாக இருக்கும்! ஏய் சுஜா... நீயா வது வரப்போறியா இல்லையா...?"

லல்லியின் குரலில் கண்டிப்புத் தொனித்தது!

"ஏய் லில்லி! நீ எப்பவும் இப்ப டித்தான் பறந்துகிட்டே இருப்பே! கொஞ்சம் நில்லுடி...!"

"ஏய் பச்சைக்கிளி! நீ மெதுவா நடந்தே வா! நான் நிற்க முடியாது! நான் நின்றாலும் நேரம் நிற்காது!" அட்டகாசமாகச்சிரித்துக்கொண்டே வாசலுக்குப் போய்விட்டாள்!

அவள் பந்தயக் குதிரை மாதிரி! அடியெடுத்து வைத்துவிட்டால் அப் புறம் நிற்கவே மாட்டாள்!

சுஜாதாவும்அவளைத்தொடர்ந்து நடந்தாள்! அதற்குள் எப்படியோ தேடி எடுத்துக்கொண்ட ஷூவோடு வெளியே ஓடிவந்தாள் சரீனு!

2. மாலை மயங்குகின்ற நேரம்

"வனிதா...! ஏய் வனிதா! உன்னைத் தானே...!"

"அவளுக்குப் புத்தகம் கிடைச் சுட்டா போதுமே! இந்த உலகத் தையே மறந்து விடுவாளே..." என் றாள் சரீனு.

"ஏய்... படிச்சது போதும்...! எழுந்து வாடி!" இது சுஜாதா.

"என்னடி இது? எந்த நேரம் பார்த்தாலும் படிப்புத்தானு? ...சீ! தூக்கி வீசுடி அந்தச் சனியனை...!" —வெடுக்கெனப் பிடுங்கி எறிந்தாள் லல்லி! திடுக்கிட்டு நிமிர்ந்த வனிதா, "ஏய்... ஏய்! அது இரவல் புத்தக மடி..." என்று கிரீச்சிட்டுக்கொண்டு துள்ளி எழுந்தாள். மூலையில்போய் விழுந்து அலங்கோலமாகக் கிடந்த நாவலைப் பதற்றத்துடன் எடுத்து நெஞ்சோடு அணைத்துக்கொண் டாள்.

"ஆமா! என்னடி அவ்வளவு இண்டரஸ்டிங்கா படிக்கிறளே! லவ் ஸ்டோரியா இருக்குமோ?"

"அதனுலே தான் விழுந்து விழுந்து படிக்கிறளாக்கும்..."

"யார் கண்டது! செக்ஸ் புத்தக மாகக்கூட இருக்கலாம்..."—சுஜாதா கண்ணைச் சிமிட்டிக்கொண்டு "களுக்" கெனச் சிரித்தாள்.

"சீ வாயை மூடுடி...! யாரைப் பார்த்து அப்படிச் சொல்றே...?" ஆத்திரத்தோடு ஆவேசமாகத் தொடங்கிய பேச்சு அழுகையோடு சுருதி கூட்டி அரைகுறையாக அவல மாக நின்றது!

அந்தப் பெரிய விழிகளில் நீர் நிறைந்துவிட்டது! கட்டிலில் குப் புறப் படுத்தவள் விசும்பத் தொடங் கவே சுஜாதாவின் நிலை சங்கடமாகி விட்டது.

"என்னடி இது... ஒரு பேச்சுக் குச் சொன்னல் இவ்வளவு சீரியஸா எடுத்துக்கிறளே...?" -துடுக்குக்காரி யான சுஜாதா கொஞ்சம் அதிர்ந்து போனுள்.

"போடி! இருந்தாலும் நீ சுத்த மோசம்! டூ மச்...! யாருகிட்டே என்ன பேசுவது என்றே தெரியற தில்லே..." அவளைக் கடிந்துகொண்டு வனிதாவின் தோளைப் பற்றித் திருப் பினுள் லல்லி.

செல்வச் செழிப்போடு கொழு கொழுவென்றிருந்த அந்தப் பட்டு மேனியைத் தீண்டியபோது பெண் ணுன அவளுக்கே ஆச்சரியமாகத் தானிருந்தது.

சதைப் பிடிப்பான அவளது முதுகைத் தன் கையால் வளைத்துப் பிடித்தபோது இரண்டு வயது குழந் தையைத் தொடுவது போலவே அவள் உணர்ந்தாள்.

"வனிதா கண்ணு! இதுக்குப் போய் அழலாமா...? அவள் கிடக் கிறள், எழுந்துவா... டியர் பேபி..."

"ம்... ஹூம்...!"

செல்லமாகச் சிணுங்கிக் கொண்டே முகத்தை டன்லப் பில் லோவில் அழுத்திக் கொண்டாள் அந்தச் செல்லப் பெண்!

அவளது ஆப்பிள் கன்னம் பள பளவென்று மின்னிய அழகில் லயித் துப்போனவள் மெதுவாக அவள் கன்னத்தைச் சுண்டினுள்.

"ஏய் வனிதா! உன் கன்னம் ஆப் பிள் போல இருக்குடி! அப்படியே க்டித்துத் தின்று விடலாம் போலி ருக்கு..."

லல்லி இப்படிக் கூறிக் கொண்டே குனியவே வனிதா குபீர் என்று சிரித்துவிட்டாள்!

"சீ போடி லல்லி! நீ ரொம்ப மோசம்...!"

கள்ளங்கபடமற்ற குழந்தை யைப் போல் சிரித்துக்கொண்டே மீண்டும் திரும்பிப் படுத்தாள் வனிதா!

அவளைப் பார்க்கும்போது லல் லிக்கு ஏனோ ஒரு குழந்தையைப் பார்ப்பது போன்ற உணர்வுதான் எழுமே தவிர தங்களைப் போன்ற பருவப் பெண்தான் என்ற எண் ணமே வருவதில்லை! அதனுல்தான் சில சமயங்களில் இப்படியெல்லாம் நடந்து கொள்கிறள் என்பதை மற்ற வர்கள் உணரத் தவறிவிடுகின்றனர்.

விகல்பமின்றி அவள் நடந்து கொள்ளும் விதம் மற்ற தோழி களுக்கு விஷமத்தனமாகப் பட்டா லும் வனிதாவுக்கு அப்படித் தோன் றுவதில்லை!

கைகளைத் தலைக்குப் பின்னல் புதைத்துக் கொண்டு நிமிர்ந்து படுத் திருக்கும் அவளை ஊன்றிப் பார்த் தாள் சுஜாதா!

வயதுக்கு மீறிய செழிப்பான உடல் வளர்ச்சியில் அவளது பெண் மையின் பூரிப்பு கண்களை உறுத்தும் படியாக எழில் கோலமிட்டது.



ஒடிந்து விழும் மேனியுடைய சுஜாதாவுக்குக் கொஞ்சம் பொறுமை யாகக் கூட இருந்தது எனலாம்.

வனிதா சோம்பல் முறித்துக் கொண்டு எழுந்து உட்கார்ந்தாள். அறைக்குள் இலேசான வெளிச்சந் தான்.

பளீரென்ற வெள்ளை நிற பெட் சீட்டின் மீது நீலநிற ஹவுஸ் கோட் டுடன் இருந்த அவளைப் பார்க்கும் போது வானிலிருந்து தேவதையே இறங்கி வந்துவிட்டது போலிருந் தது!

முழங்காலைக் கட்டிக்கொண்டு ஒய்யாரமாக வீற்றிருக்கும் அவளைப் பார்க்கப்பார்க்க அவர்களுக்குஆச்சரி யமாக இருந்தது.

கருநீல ஸ்கர்ட்டும் வெள்ளை மேல் சட்டையும் அணிந்த ஆறும் படிவ மாணவியாக அன்றுடம் வகுப் பறையில் பார்த்துக் கொண்டிருந்த சின்னப்பெண் வனிதாவைப் பருவ எழில் காட்டும் பாவையாக அதுவும் முதல் முறையாக பார்க்க நேர்ந்த தால் ஏற்பட்ட வியப்பு என்பது லல்லிக்குப் புரிந்தது.

நெருங்கிய தோழியான லல்லி உரிமையோடு வனிதாவின் பின்புறம் உட்கார்ந்து கழுத்தை இரு கரங்களா லும் கட்டிக் கொண்டாள்.

அவள் எதற்காகவோ தாஜா செய்கிறாள் என்பதும் புரிந்தது!

தனது பெரிய விழிகளை உருட் டிப் பின்பக்கமாக அவளைப் பார்த் தாள்.

கனிந்த ஆரஞ்சுச் சுளை போன்ற இதழ்களை மடித்துப் பிதுக்கினாள். தலையை மேலுங் கீழும் அசைத்து "அழகு" காட்டினாள். சுஜா தாவுக்கு இது விநோதமாகஇருந்தது.

"என்னடி இது? லவ்சின் மாதிரி இருக்கு...?"

"இது ரெண்டும் எப்பவும் இப் படித்தான்! ஒரேயடியாய் ஒட்டிக் கொண்டு உயிரை விடுகிற மாதிரி..." சரீனா சலித்துக் கொண்டாள்!

"ஏய்...லல்லி...! கழுத்து வலிக் குது விடுடி..."

வனிதா உதறிக்கொண்டு எழுந் தாள்! மீண்டும் அறைமுழுதும் சில் லென்ற சிரிப்பு!

"ஏய்! நீ இப்போ வரப்போறியா இல்லையா...? நாங்கள் எல்லாரும் போயிடுவோம்! அப்புறம் நீ தனியா... கொட்டு கொட்டுன்னு உட்கார்ந்து கொண்டு அழத்தான் போகிறாய் பாரு...! வாங்கடி நாம போகலாம்..."

இறுதியாக அவளைப் பயமுறுத்தி விட்டு எழுந்தாள் லல்லி.

"மை காட்! தனியாகவா... ஐயையோ! நான் மாட்டேன்... இருடி லல்லி! இதோ வந்துட் டேன்...பிளீஸ்...!"

துள்ளி எழுந்து ஓடும் வனிதா வைப் பார்த்துச் சிரித்துக்கொண்டே கண்களைச் சிமிட்டினாள் லல்லி. எப் படியோ வனிதாவையும் கிளப்பிவிட் டோம் என்ற குஷி! தன் செவ்விதழ் களைக் குவித்து மெதுவாக விசில் அடித்தாள்.

"ஏய் லல்லி! நீ ஆணாகப் பிறக்க வேண்டியவடி! தவறிப் போய் பெண்ணாகப் பிறந்துவிட்டு இப்படிக் கொட்டமடிக்கிறே..." சரீனா வியந்து பாராட்டி விட்டுக் கலீரெனச் சிரித் தாள்.

"ஓகே! நான் ரெடி...!"

வனிதாவின் குரல் கேட்டு திரும் பிப் பார்த்த லல்லி கூட ஒரு வினாடி அசந்துவிட்டாள்.

வெட்லுக் ஸ்லாக்கும் ஒட்டிப் பிடித்துக் கொண்டிருந்த உல்லன் பின்னல் பனியனும் சேர்ந்து வனிதா வுக்கு அத்தனை அழகை வாரிக் கொட்டியிருந்தன!

–வளரும்



ஆனந்தூர் மக்களின் பெருமை

நூல் வெளியீட்டு விழாக்கள் அவ்வப்போது இங்கு நடக்கிறதெனினும் பல சிறப்புக்களையும் ஒருங்கே கொண்ட நூல் வெளியீட்டு விழா அண்மையில் (15-4-77) கோலாலம்பூரில் நடந்தது.

"கலாவள்ளி காவியம்" வெளியீட்டு விழாதான் அது. இவ்விழாவின் முதற்சிறப்பு: ஆனந்தூர் மக்கள் சார்பாக 1001 வெள்ளி வழங்கி முதல் நூலைப் பெற் றார் திரு முகமது அனிப்.


இரண்டாவது சிறப்பு: விழாவிற்கு வந்திருந்த வர்களுக்கு இலைச் சாப்பாடு (இரவு உணவு) போடப் பட்டது.

மூன்றாவது சிறப்பு: விழாவிற்கு வந்திருந்த அனை வருமே காசு கொடுத்து நூல் வாங்கினர்.

இந்த நூல் வெளியீட்டு விழாவைத் திரு. பா. செல்வி மணாளன் (கண்ணகி கைத்தொழில் நிலையம்) சிறப்பாக நடத்தி வைத்தார்.

பட விளக்கம்: சுவாமி இராமதாசரிடமிருந்து நாடாளுமன்ற உறுப்பினர் திரு ச. சாமிவேலு $50 வழங்கி நூலைப் பெறுகிறார். அமர்ந்திருப்பவர்கள் இட மிருந்து: கலாவள்ளி காவிய நூல் ஆசிரியர் கவிஞர் ஓ. எம். காதிர் சுல்தான், ஆனந்தூர் மக்கள் சார்பாக $1001 வழங்கிய திரு முகமது அனிப், (வலக்கோடி) கவிஞர் வி. கே. சுப்பிரமணியம்.

அவரும் ஜிம்மி கார்ட்டர்



அமெரிக்க அதிபர் தேர்தலில் திரு. ஃபோர்டை வென்று உல கத்தையே வியப்பில் ஆழ்த்திய திரு. ஜிம்மி கார்ட்டர், தமது தேர்தல் பிரச்சாரத்திற்கென ஒரு விமானத்தை ஏற்பாடு செய் திருந்தார்.

ஜிம்மி கார்ட்டரின் அந்த விமானத்தை ஓட்டிய விமானி யின் பெயரும் ஜிம்மி கார்ட்டர்.

அமெரிக்காவில் உள்ள 6,500 விமானிகளில் இந்த விமானி மட்டும்தான் ஜிம்மி கார்ட்டர் என்னும் பெயரைக் கொண்டிருப்பவர்.

தமது விமானிக்கே பெயர்ப் பொருத்தம் பார்த்திருக்கும் ஜிம்மி கார்ட்டர் அதிபர் ஆவ தற்கு இன்னும் எது எதற்கெல் லாம் பொருத்தம் பார்த்தாரோ தெரியவில்லை. அதிபர் பதவி சும்மாவா வரும்?.........

இலக்கிய அரங்கம்

சித்திரப் பாவை


டாக்டர் இரா. தண்டாயுதம்

இந்தியாவின் தலைசிறந்த இலக்கியப் பரிசான ஞானபீடப் பரிசைத் தமிழிற்குப் பெற்றுத்தந்த நாவல், அகிலனின் சித்திரப்பாவை. கதை, கட்டுக்கோப்பு, பாத்திரப் படைப்பு, சமுதாயப் பின்னணி, நடை முதலிய அனைத்திலும் இந்த நாவல் சிறந்து நிற்கிறது. தொடர் கதையாக முதலில் வெளிவந்ததென்றாலும்தொடர்கதைக்குரிய பலவீனங்கள் இல்லாமல் ஒரு முழுமையான இலக்கியப் படைப்பாக இது மலர்ந்துள்ளது. "தயவுசெய்து இந்தக் கதையைப் படிக்கத் தொடங்குவோர் சற்று நிதானமாக இருந்து படிக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன். ரயிலுக்கோ, வேலைக்கோ புறப்படும் அவசரத்திலோ, திரைப் படங்கள்அல்லதுநாடகங்களில்எதிர்பார்க்கும் பரபரப்பான காட்சி ஓட்டங்களை எதிர்பார்த்தோ தயவு செய்து இதைப் படிக்கவேண்டாம். இயந்திர வேகமும், பதற்றமும் நிறைந்த இந்தக் காலத்திலும் வேகத்தைவிட ஆழத்தைக் காண முயலும் வாசகர்கள் பெருகிவருவது தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும் பெருந்துணை செய்யும்" என்று அகிலன் இந்நாவலுக்கு எழுதியுள்ள முன்னுரையும் இந்நாவலை எவ்வளவு ஈடுபாட்டுடன் அவர் படைத்துள்ளார் என்பதைத் தெளிவாக உணர்த்துகிறது.

எந்தக் காலக் கட்டத்தில் எழுதத் தொடங்குகிறாரோ அந்தக் கட்டத்தின் பிரச்சினைகளையும் சிக்கல்களையும் மனப்போக்கையும் தம்முடைய நாவல்களின் கதைத் திட்டத்திற்கு அழுத்தமாகப் பயன்படுத்திக்கொள்வது அகிலனின் தனிச் சிறப்பு. இம்முறையில் அகிலனின் நாவல்களை மட்டுமே வைத்துக் கொண்டு ஒரு முப்பதாண்டு காலச் சமுதாய வரலாற்றை எழுதிவிட முடியும். "சித்திரப் பாவை"யும் இந்த அடிப்படையில் திட்டப்பட்டதே ஆகும். ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தில் திடீர்ப் பணக்காரனாகும் வெறியில் உள்ளத்தையும் இழந்த பலரின் கதைகளில் இதுவும் ஒன்று. இந்த வெறி இல்லாதவர்களையும், வாழ்க்கையை அழகாகவும் எளிமையாகவும் வாழவேண்டும் என்ற இலட்சியம் கொண்டவர்களையும் கூட இந்தச் சூழல் எப்படிப் பாதிக்கிறது என்பதையும் இந்நாவலில் அகிலன் கலையழகோடு காட்டியுள்ளார்.

கிராமத்திலிருந்து பிழைப்பதற்காகப் பட்டணம் வந்து பட்டணவாசிகளுள் ஒருவராகவே மாறிவிட்டவர் சிதம்பர மேஸ்திரி. பணக்காரனாகவேண்டும் என்ற ஆசையிருந்தாலும் நேர்மையற்ற வழிகளில் செல்வதைப் பாவம் என்று கருதும்மனப்போக்குள்ளவர் இவர். தம் ஒரே மகனான அண்ணாமலையைப் பொறியியல் படிக்கவைத்துக் கட்டிடம் கட்டும் தொழிலில் ஈடுபடுத்தி பணக்காரனாக்க மேஸ்திரி திட்டம் போட்டுக் கற்பனைக் கோட்டை கட்டுகிறார். அண்ணாமலைக்கோ இதிலெல்லாம் சற்றும் ஈடுபாடு இல்லை. அவனுடைய உயிரும் உணர்வும் ஓவியக் கலையையே சுற்றிச்சுற்றி வருகின்றன. இந்நிலையில் ஓவியக்கலையையும் காசாக்க முடியும் என்பதை உணர்ந்த சாஸ்திரி, ஓய்வுபெற்ற ஓவிய ஆசிரியர் கதிரேசனிடம் அண்ணாமலையைப் பயிற்சிக்கு அனுப்புகிறார். அதுவரையில் வெளி அழகையே அழகு என்று மயங்கியிருந்த அண்ணாமலையின் சிந்தனையைத் தூண்டி கண்களுக்குச் சிறிதும் புலனாகாத அக அழகைக் காணவைக்கிறார் கதிரேசன். இப்புது அனுபவம் அண்ணாமலையைக் கலையறிவு செறிந்த ஓர் ஓவியனாகப் பக்குவப்படுத்துகிறது. இந்தச் சூழலில் அண்ணாமலையின் எளிமையும் கலை ஈடுபாடும் கதிரேசனின் மகளான ஆனந்தியைக் கவர்கின்றன. பழமைப் பண்புகளும் புதுமையின் சுதந்திரப் போக்கும் கலந்து உருவானவள் இவள். இவர்களிடையே மலர்ந்த அன்பு, அண்ணாமலையின் வீட்டிலேயே வளரும் மாணிக்கத்தின் உள்ளத்தில் பொறாமைத் தீயைத் தூண்டிவிடுகின்றது. மேஸ்திரிக்குப் பெற்ற பிள்ளை அண்ணாமலையென்றால், பெறாத பிள்ளை மாணிக்கம். மேஸ்திரி அவனிடம் எவ்வளவு அன்பு பாராட்டினாலும் இளமையிலிருந்தே அவனிடம் அண்ணாமலையின்மேல் ஒரு பொறாமை துளிர்விடத் தொடங்கிவிட்டது. இப்பொறாமை ஆனந்தியின் அன்பை அறிந்த அளவில் விசுவரூபம் எடுத்துவிட்டது. அதில் ஆனந்தியை அப்படியே விழுங்கிவிட அவன் பேராசை கொண்டான். எதிர்பாராமல் ஒருநாள் ஆனந்தியைக் கட்டித்தழுவி இதழ்களை எச்சிலாக்கி விடுகிறான். எச்சிலாக்கப்பட்ட தன்னை அப்பாவியான அண்ணாமலையிடம் ஒப்புவித்துக்கொள்ள விரும்பாத நிலையில் அவள் மாணிக்கத்தை மணக்கிறாள். அண்ணாமலை அவனுடைய மாமா தண்டபாணியின் மகள் சுந்தரியை மணக்கிறான். அவர் எப்படியாவது அண்ணாமலையைத் தம் வழிக்குத் திருப்பி விளம்பரப் படங்களைஎழுதுவதன் மூலம் பணக்காரனாக்கிவிட முயலுகிறார். கலைக்கும் வியாபாரத்திற்கும் போட்டி கடுமையாகி அதனால் அண்ணாமலை பயங்கரமாகப் பாதிக்கப்படுகிறான். சுந்தரியும் தன் இறப்பின் மூலம் அவனைத் தனிமையாக்கி விடுகிறாள். ஆனந்தியை மணந்த மாணிக்கமும் அத்துடன் திருப்தியடையாமல், பணக்காரனாவதற்காக மேலும் மேலும் தீய வழிகளில் இறங்கி ஒழுக்கம் கெடுகிறான். அண்ணாமலையைத் தன் முதல் பகைவனாகக் கருதி அவனையும் பழி தீர்க்கிறான். இவற்றைப் பார்த்து மனங்கொதித்து நிற்கும் ஆனந்தியுடன் ஒருநாள் போராட்டம் ஏற்படுகிறது. அதில், அவள் அவனைப் பிடித்துத் தள்ளிய வேகத்தில் தவறி மாங்கலியக் கயிறு அவன் கையுடன் போய்விடுகிறது. அதையே தனக்குக் கிடைத்த விடுதலையாகக் கருதி அவனை விட்டு நீங்கி அவள் அண்ணாமலையிடம் செல்கிறாள். 'சித்திரப் பாவை"யின் கதை இதுதான்.

இந்தக் கதையை வைத்துக் கொண்டு அகிலன் ஒரு சிறந்த கலைப் படைப்பையே நமக்குத் தந்துவிட்டார். உயிரோட்டம் நிறைந்த கதைமாந்தர், சுவைமிக்க சம்பவப் பின்னணி, துணிவான கதை முடிவு ஆகிய இவற்றால் இந்நாவல் தமிழ் நாவல் உலகில் என்றும் போற்றப்படும்.



ஒரு ரப்பர் மரம்! அதனருகே வாளி.

ரப்பர் மரத்தில் இருந்த மங்கு, வாளியிடம் சொன்னது. "நான் இல்லாவிட்டால் நீ பால் சேகரிக்க முடியுமா? ஆகவே நான்தான் பெரியவன்!"

மங்கைப் பார்த்துப் பிலி கத்தியது!

"நான் சேகரிக்காவிட்டால் உனக்கு மட்டும் பால் கிடைக்குமா? நான்தான் பெரியவன்."

"போதும் உங்கள் வீறாப்பு; நான் பாலைச் சுரக்காவிட்டால் உனக்கு மட்டுமல்ல, மங்குக்கும் வாளிக்கும் இங்கென்ன வேலை? அதனால் உங்கள் இருவரிலும் நானே பெரியவன்" என்று ரப்பர் மரம் பிலியிடம் கூறியது.

அப்போது அங்கு வந்த பால்வெட்டுத் தொழிலாளி மரத்திடம் பணிவாகச் சொன்னான்:

"மரமே, உன்னை நட்டு வளர்த்து உனது பயனை உலகத்திற்கு உணர்த்துகிறவனே நான்தான். என்றாலும், நான்தான் பெரியவன் என்று யாரிடமாவது வம்புக்குப் போகிறேனா? சொத்துரிமை கேட்கிறேனா? மரமாகிய நீ என்னைப்போல் மரத்துக்கிட!"

தனது வலிமையை உணர்ந்த நினைத்த மரம் அதன் பிறகு உண்மையிலேயே மரத்துப்போனது.

முத்துவைக் கேளுங்கள்

து. சுந்தராம்பாள் சாமி, கார்டன் சிட்டி, மலாக்கா

கே: இன்பமான இல்வாழ்விற்கு இன்று மிக முக்கியமானது எது?

ப: குடும்பத்தை நடத்துவதற்குப் போதுமான வருவாய்.

அரையன் ராஜராஜன், அந்தாரா தோட்டம், சபாக்பெர்ணம்

கே: இந்தியாவில் ஜனதா கட்சி ஆட்சிக்கு வந்ததும் கள்ளக்கடத்தல்காரர்களையும், பதுக்கல்காரர்களையும் விடுதலை செய்துவிட்டதே, இது ஜனநாயகத்தில் எந்த வகையைச் சேர்ந்தது?

ப: கள்ளக்கடத்தல்காரர்களையும், பதுக்கல்காரர்களையும் தாமாகவே மனம் திருந்தி நேர்வழியில் நடக்க வைப்பதற்கு மொரார்ஜி தேசாயின் அரசாங்கம் மேற்கொள்கின்ற இந்த முறையைச் சத்திய சோதனை ஜனநாயகமென்று கூறலாம்!

எம். சாமிக்கண்ணு, பாரிட்புந்தார்

கே: குழந்தைக்கு அம்மைப்பால் வைக்காவிட்டால் சட்டப்படி குற்றமா?

ப: ஆறு மாதத்திற்குள் அம்மைப் பால் வைப்பது போன்ற பல நோய்த்தடுப்பு முறைகளைச் செய்ய வேண்டும். இல்லாவிட்டால் குற்றம்.

கே: மனிதன் பிறக்கும்போது அழுகிறான், இறக்கும்போது அழுகிறான்; இடையில் அவன் என்னென்ன சாகசங்கள் செய்கிறான்?

ப: பிறப்புக்கும் இறப்புக்கும் இடையிலும் மனிதன் தானும் அழுகிறான்; மற்றவர்களையும் அழவைக்கிறான். பெரும்பாலும் மனித வாழ்க்கை ஒப்பாரியாகவே அமைகிறது.

குமாரி எம். நாகம்மா, பாகான் சிராய்

கே. புதிய சமுதாயத்திற்கு வரவேற்பு எப்படி!

ப: வாசகர்கள் எங்களைத் திக்குமுக்காட வைக்கும் அளவுக்கு அமோக வரவேற்பை நல்கி வருகிறார்கள்!

கே: இந்த இதழுக்கும் சினிமாவுக்கும் சம்பந்தம் உண்டா?

ப: புதிய சமுதாயத்தின் பக்கங்களைப் புரட்டிப்பார்த்தால் இந்த கேள்விக்கு உங்களுக்கு விடை கிடைக்கும்.

சு. ஆ. வீரசிம்மன், ஜோகூர்பாரு

கே: ம. த. இ. மணிமன்றத்திலும் அல்லது ம. தி. கழகத்திலும் உறுப்பியம் பெற்றவர்கள் ம. இ.காவில் உறுப்பினராகலாமா?

ப: சாதாரண உறுப்பினராக இருக்கத் தடை இல்லை. ஆனால் மணிமன்றத்திலோ, திராவிடர் கழகத்திலோ நிர்வாகப் பதவி வகிக்கும் ஒருவர் ம. இ. காவிலும் நிர்வாகப் பதவிகளை வகிக்க முடியாது.

க. தாமரைமணாளன், களும்பாங் தோட்டம், பாகான்சிராய்

கே: புதிய சமுதாயத்தில் போட்டிப் பகுதிகள் ஆரம்பித்தால் என்ன?

ப: குறுக்கெழுத்துப் போட்டி விரைவில் ஆரம்பமாகும். அறிவிப்பைப் பாருங்கள்.

கமகன், கோலாலம்பூர்

கே: கடாரம் என்றால் என்ன? "கழகத் தமிழ் அகராதி"யில் கடாரம் என்றால் பர்மா என்று குறிப்பிடப்பட்டிருக்கிறதே!

ப: கடாரம் என்பது கெடாவையே குறிக்கும் கழகத் தமிழ் அகராதியில் பர்மா என்று குறிப்பிட்டிருப்பது அத்துணைப் பொருத்தமன்று.

குமாரி. த. கோமளா, கம்போங் தாவாஸ், ஈப்போ

கே: மனதில் கள்ளம்கபடம் இல்லாமல் பேசுபவர்களுக்கும், உள்ளத்தில் ஒன்றும் உதட்டில் ஒன்றும் வைத்துப் பேசுபவர்களுக்கும் உள்ள வேறுபாடு என்ன?

ப: அருவி நீருக்கும் கடல் நீருக்கும் உள்ள வேறுபாடுதான்!

பி. எப். அலி, ஜிஞ்சாங், கோலாலம்பூர்

கே: சமுதாயம் என்பதற்கு வேறொரு சொல் ஏதாவது?

ப: குமுகாயம் என்பது சமுதாயத்தைக் குறிக்கும் மற்றொரு சொல்.

பெ. தென்னரசு, கோலாலம்பூர்

கே: உண்மையிலே சத்தியம் ஒரு அழகிய பொருளா?

ப: சத்தியம் அழகு நிறைந்தது மட்டுமல்ல, புனிதமும் வாய்ந்தது.

ச. தமிழ்ச்செல்வன், செலாபா தோட்டம், தெலுக்கான்சன்

கே: இவ்வருடத்திற்கான எச். எஸ். சி. தமிழ் இலக்கியத்திற்கான பாடப்புத்தகங்கள் யாவை?

ப: 1. தமிழ்க் கவிக்கோவை [மலாயாப் பல்கலைக் கழக வெளியீடு], 2 பாரதியாரின் குயில் பாட்டு [முதல் ஆறு அத்தியாயங்கள்], 3. வஞ்ச மகள் [கு. அழகிரிசாமி], 4. உலகப் பேரேடு [டாக்டர் மு. வ.]

எஸ். எஸ். வேலன் கோபால், கிள்ளான்

கே: மனிதனை ஆட்டிப்படைப்பது மதுவா, மங்கையா அல்லது பணமா அண்ணே?

ப: அதிகாரப் போதையையும் இந்தப் பட்டியலில் சேர்த்துக் கொள்ளுங்கள். இவை அனைத்துக்குமே மனிதனை ஆட்டிப்படைக்கும் சக்தி உண்டு. அந்தந்த மனிதனின் பலவீனத்தைப் பொறுத்து இவை செயல்படும்!

மதிவாணன், பத்தாங் பெர்ஜுந்தை

கே: சம்சு ஒழிப்பினால் அது நீங்கியது. கள்ளச் சம்சுவிற்குப் பதிலாக "சாப் தீகா உலார்" என்ற மற்றொரு சம்சுவும் விற்கப்படுகிறது. இதற்கு என்ன செய்வது?

ப: இந்த "மூன்று பாம்பு சம்சு" அரசாங்க அனுமதியோடு விற்கப்படுகிற சட்டபூர்வமான சம்சு ஆகும். மற்ற மதுபானங்களைப் போல கடைகளில் இதனையும் விற்கிறார்கள். கள்ளச் சம்சு போல இதனால் உயிருக்கு ஆபத்து நேரிட்டுவிடாது என்றாலும் எந்தக் குடிப்பழக்கமும் மனிதனுக்கு தீமையே பயக்கும்! ஆகவே குடிப்பழக்கத்தை எதிர்த்துப் பிரச்சாரம் செய்வதன் மூலமே இத்தகைய மது வகைகளின் நடமாட்டத்தைத் தடுக்க முடியும்.

என். குமாரன் நாயர், புக்கிட் சிலாரோங் தோட்டம், பாடாங் சிராய்

கே: பேட்டிக்குச் செல்லும் போது கிருதா, மீசை வைத்திருந்தால் வேலை கிடைக்குமா?

ப: கிருதாவுக்கும் மீசைக்கும் யாரும் வேலை கொடுக்கமாட்டார்கள். பேட்டியில் தாங்கள் அளிக்கும் பதிலிலுள்ள சரக்கைப் பொறுத்துத்தான் உங்களுக்கு வேலை கிடைக்கும்.

விஜயகுமாரன், ஜோகூர்பாரு

கே: இந்தியர்கள் பத்து லட்சமாக இருந்தும் ம. இ. கா.வில் ஒன்றேகால் லட்சம் உறுப்பினர்கள் மட்டும் இருப்பதேன்?

ப: இந்திய சமூகத்தில் எட்டு சதவிதம் ம. இ கா. வில் அங்கம் வகிப்பது பெரிய சாதனையாகும். மலேசிய சீனர் சங்கத்தில் இந்த அளவுக்குச் சீனர்கள் அங்கம் பெறவில்லை.

தூண்டுகோல்

'பிரம்மா'

மலேசியத் தமிழ் இலக்கிய உலகில் ஒரு புது வரவாகவும் புத்தெழுச்சியைத் தரும் வகையாகவும் - சிங்கப்பூர் இலக்கியக் களத்தின் முனைப்பால் புறப்பட்ட; இருமாதங்களுக்கு ஒரு முறையான; சிங்கப்பூர் மலேசியத்தில் வெளியான - எல்லாத் தமிழ்ப் பத்திரிகைகளிலும் பிரசுரமான - தமிழ்ச் சிறுகதைகளின் திறனாய்வு முயற்சிக்கு முதல் கட்டமாக - ஜனவரி - பிப்ரவரி மாதங்களில் வெளியான சிறுகதைகளை ஆய்வு செய்துள்ளார் தமிழகத்தின் பிரபல எழுத்தாளர் குமாரி ஆர். சூடாமணி. தமக்கே உரிய தூரநோக்குடன் வரையப்பட்ட நயமான கட்டுரையாக - இந்த ஜனவரி - பிப்ரவரி மாதக் கதைகளுக்குத் திறனாய்வு செய்து எழுதியுள்ளார். சூடாமணியின் இந்தக்கட்டுரை நல்ல பயனாக அமையலாம்.

இப்பெரும் முற்போக்கான - விரிவான இலக்கிய முயற்சியை மலேசியத் தமிழ் எழுத்துலகம் பெருமையோடும்ஆரவாரத்தோடும் வரவேற்குமென நினைக்கின்ற வேளையில், பாரபட்சமற்ற முறையில்; இரண்டு மாதங்களில்வெளிவருகின்ற எல்லாப் பத்திரிகைகளிலும் பிரசுரமாகின்ற எல்லாக்கதைகளையும் ஒன்று சேர்த்து; எந்தக் கதைகளும் விடுபட்டுவிடாதவாறு திறனாய்வுக்கு எடுத்துக்கொள்வதோடு; விருப்பு வெறுப்பின்றித் திறனாய்வு முயற்சிகள் இருக்கும் என்று நம்புகின்றோம்.

மலேசியத் தமிழ்ச் சிறுகதை உலகத்திற்கு மட்டுமன்றி - எல்லா இலக்கியத் துறைகளுக்கும் இப்படிப்பட்ட இலக்கியத் தூண்டுகோல் முயற்சிகள் தேவைப்படுகின்றன.

தரமான கதைகள் நிலையான இலக்கியத்துக்கு வலுவூட்ட முடியும். உண்மையான இலக்கியமுயற்சிகள் நிலைத்துவாழ முடியும். இந்த அரிய முயற்சிக்கு வித்திட்டவர்களை உளமாரப் பாராட்டவேண்டும்.

சூடாமணியின் கட்டுரை நயமாக எழுதப்பட்டுள்ளது. சிறுகதை வளர்ச்சிக்கு அவரின் கருத்துக்கள் "தூண்டுகோலாகவும்" அமையலாம். இந்தத் திறனாய்வு முயற்சிக்கு வலுவூட்டுவதுபோல தமிழ் மலர் அந்த அருமையான திறனாய்வுக்கட்டுரையை [17-4-77] அன்று வெளியிட்ட பெருமையைப் பெறுகின்றது.

இது ஒரு நல்ல முயற்சி. இந்த அரிய இலக்கிய முயற்சி நீடித்து வளர - பக்குவப்பட்ட உள்ளங்களை வாழ்த்துகிறோம்; வரவேற்கின்றோம்.

மா. புகழேந்தி, குருண், கெடா

கே: எழுத்தாளர்களை மதிக்காதவர்களைப் பற்றித் தங்களின் கருத்து?

ப: எழுத்தாளர்களை மதிக்காதவர்களை, நாம் மதிக்கத் தேவையில்லை.

எஸ். எம். கமல், செங்காட் தோட்டம்

கே: சிக்கனமாக வாழ்ந்தால் கஞ்சன் என்கிறார்கள்? என்ன செய்வது?

ப: சொன்னால் சொல்லிவிட்டுப் போகிறார்கள். நீங்கள் சிக்கனமாக வாழ்வதை விட்டுவிடாதீர்கள்!

எம். எஸ். மணியம், பில்மோர் தோட்டம்

கே: நம் நாட்டில் வாழும் இந்தியர்களுக்கு ம. இ. கா. என்ன திட்டங்கள் வகுத்திருக்கிறது?

ப: நீலப்புத்தகம் எனும் பெயரில் இந்தியர்களின் எதிர்கால நல்வாழ்வுக்கு எல்லாத் துறைகளையும் உள்ளடக்கிய பெரிய திட்டம் ஒன்றை ம. இ. கா. தயாரித்து வைத்திருக்கிறதே, தங்களுக்குத் தெரியாதா?

எஸ். எம். பரமசிவம், சின்னு, செங்காட் தோட்டம்

கே: அண்ணா, வாழ்க்கையில் பொருளாதார நிலையில் முன்னேற வேண்டுமானால் பல தோல்விகளைத் தழுவ வேண்டியுள்ளதே?

ப: தோல்விகளுக்குப் பிறகுதான் வெற்றி உதயமாகும். இடையில் சோர்ந்து விடக்கூடாது.

அஞ்சு ராமச்சந்திரன், பத்தாங்காலி தோட்டம்

கே: இரவில் தூங்கும் போது முகத்தில் பவுடர் பூசுவது நல்லதா?

ப: பாதித் தூக்கத்தில் எழுந்துகூடப் பவுடர் பூசிக் கொள்ளலாம். பவுடர் வியாபாரம் பெருகுவதற்கு நல்லது.

ஆர். பி. எஸ். இளம்தோதேவர், டமன்சாரா, கோலாலம்பூர்

கே: அண்ணா ஒரு சமூக இயக்கத்தை உருவாக்கி, அரசாங்கத்தில் பதிவு செய்வதற்குச் சில ஆலோசனைகள் தருவீர்களா?

ப: ஏற்கனவே இருக்கிற பலமிக்க சமூக இயக்கங்களின் கிளைகளைத் தோற்றுவிக்க முயலுங்கள். புதிதாக ஒன்றை ஆரம்பிப்பது அவசியமா என்பதைத் தீர்க்கமாகச் சிந்தியுங்கள்.

வே. கனகாதேவி, கிள்ளான்

கே: யார் போற்றப்பட வேண்டியவர்? செவ்வாய் கிரகத்திற்குச் செல்லும் மனிதனா அல்லது அவனைப் படைத்த கடவுளா?

ப: கடவுளை வழிபட வேண்டும். செவ்வாய் மண்டலத்திற்குச் செல்லும் மனிதர்களைப் போற்ற வேண்டும்.

தாரா எழிலழகன், சுங்கைவே, கோலாலம்பூர்

கே: ஒரு மனிதனுக்கு வாழ்க்கையில் எப்பொழுது வசந்தகாலம் ஏற்படுகிறது?

ப: காரிகை ஒருத்தியைக் கைப்பிடித்த பிறகு.

கே: உள்ளம் கெடாமலிருக்க வழி என்ன?

ப: இறை வழிபாடும் நல்லோர் சேர்க்கையும் தூய வாழ்க்கைக்குத் துணைபுரியும்.

எம். குணசேகரன், பாரிட்புந்தார், பேரா

கே: நான் நாட்டுக்கு நல்லது செய்ய விரும்புகிறேன். எந்த முறையில் செய்யலாம் என்று கூறுவீர்களா அண்ணா?

ப: யாராவது ஒரு ஏழைப்பிள்ளையைப்படிக்க வைப்பதற்கு முழு உதவி செய்யுங்கள். அது நாட்டுக்குச் செய்கிற பெரிய உபகாரமாகும்.



தொலைக்காட்சி

12-5-77 வியாழன் மாலை 5.30க்கு இந்திப் படம்: பாய் பஹேன்

15-5-77 ஞாயிறு மாலை 4க்குத் தமிழ்ப் படம்: வீர விஜயன்

19-5-77 வியாழன் மாலை 5.30க்குத் தமிழ்ப் படம்: டவுன் பஸ் "சிட்டுக்குருவி சிட்டுக்குருவி சேதி தெரியுமா" எனும் இனிமையான பாடல் இப்படத்தில்தான் ஒலிக்கின்றது!

26-5-77 வியாழன் மாலை 5.30க்கு இந்திப் படம்: ராஜேஸ்கன்னா நடித்த டில் தௌலாட் டுனியா

வானொலி

நாடகம்

(சனிக்கிழமைதோறும் பிற்பகல் மணி 2.00க்கு ஒலிபரப்பாகிறது)

14-5-77 ஈப்போ எம். முத்தாஜி எழுதிய யாருக்காகக் காத்திருப்பேன். இதனைப் பினாங்கு நிலையத்தைச் சேர்ந்த எஸ். ஈஸ்வரன் தயாரிக்கிறார்.

21-5-77 சுங்கை பக்காப் குமாரி ராஜாமணி சுப்பிரமணியம் எழுதிய உழைக்கும் கரங்கள் ஓய்வதில்லை

தொடர் நாடகம்

(திங்கட்கிழமை தோறும் இரவு மணி 7.15க்கு ஒலிபரப்பாகிறது)

தலைநகர் எஸ். வைரக்கண்ணு எழுதும் உன்னை நான் காண்பேனோ?

16-5-77 ஒருபுறம் வேடன் மறுபுறம் நாகம் [ஏழாம் பகுதி]

23-5-77 நெஞ்சில் ஓர் ஆலயம் [இறுதிப் பகுதி]

சிறுகதை

[ஞாயிறு தோறும் இரவு மணி 8.45க்கு ஒலிபரப்பாகிறது]

15-5-77 தலைநகர் முருகையன் எழுதிய அந்த நினைவுகள்

22-5-77 புலாவ் பினாங்கு கே. ஆர். காளிதாசன் எழுதிய உள்ளத்தில் ஊனம் இல்லை

கண்ணோட்டம்

தமிழ்ப் புத்தாண்டையொட்டி மலேசிய வானொலி படைத்த சிறப்பு நிகழ்ச்சிகள் நன்று. குறிப்பாக மனோகர் நாடகக் குழு நடிகர்களைக் கொண்டு படைக்கப்பட்ட "நாடக மாலை" என்னை வெகுவாகக் கவர்ந்துவிட்டது. ஆனால் மனோகரின் நடிப்பு அதில் இடம் பெறாதது பெருங்குறை.

—கமலக்கண்ணன், கங்கார்

மனச் சுழல்

[ஞாயிறு தோறும் காலை மணி 10.30க்கு ஒலிபரப்பாகிறது]

15-5-77 தலைநகர் பதவியன் எழுதிய பிரதிபலன். உழைப்பால் முன்னேறிய ஒருவன், குறுக்கு வழியில் முன்னேறிய ஒருவன்—இருவரும் நண்பர்கள்; கருத்து வேற்றுமை உண்டாகிறது. அதனால்......?

22-5-77 தலைநகர் திருமதி கிருஷ்ணம்மா எழுதிய ஓர் இளைஞனின் கதை.

சிரிப்புச் சித்திரம்

[சனிக்கிழமை தோறும் இரவு மணி 7.15க்கு ஒலிபரப்பாகிறது]

14-5-77 தலைநகர் திருமதி கிருஷ்ணம்மா எழுதிய ஈத்தையும் கோழியும்

21-5-77 பத்தாங் பெர்ஜுந்தை சுப்பிரமணியம் சக்கரவர்த்தி எழுதிய வாசலுக்கு வாசல்.



* *

சிறுகதை, சிரிப்புச் சித்திரம் ஆகிய நிகழ்ச்சிகளைத் தயாரிக்கும் புதிய தயாரிப்பாளர் குமாரி கே. ஜே. இராஜம்மா.

ஒலிச்சித்திரம்

(சனிக்கிழமை தோறும் மாலை 6-30க்கு ஒலிபரப்பாகிறது)

14-5-77. 21-5-77 ஆகிய நாட்களில் இருபகுதியாக, சிவகுமார், அல்கா, ஸ்ரீகாந்த், பிரமிளா நடித்த "மதன மாளிகை"



மல்லிகை என்...

"மல்லிகை என் மன்னன் மயங்கும் பொன்னான மலரல்லவோ..." என்ற "தீர்க்க சுமங்கலி" திரைப்பாடலைக் கேட்கும்போது அப்பாடலின் ஜனரஞ்சகமான வெற்றிக்குத் துணைபுரிந்த எம். எஸ். விஸ்வநாதனின் இசையமைப்பும், அதற்கு உயிரூட்டிய புதுப் பாடகி வாணி ஜெயராமும் நம் நினைவிற்கு வருகிறார்கள்.

"குட்டி" என்ற இந்திப் படத்தின்வழி இசையுலகில் அடி எடுத்து வைத்த வாணி ஜெயராம், கடந்த ஐந்தாண்டுகளில் பன்னிரெண்டு மொழிகளில் ஆயிரத்துக்கும் அதிகமான பாடல்களைப் பாடியிருக்கிறார்.

தமிழில் "தாயும் சேயும்" என்ற படத்திற்குத்தான் முதன் முதலில் தான் பாடியதாகவும் ஆனால் அப்படம் வெளியாகாமலேயே போய்விட்டதாகவும் அதன் பின்னர் "தீர்க்க சுமங்கலி" படத்தில் பாடிய "மல்லிகை என் மன்னன் மயங்கும்" என்னும் பாடலே தமிழ் ரசிகர்களிடம் தனக்கு ஒரு நிலையான இடத்தைப் பெற்றுத் தந்ததாகவும் கூறுகிறார் வாணி ஜெயராம்.

ஆடம்பரத்தைச் சிறிதும் விரும்பாத இவர், நேரங்கழித்து உறங்குவதையும், எண்ணெயில் செய்த பலகாரங்களை உண்ணுவதையும், ஐஸ் அருந்துவதையும் அறவே விரும்புவதில்லை. இனிய குரல்வளம் கெடாமல் இருக்கவே இவற்றைத் தவிர்த்து விடுகிறார் வாணி ஜெயராம்!

"ஜெனோவா" திரைப்படத்தின் மூலம் இசைத்துறையில் நுழைந்து பல வெற்றிப்படங்களுக்கு இசையமைத்திருக்கும் "மெல்லிசை மன்னர்" எம். எஸ். விஸ்வநாதன் மிகவும் எளிமையானவர். [வயது 48] இன்று பெரும் புகழையும், செல்வத்தையும் பெற்று இசையுலகில் மன்னராகத் திகழ்ந்தாலும், வாழ்க்கையின் ஆரம்ப நாட்களில்இவர்பட்டசிரமங்கள் கொஞ்ச நஞ்சம் அன்று! 1938ஆம் ஆண்டில் குடும்பத்தின் வறுமையைப்போக்கத் தேநீர்க்கடையில் வேலை பார்த்ததையும், தெருவில் வடை விற்றதையும் இன்றும் தம் நினைவில் பசுமையாக வைத்துக்கொண்டிருக்கிறார். "எம். எஸ்."என்று இவருடைய பெயருக்கு முன்னாலிருக்கும் அந்த இரண்டு எழுத்துக்களுக்கும் என்ன பொருள்...?

"மனையங்கத்து என்ற குடும்பப் பெயரையும், சுப்பிரமணிய நாயர் எனும் தமது தந்தையாரின் பெயரையுமே அந்த "எம். எஸ்" குறிப்பிடுவதாக அவர் விளக்கம் தந்தார். கவிஞர் கண்ணதாசனிடம் தனி அபிமானம் கொண்டுள்ள மெல்லிசை மன்னர் கவியரசுவின் "அர்த்தமுள்ள இந்து மதம்" என்னும் நூலைப் படித்துப் பார்த்தால் எப்பேர்ப்பட்ட நாத்திகனும் ஆத்திகனாக மாறிவிடுவான் என்று அழுத்தமுடன் குறிப்பிட்டார்.

"மலேசியாவிலிருந்து திறமை உள்ள பாடகர்கள் தமிழகம் வந்தால் அவர்களுக்குச் சிபாரிசுகூடத்தேவையில்லை—அவர்களை இசைத்துறையில் தூண்டிவிடக்காத்திருக்கிறேன். ஆனால் வருவதற்கு முன்னால் திறமையை வளர்த்துக்கொண்டு வாருங்கள்!" என்று நம் நாட்டு இசைக் கலைஞர்களுக்கு நல்வரவு கூறினார் "மெல்லிசை மன்னர்" எம். எஸ். விஸ்வநாதன்.

—ராமதாஸ் மனோகரன்

நீ ஒரு மகாராணி

'நான் செய்த பாவத்திற்கு நல்லது செய்ய நினைக்கிறேன். அதற்கொரு சந்தர்ப்பத்தை எனக்குக் கொடு. என்னால் தனியாக்கப்பட்டு விட்ட உன்னை நல்ல நிலையில் காண விரும்புகிறேன்!"

தன் தமக்கையைக் கொலை செய்து ஐந்து ஆண்டு சிறைவாசம் அனுபவித்துவிட்டு வந்த ஸ்ரீகாந்த் கூறியதைக் கேட்டு நம்பிவிடுகிறார் சுஜாதா.

இதனால் வேலை வாங்கித் தருவதாகச் சுஜாதாவை சென்னைக்கு அழைத்துச் சென்று விபச்சார விடுதியில் விற்றுவிடுகிறார் ஸ்ரீகாந்த். அங்கே தன் கற்பைக் காப்பாற்றிக் கொள்ள அரும்பாடுபடுகிறார் அவர்.

பிறகு ஜெய்சங்கரின் காதலியாக நடிக்கப்போகிறார். நடிக்கப்போன இடத்தில் அவர் மனைவியாகிறார்.

ஜெய்சங்கரின் உண்மையான காதலியான ஸ்ரீபிரியா வந்தபிறகும் கதை ஒரு முடிவுக்கு வராமல் தொடர்ந்து இழுக்கப்படுகிறது.

கதையின் கட்டுக்கோப்புச் சரியாக இல்லாவிட்டாலும் படத்தைப் பார்த்து ஓரளவு ரசிக்கும்படி இருக்கிறது. வசனங்களைச் சில இடங்களில் ரசிக்கமுடிகிறது.

விபச்சார விடுதிக்கு வந்த டைப்பிஸ்ட் கோபு "விக்ஸ் இல்லையோ?" என்று கேட்க, "இல்லை! செக்ஸ்தான் இருக்கிறது!" என்கிறார் சுஜாதா. பதில் எப்படி இருக்கிறது கவனித்தீர்களா?

மனோரமா டாக்டராக வருகிறார். நகைச்சுவை இல்லாமல் போய் விடுமே என்று நினைக்கிறோம். ஆனால் அவர் நம்மை ஓரளவு திருப்தி பெறச் செய்கிறார்.

தேங்காய் சீனிவாசன் ஜெய்சங்கரின் தந்தையாக - பெரிய பணக்காரராக வருகிறார். நகைச்சுவைப் பாத்திரத்தில் பார்த்துப் பழகிவிட்டதால் அந்தப் பெரிய மனிதர் பாத்திரத்தைச் சில இடங்களில் நம்மால் ரசிக்கமுடியவில்லை.

இந்தப் படத்தில் ஒரு சிறப்பு அம்சம் இந்தப் படத்திற்கு இசையமைத்துள்ள சங்கர்-கணேஷ் அறிமுகப்படுத்தப்படுவதும், அவர்கள் வாத்தியங்கள் வாசிப்பதுமாகும்.

எத்தனை சிறப்புக்களைச் சொன்னாலும் இது ஒரு சராசரி படமேயாகும்.

-பமன்



சீர்திருத்தச் செம்மல்



இளமை முதலே பொதுப் பணியில் ஆர்வம் மிகுந்திருந்ததால் சீர்திருத்தக் கொள்கையிலும் தன் மதிப்பு இயக்கத்திலும் தீவிரப் பற்றுக்கொண்டு கடனாற்றியவர்; ஈரோட்டிலிருந்து வெளியான "குடியரசு" பத்திரிகையைத் தருவித்து நெகிரி மாநிலத்தில் பரப்பியதுடன் சீர்திருத்தப் பிரச்சாரமும் செய்து வந்தவர்; பெரியார் ஈ. வெ. ரா. 1929ஆம் ஆண்டில் மலாயாவுக்கு வருகை மேற்கொண்டபோது அவரின் நெகிரி மாநிலச் சுற்றுப் பயணத்திற்குப் பெரிதும் பொறுப் பேற்றுக்கொண்டவர். 1932ஆம் ஆண்டில் தமிழகத்தில் சீர்திருத்தத் திருமணம் செய்துகொண்டவர். 1939ஆம் ஆண்டில் சிரம்பானில் "பாரதி பதிப்பகம்" எனும் அச்சகத்தை நிறுவியதன்வழி, நெகிரியில் அச்சுத்தொழிலில் இறங்கிய முதல் தமிழர் என்னும் பெருமையைப் பெற்றவர். இப்படிப் பல்லாற்றானும் சிறப்புப் பெற்றவர் அண்மையில் [21-4-77] இயற்கை எய்திய திரு. இராம. சின்னையா அவர்கள்.

1913ஆம் ஆண்டில் தமிழகத்தில் பிறந்த இவர் 1919ஆம் ஆண்டில் மலாயாவுக்கு வந்தார்.

1934 முதல் 1936 வரை ஆதி திராவிடர் மாநாடு கூட்டும் பணிகளிலும் இவர் ஒத்துழைத்தார்.

தமிழர் சீர்திருத்தச் சங்க அமைப்பிலும் திரு. சின்னையா அவர்கள் பெரிதும் ஈடுபாடு கொண்டு அச்சங்கத்தைச் சிரம்பானில் 1936ஆம் ஆண்டிலும், மலாக்காவில் 1938ஆம் ஆண்டிலும் அமைப்பதற்குப் பொறுப்பாக இருந்தார். மலாக்கா தமிழர் சீர்திருத்தச் சங்கக் கட்டிட நிதிக்காக லாட்டரிச்சீட்டுகள் விற்பதில் இவர் அதிக சிரத்தை எடுத்துக் கொண்டு மலாயாவின் பல பகுதிகளுக்குச் சென்று டிக்கட் விற்பனையில் மும்முரமாக ஈடுபட்டார்.

சீர்திருத்த நிறுவனங்கள் இல்லாத பகுதிகளுக்கெல்லாம் திரு. சின்னையா அவர்கள் சென்று அத்தகைய நிறுவனங்கள் அமைவதற்குத் தூண்டுகோலாக இருந்து வந்ததுடன் சீர்திருத்தப் பிரசாரக் கூட்டங்களிலும் கலந்துகொண்டு அரும்பணி ஆற்றினர்.

சிங்கப்பூரில் 1940ஆம் ஆண்டு இறுதியில் கூடிய அகில மலாயா தமிழர் மாநாட்டிலும் திரு. சின்னையா அவர்கள் பங்குகொண்டார்.

ஜப்பானியர் ஆதிக்கக் காலத்தின் போது "சிரம்பான் வர்த்தமானி" என்ற வார இதழை திரு. சின்னையா அவர்கள் தொடக்கினர். ஆரம்பத்தில் இவரும் இப்போதைய செனட்டர் டான்ஸ்ரீ எஸ். ஓ. கே. உபைதுல்லாவும் அந்த ஏட்டின் இணையாசிரியர்களாக இருந்தனர். திரு. உபைதுல்லா அவர்கள் இந்தோனேசியாவில் உள்ள இந்திய சுதந்தரக் கழக வானொலி நிலையத்துக்குப் பணி ஆற்றச் சென்ற பிறகு திரு. சின்னையா அவர்களே அந்த ஏட்டின் முழு ஆசிரியப் பொறுப்பையும் மேற்கொண்டு அதனைச் சிறப்பாக நடத்தினர்.

அதே காலத்தில் நடைபெற்ற இந்திய சுதந்தரக் கழகத்திலும் திரு. சின்னையா அவர்கள் பங்கு பெற்றுக் காலஞ்சென்ற டாக்டர் மஜூம்தார் திரு. வெ. லெட்சுமணன் ஜே. பி. ஆகியோருடன் சேர்ந்து தீவிரமாகப் பணியாற்றினர்.

1948ஆம் ஆண்டில் இவர் மீண்டும் தமிழகத்திற்குச் சென்றபோது பெரியார் ஈ. வெ. ரா., அறிஞர் அண்ணா, ஈ. வெ. கி. சம்பத், குத்தூசி குருசாமி ஆகியோருடனும் தொடர்புகொண்டு அரும்பணிகள் ஆற்றினர்.


மீண்டும் சிரம்பான் திரும்பிய திரு. சின்னையா அவர்கள் தமது பொதுப்பணிகளைத் தொடர்ந்து நிறைவேற்றி வந்ததுடன் தமிழர் திருநாள் கொண்டாடும் முயற்சிகளிலும் பெரிதும் ஈடுபட்டார். 1955ல் சிரம்பானில் தமிழர் திருநாளைத் தொடக்கி வைத்ததுடன் 1964 வரை சிரம்பான் தமிழர் திருநாள் நிகழ்ச்சிகள் வெற்றிகரமாக நடைபெற உறுதுணையாக இருந்தார்.

இந்நாட்டில் தோன்றிய பல தமிழ்ப் பத்திரிகைகளுக்கு இவரது ஆதரவு பேரளவு இருந்து வந்ததை அனைவரும் அறிவர். தவிர சில சஞ்சிகைகளையும், நூல்களையும் குறைந்த விலையில் அச்சிட்டுக் கொடுத்தும் உதவி புரிந்துள்ளார்.

1970ல் திரு. சி. வடிவேல் அவர்களின் "இருண்ட உலகம்" சிறுகதைத் தொகுப்பைத் தமது சொந்தச் செலவில் அச்சிட்டு வெளியிட்டார். எழுத்தாளர் சங்கம் நடத்திய அந்த நூல் வெளியீட்டு விழாவில் மாண்புமிகு அமைச்சர் டான்ஸ்ரீ மாணிக்கவாசகம் முன்னிலையில் திரு. முருகு சுப்பிரமணியன் அவர்கள் திரு. இராம. சின்னையாவுக்கு பொன்னாடை போர்த்திச் சிறப்புச் செய்தார்.

ஏறத்தாழ அரை நூற்றாண்டுக் காலம் சமுதாயப் பணியாற்றிய திரு. இராம. சின்னையாவின் மறைவு, மலேசியத் தமிழ் மக்களுக்கு—குறிப்பாக நெகிரி செம்பிலான் தமிழர்களுக்கு ஈடுகட்ட முடியாத இழப்பாகும்.

(திரு. சி. வி குப்புசாமி அவர்களின் கட்டுரையிலிருந்து)



"தமிழ்மறை" என்றும், "மூவர் தமிழ்" என்றும் சிறப்பித்துச் சொல்லப்படும் தேவாரத் திருமுறைகளைத் தோத்திர நூலாகக்கொண்டு இறைவழிபாட்டுக்குப் பயன்படுத்துவதைத் தமிழ் மக்கள் அனைவரும் நன்கு அறிவர். இந்தத் தமிழ்மறையைப் பழைய பண்முறைகளுக்கேற்ப இக்கால இன்னிசைகளோடு சைவ மெய்யன்பர்கள் திருக்கோயில்களிலும், பொதுமேடைகளிலும் உருக்கத்தோடு பாடி வருவதையும் நாம் நேரில் காண்கின்றோம். எனினும் அந்தத் திருமுறைகளை இலக்கிய நூல்போல் எண்ணிப் பொருளுணர்ந்து படித்து மகிழும் பழக்கத்தினையுடையோர் நம் நாட்டில் மிகவும் அருமையாகவே காணப்படுகின்றனர். தேவாரத் திருமுறைகளில் உள்ள எல்லாப் பாடல்களையும் படித்துப் பொருள் உணர்தல் அரிதாயிருப்பினும் குறைந்த கல்வி அறிவுடைய பொதுமக்களாலும் பொருளுணர்ந்து இன்புறத்தக்க பல பாடல்கள் உள.

சங்க இலக்கியங்களையும் பிற்காலக் காவியங்களையும் கற்று மகிழ விரும்பும் தமிழ் இளைஞர்களுக்கும் இந்தத் தமிழ்மறை ஒரு சிறந்த வழிகாட்டியாக இருத்தலைப் பலர் எண்ணிப் பார்த்துப் பயன் அடைய விழையாமலிருப்பது பெரிதும் வருந்தத்தக்கதேயாகும். சங்க நூல்களிலே காணப்படும் "இயற்கை நவிற்சி" போன்ற அணிகளும், பிற்காலக் காவியங்களில் காணப்படும் "இல் பொருள் உவமை" போன்ற அணிகளும் இந்தத் தமிழ்மறையில் பல இடங்களிலும் அமைந்திருத்தலைத் தமிழ் இளைஞர்கள் படித்துப் பயனடைதல் வேண்டும்.

–பேராசிரியர் மயிலை. சிவமுத்து

பால்மரக் காட்டினிலே

அகிலன்

பளீரென்று குப்புசாமியின் கன்னத்தில் ஓர் அறை விழுந்தது. அறைந்தவன் கணேசன்தான். "டேய் சாவு குருவி! அப்படீன்னு உனக்கென்னடா இங்கே வேலை? யாருடா உன்னை இங்கே கூப்பிட்டா?" என்று ஆத்திரத்தோடு திருப்பிக் கத்தினான்.

முறைத்தபடி கன்னத்தைத் தடவிக் கொண்டே அங்கிருந்து எழுந்தான் குப்பன். இன்னும் சற்று அங்கே தங்கினால், ஆளுக்கு ஆள் அவனைப் போட்டுப் புரட்டி எடுத்து விடுவார்கள் போல் தோன்றியது. கிராணியின் ஆள் என்பதால் மற்றவர்களுக்கு அவனிடம் இது வரை இயல்பாகவே ஒரு வகை அச்சம் இருந்தது. ஆனால் நோட்டீஸைக் கண்ட பிறகு யாருக்கும் அவர்கள் பயந்து நடுங்கத் தயாராக இல்லை.

ஒரு வேலைத் திட்டத்தை அங்கே வகுத்துக் கொண்டார்கள் இளைஞர்கள். அந்தத் தோட்டத்தில் கூட்டுறவுக்காக யார் யார் உழைப்பது, அக்கம்பக்கத்துத் தோட்டங்களுக்கு யார் யார் செல்வது, தலைநகர் கோலாலம்பூரில் உள்ள கூட்டுறவுத் துறையினருடன் யார் தொடர்பு கொள்வது என்றெல்லாம் வேலைகளைப் பிரித்துக் கொண்டார்கள். பாலன் சொல்லியபடியே எல்லாரும் உழைப்பது என்று உறுதி எடுத்துக்கொண்டு அங்கிருந்து புறப்பட்டார்கள்.

பாலனுடன் கடையை விட்டு வெளியே வந்த கணேசன், "நீ இங்கே வந்தது நல்லதாப் போச்சு. இல்லேன்னா தலைக்குத் தலை பேச்சுத்தான் மிஞ்சியிருக்கும்" என்றான்.

"நானும் எங்க தோட்டத்திலே முயற்சி பண்றேன். இன்னைக்கு இங்கே வந்தது, நாளைக்கு அங்கே வராதுன்னு என்ன நிச்சயம்? சொல்லிப் பார்க்கிறேன். ஆனால் நம்மவங்களே புகுந்து நல்ல முயற்சியைக் கலைச்சிடாமல் இருக்கணும்."

அங்கிருந்து அவர்கள் கிளம்பும் போது மணி மூன்று. வேலைக்குப் போயிருந்த தொழிலாளர்கள், பால் நிறுத்துக் கொடுத்துவிட்டுத் தங்கள் வீடுகளுக்குத் திரும்பிக்கொண்டிருந்தார்கள்.

"எங்க வீட்டிலே சாப்பிட்டுப் போகலாம் வா" என்று பாலனைக் கூப்பிட்டான் கணேசன்.

"என்னோட அக்கா வீட்டுக்குப் போகணும்; இன்னொரு நாள் வர்ரேன்."

அவர்கள் பிரிந்தார்கள்.

லட்சுமியின் வீட்டுக்கு அருகில் பாலன் நெருங்கியபோதே அவனுடைய மைத்துனன் கருப்பையாவின் குரல் அங்கே உரத்துக் கேட்டது. லட்சுமியை எதற்காகவோ அவன் வாயில் வந்தபடி திட்டிக் கொண்டிருந்தான்.

"என்ன அத்தான், சௌக்கியமா?" என்று கேட்டுக்கொண்டே உள்ளே நுழைந்தான் பாலன். அங்கே கிடந்த மரப் பெஞ்சியில் உட்கார்ந்தான்.

"வாங்க வாத்தியாரே, வாங்க!" என்று பக்கத்தில் வந்து உட்கார்ந்தபடி "மீன் குழம்பு வைக்கச் சொன்னா, கத்திரிக்காய்க் குழம்பு வச்சிருக்கா உங்க அக்கா; இவ பண்றது ஒண்ணும் சரியில்லே" என்று சலித்துக் கொள்ளத் தொடங்கிவிட்டான் கருப்பையா.

அவர்களுக்கு மிஞ்சியிருந்தது மூன்று குழந்தைகள். பையன்கள் இருவரும் தெருவுக்கு விளையாடப்போயிருந்தார்கள். பெண் குழந்தை தொட்டிலில் உறங்கிக்கொண்டிருந்தது. அடுப்படியில் வேலை செய்துகொண்டிருந்த லட்சுமி முகமலர்ச்சியோடு பாலனை வரவேற்றாள். வீட்டில் எல்லாரையும் விசாரித்தாள்.

கண்களில் உயிரை வைத்துக் கொண்டு எலும்புக்கூடாய் நடமாடிய லட்சுமியைக் கண்டவுடன் பாலனுக்கு என்னவோ போலிருந்தது. வயது அவளுக்கு இருபத்து நாலுதான். வருஷந் தவறாமல் குழந்தைகள். அரை குறைப் பிரசவங்களில் போனவை போக மிஞ்சி இருந்தவை மூன்று.

கருப்பையாவிடம் திரும்பி, ''நோட்டீஸ் குடுத்தாச்சே, என்ன செய்யப் போறிங்க?" என்றான்.

"விட்டுத் தள்ளு! மரம் வச்சவன் தண்ணி ஊத்தறான்!" அவன் வாயிலிருந்து சீனர் கடைக் கள்ளச் சாராயம் "சம்சு"வின் நெடி குப்பென்று வீசியது.

லட்சுமி "கேட்டியா உங்க அத்தான் பேசறதை" என்பதுபோல் பாலனை உற்றுப் பார்த்தாள்.

"ஏதாச்சும் செய்யணுமே! ஒரு மாசந்தானே இருக்கு?" என்றான் பாலன்.

"என்ன செய்யச் சொல்றே?" என்று திருப்பிக் கேட்ட கருப்பையா. "எங்கே யாச்சும் போகவேண்டியதுதான். வேலை கிடைச்சாச் செய்யணும்; இல்லேன்னா தெருவிலே பட்டினி கிடந்து சாகணும்" என்றான்.

"குடும்பம், குழந்தை குட்டிங்க?"

"வேணும்னா இப்பவே நீ உங்க அக்காளையும் குழந்தைகளையும் உன்னோட கூட்டிக்கிட்டுப் போயிடு."

இதைக் கேட்டுத் திடுக்கிட்டுப் போனான் பாலன்.

"வருஷந் தவறாமல் புள்ளை பெக்கறதுலே குறைச்சல் இல்லே. அதுகளுக்குச் சோறு போடறதுக்கு மட்டும் மாமனார் வீடு வேணுமாம். இந்தச் சன்மத்திலே அது நடக்காது!" குறுக்கிட்டுப் பேசினாள் லட்சுமி.

கருப்பையாவின் கை லட்சுமியை அடிப்பதற்காக பரபரத்தது. பக்கத்திலே பாலன் இருந்ததால் அன்றைக்கு அவள் தப்பினாள். அதற்குள் தெருவுக்குப் போயிருந்த பையன்கள் இருவரும் வந்து பாலனைச் சூழ்ந்து கொண்டார்கள். அவர்களுக்காகத் தான் வாங்கி வந்திருந்த பிஸ்கோத்துகளை அவர்களிடம் நீட்டினான் பாலன்.

"கையலம்பிவிட்டு வாங்க, சாப்பிடலாம்" என்று அழைத்தாள் லட்சுமி. பிங்கான் தட்டுகளில் சோற்றைப் பரிமாறிக் குழம்பை ஊற்றினாள். முணுமுணுத்துக்கொண்டே கருப்பையா பாலனுடன் சாப்பிட உட்கார்ந்தான். குழந்தைகளும் ஆளுக்கொரு தட்டின் முன் அமர்ந்தார்கள்.

தன் தம்பிக்கு ஏதும் தனியாகச் செய்து போட முடியவில்லையே என்ற மனக்குறை லட்சுமிக்கு. அடிக்கடி வராதவன் வந்திருக்கிறான். ஆனால் கருப்பையாவுக்கோ தன் வாய்க்கு ருசியாகத் தட்டில் மீனோ, கருவாடோ, கறியோ இல்லையே என்ற ஆத்திரம். மரக்கறிச் சாப்பாட்டுக்கும் அவனுக்கும் அவ்வளவாக ஒத்துவராது.

சாப்பாடு முடிந்தவுடன் பக்கத்துக் கடைக்கு வெற்றிலை பாக்கு வாங்கிவரக் கருப்பையா புறப்பட்டான். குழந்தைகளும் தெருவுக்குப் போனார்கள். அந்த வேளை பார்த்து ஒரு பத்து டாலர் நோட்டை எடுத்து லட்சுமி மறுத்தும் கேளாமல் அவள் கையில் திணித்தான் பாலன்.

"வர்ர ஞாயித்துக்கிழமை குழந்தைங்களோட வீட்டுக்கு வந்து சேர். வீணாக் கவலைப்படாதே. கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்தி இந்தத் தோட்டம் கைமாறாமல் இருக்கும்படி முயற்சி பண்ணிக்கிட்டிருக்கோம்"

தொட்டிலில் கிடந்த குழந்தையைத் தூக்கி அவனிடம் நீட்டினாள் லட்சுமி. வாங்கி அதற்கு முத்தம்கொடுத்து அதன் உடல் நிலையைக் கவனித்தான். அதுவும் அவ்வளவு ஆரோக்கியமாக இல்லை. அந்தக் குடும்பத்தில் இரண்டு பேரும் உழைத்துச் சம்பாதித்தார்கள். செட்டும் சிக்கனமுமாய் வாழத் தெரிந்தவள்தான் லட்சுமி. அவர்கள் இதைவிட எவ்வளவோ நன்றாக வாழ்ந்திருக்க முடியும், ஆனால்...?

அந்த வேளையில் அங்கே வெற்றிலை பாக்குடன் திரும்பிவந்த கருப்பையாவைப் பார்த்துவிட்டுத் தனக்குள் நீண்ட பெருமூச்சுவிட்டான் பாலன்.

குழந்தையை லட்சுமியிடம் கொடுத்துவிட்டு, 'மாமா வீட்டுக்குப் போயிட்டு அப்படியே கிளம்பறேன், ஞாயித்துக்கிழமை வந்து சேருங்க" என்று சொல்லி விடைபெற்றுக்கொண்டான்.

அவனோடு தெருவுக்குவந்த அவனைத் தொடர முயன்றான் கருப்பையா. எதற்காக அவன் தொடர்கிறான் என்பது பாலனுக்குத் தெரியாமல் இல்லை,

"சின்னப் பயலுக்குச் சட்டைத்துணி வேணும்னு அடம் புடிக்கிறான். ஏதாச்சும் சில்லறை இருந்தாக் குடுத்திட்டுப் போயேன்" என்று தலை சொறிந்தபடி கேட்டான் கருப்பையா.

பாலனுடைய சட்டைப் பையிலிருந்து ஐந்து வெள்ளி நோட்டொன்று கைமாறியது. கருப்பையா அதை வாங்கிக்கொண்டவுடன் அங்கிருந்து நழுவி விட்டான். அந்தப் பணம் நேரே சீனர் கடைக் கள்ளச் சாராயத்துக்குத்தான் போய்ச் சேரும் என்பது பாலனுக்குத் தெரியாமல் இல்லை.

மாடாய் உழைப்பது. வேளை வேளைக்குக் கறியும் சோறுமாய் உள்ளே தள்ளுவது. கள்ளச் சாராயமும் தென்னங்கள்ளுமாய் மாறி மாறிக் குடிப்பது. இரவு வேளைகளில் குழந்தை குட்டிகளுடன் படுத்துக் கிடக்கும் லட்சுமிக்குத் தொல்லை கொடுப்பது -இந்த வேலைகளின் மொத்த இயந்திரமே கருப்பையா.

லட்சுமிக்காகத் தவித்த மனத்தோடு பழனியின் வீட்டுக்குள் நுழைந்தான் பாலன்.

4. கண்ணம்மாவின் கேள்வி

பழனியின் வீட்டு மேல்தாழ்வாரத்தில் பாலனின் வரவை எதிர்பார்த்து இரண்டு மர நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. ஒன்றில் பாலனை உட்காரச் சொல்லி விட்டு மற்றதில் பழனி அமர்ந்துகொண்டான். கண்ணம்மாவின் அக்கா காமாட்சி, மாடி அறைக் கதவோரம் நின்றிருந்தாள். பழனியின் மனைவி தங்கம் நாற்காலிக்குப் பக்கத்தில் தரையில் வந்து உட்கார்ந்தாள். பாலனின் விழிகள் அங்கே கண்ணம்மாவைத் தேடிப் பார்த்தன. கீழ்ப்புறமும் அவள் இல்லை என்பதைத் தன்னுடைய சைக்கிளை வைக்கும்போதே அவன் கவனித்தான். மேலே அறைக்குள்ளேயும் அவள் தென்படவில்லை.

தேநீர்க்கடையில் இளைஞர்களைச் சந்தித்துப் பேசிய விவரத்தைப் பழனியிடம் கூறினான் பாலன். இளைஞர்கள் மட்டும் கூட்டுறவுக்காக உழைத்தால் போதாது என்றும், வயதில் முதிர்ந்த தொழிலாளர்களையும் அதில் ஈடுபடுத்த வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டான்.

"இந்தத் தோட்டம் இப்போ கை விட்டுப் போனா, நம்ம வாழ்க்கையே அத்தோட போயிடும். ஆபத்து வந்த பிறகாவது நம்மவங்களுக்கு அதிலேருந்து தப்பறதுக்கு வழி தெரியணும்" என்றான் பாலன்.

பழனிக்கு இந்தக் கூட்டுறவுத் திட்டத்தில் அரைகுறை நம்பிக்கைதான் ஏற்பட்டது; முழு நம்பிக்கை ஏற்படவில்லை.

"பொன் விளையற பூமியான இந்த மலைநாட்டுக்கு வந்த பிறகும் நம்மவங்க கஷ்டப்படறாங்கன்னா அதுக்காக வேற யாரையும் குத்தம் சொல்ல முடியாது" என்றான் பழனி; "நம்மவங்கதான் காரணம்; அடுத்தவங்களைப் பார்த்தாவது ஒத்துமையா, செட்டும் சீருமா வாழ்ந்து முன்னேறணுங்கிற ஆசை கிடையாது!"

"முடிஞ்சவரையிலே நீங்க எடுத்துச் சொல்லிப்பாருங்க!"

"நான் ஒரு விசயம் கேள்விப்பட்டேன். ஒருவேளை கூட்டுறவிலே நம்மவங்க சேர்ந்திட்டா என்ன செய்யிறதுன்னு தோட்டத்தை வாங்கப்போற சின்ன முதலாளிங்க அதைக் கலைக்கிறதுக்கும் வழி செஞ்சிருக்காங்களாம்!"

இதைக் கேட்டுத் திடுக்கிட்டான் பாலன். சற்று முன்பு தேநீர்க் கடையில் குப்புசாமி என்ற இளைஞன் குறுக்கிட்டுப் பேசியது அவன் நினைவுக்கு வந்தது. எடுத்த எடுப்பிலே முட்டுக்கட்டை போடும் திருப்பணியும் ஒரு புறம் நடக்கிறது போலும்!

"அப்படீன்னா ரொம்பவும் கடுமையா முயற்சி செய்ய வேண்டியதுதான்" என்றான் பாலன். எதிர்ப்பைக் கண்டு அவன் கலங்கினாலும் அதற்காக அவன் பின்வாங்குவதாக இல்லை.

அப்போது கையில் ஒரு பழத் தட்டுடன் மரப்படிகளில் ஏறி மேலே வந்துகொண்டிருந்தாள் கண்ணம்மா. அதற்குள் அவள் குளித்து முழுகி உடைமாற்றிக்கொண்டிருந்தாள். மிகவும் கவனமாகத் தன்னை அலங்கரித்துக்கொண்டிருந்தாள். பெரிய செவ்வந்திப் பூவை ஒத்த மஞ்சள் நிறமலர் ஒன்று அவள் கூந்தலிலிருந்து எட்டிப் பார்த்தது.

பழத் தட்டைக் கொண்டு வந்து பாலனிடம் நீட்டினாள் கண்ணம்மா. வாழைப்பழங்கள், மங்குஸ்தான் பழங்கள். ரம்புத்தான் பழங்கள்! அவற்றை வாங்கி வருவதற்காகவே அவள் கடைக்குச் சென்றிருக்க வேண்டும் என்று பாலனுக்குத் தோன்றியது.

"ரம்புத்தான்னா உங்களுக்கு ரொம்பப் பிடிக்குமே!"

செக்கச் சிவந்த நிறத்தில் கோழி முட்டையை ஒத்த வடிவத்தில் நீண்ட காம்புகளுடன் விளங்கிய அந்தப் பழம் பார்ப்பதற்கும் கண்ணைப் பறித்தது; சுவைப்பதற்கும் இனிமையாக இருந்தது. தோலைக் கீறி அகற்றிவிட்டு உள்ளே பனம் நுங்கின் சுளைபோல் இருந்த பழத்தை எடுத்துச் சாப்பிட்டான். மற்றவர்களிடம் பழத்தட்டை நீட்டினான்.

சற்று நேரத்தில் கிண்ணத்தில் சூடாகக் காப்பி கொண்டுவந்தாள் கண்ணம்மா. அதையும் வாங்கிப் பருகினான். கைக்கடிகாரத்தைத் திருப்பிப் பார்த்துவிட்டு அங்கிருந்து புறப்படுவதற்காக எழுந்தான்.

"ஞாயிற்றுக்கிழமை வர்றேன்னு சொன்னீங்களே, நினைவிருக்கா?"

அவள் அவனிடம் தனிமையில் பேச வேண்டுமென்று சொல்லியிருந்தது அவனுடைய நினைவுக்கு வந்தது. ஆனால் கூட்டுறவு முயற்சிக்காக அவன் அந்த ஞாயிற்றுக்கிழமையை எப்படியும் ஒதுக்கியாகவேண்டும். இளைஞர்களுடன் தோட்டங்களில் சுற்றித்திரிய வேண்டிய நாள் அது.

"திடீர்னு குறுக்கே சில வேலை வந்திருக்கு..." என்று இழுத்துக்கொண்டே கண்ணம்மாவின் முகத்தை நோக்கினான் பாலன். அதுவரை மலர்ச்சியுற்றிருந்த அவள் முகம் நொடிப்போதில் சுருங்கியது. அதையும் பாலன் கவனிக்கத் தவறவில்லை.

"இப்போ வேணும்னா புறப்பட்டு என்னோட வீட்டுக்கு வா. நாளைக்கு ஒரு நாள் வேலைக்குப் போகவேண்டாம். நாளைக்குச் சாயங்காலம் இங்கே திரும்பி



வந்திடலாம்!"

கண்ணம்மா ஒருகணம் யோசித்தாள்.

"வீட்டுக்கு நான் வரலே. நீங்க போற வழியிலே என்னைப் பள்ளிக்கூடத்துக்கிட்டே விட்டுடுங்க. நான் என் சிநேகிதி கமலாவைப் பார்க்கிறதாச் சொல்லியிருக்கேன். அவ காத்துக்கிட்டிருப்பா!" என்றாள்.

பால் அரைக்கும் பாக்டரியில் வேலை செய்யும் தொழிலாளர் சுப்பையாவின் மகள் கமலா; அவளோடு ஒன்றாகப் படித்தவள். அவளுடைய வீடு தோட்டத்தின் முகப்பில் பள்ளிக்கூடத்துக்கு அருகே இருந்தது.

"சரி, வா போகலாம்!"

இருவரும் மரப்படிகளில் இறங்கி வீட்டின் கீழ்ப்பகுதிக்கு வந்தார்கள். சைக்கிளை எடுத்தான் பாலன். கண்ணம்மா காரியரில் ஏறி உட்கார்ந்து கொண்டாள். சைக்கிளில் ஏறி வேகமாய் மிதித்தான் பாலன். லயனைத் தாண்டி ரப்பர் மரக்காட்டின் செம்மண் பாதைக்குச் சைக்கிள் வந்தவுடன் மர நிழலில், - மென்காற்றில் சக்கரங்கள் மெதுவாய் உருளத் தொடங்கின,

நோட்டீஸ் தந்த வேதனைக்கிடையிலும் இது குதூகலம் நிறைந்ததோர் அநுபவமாகத் தோன்றியது பாலனுக்கு. கண்ணம்மாவின் மூச்சுக்காற்று பாலனின் முதுகில் படர்ந்துகொண்டிருந்தது. பல ஆண்டுகளுக்குப் பிறகு இப்போதுதான் அவள் அவனோடு சைக்கிளில் வரத் துணிந்திருக்கிறாள். கண்ணம்மா பெரியவளான பிறகு அவனோடு அவள் நெருங்கிப் பழகுவதில்லை. "சைக்கிளில் வர்ரியா?" என்று அவனாக அவளை அழைத்தபோது கூட அவள் நாணத்தோடு மறுத்து விடுவாள்.

இன்று அவளுடைய துணிச்சலான போக்கு அவனுக்கே வியப்பளித்தது. பின்புறம் ஒயிலாக அமர்ந்து தனக்குள் ஏதோ ஒரு பாட்டை முணுமுணுத்துக்கொண்டு வந்தாள் கண்ணம்மா. அவன் அவளைப் பற்றி நினைத்தான்.

அவனுடைய முறைப்பெண் அவள். கண்ணம்மா பிறந்ததிலிருந்தே அவளைப் பாலனுக்கென்று இரு வீட்டாரும் முடிச்சுப் போட்டுவிட்டார்கள். கண்ணம்மாவின் அக்காள் காமாட்சிக்கும் பாலனுடைய மூத்த அண்ணு முருகனுக்கும் இதே போல் ஒரு பேச்சு இருந்தது. ஆனால் முருகனுக்கும் பாலனுக்கும் இடையிலிருந்த முத்துவை விட்டுவிட்டு ஏன் இப்படித் தனக்கும் கண்ணம்மாவுக்கும் முறை வைத்தார்கள் என்று பாலனுக்கே தெரியவில்லை. பெரியவர்களின் பேச்சுச் சிறு குழந்தையாக இருந்த போதே இருவரிடமும் பரவி விட்டது. அந்த எண்ணத்தின் ஆதிக்கத்திலிருந்து இருவரும் விடுபடவும் விரும்பவும் இல்லை; அது அவர்களை விட்டு விடவும் இல்லை. வயதைப் போலவே அதுவும் வளர்ந்து வந்தது.

"பள்ளி ஆசிரியர் வேலை பார்த்துக் கொண்டே இன்னும் மேலே படிச்சு முன்னுக்கு வரணும். அண்ணன் முருகனைப் போலே நிறையச் சம்பாதிக்கணும். கண்ணம்மாவைக் கல்யாணம் செய்து கொண்டு ஏதாவது ஒரு நகரத்திலே குடும்பம் நடத்தணும். இந்தத் தோட்டக்காட்டை விட்டுத் தலை முழுக வேண்டியதுதான்." இப்படியெல்லாம் பல முறை கனவு கண்டிருக்கிறான் பாலன்.

கண்ணம்மாவின் எதிர்காலம் பால் மரத்தைச் சீவுவதாக இருக்கக்கூடாது. அதற்காக அவள் பிறந்தவள் அல்ல.

பின்னாலிருந்து கண்ணம்மாவின் குரல் கேட்கவே, சைக்கிளில் இருந்தபடியே அவளைத் திரும்பிப் பார்த்தான் பாலன்.

"என்னமோ சொன்னியே?"

"நான் ஒண்ணும் கமலத்தைப் பார்க்கப் போகலே. உங்களோட பேசணுங்கிறதுக்காகத்தான் வந்தேன்."

வியப்போடு அவளைப் பார்த்துச் சிரித்து விட்டுச் சைக்கிளை நிறுத்தினான் பாலன். இருவரும் இறங்கி நடந்தார்கள். மேட்டருவிப் பக்கம் திரும்பினார்கள்.

முற்பகல் நேரத்தில் தொழிலாளர்கள் மரம் சீவும்போதே வெறிச்சோடிக் கிடக்கும் காடு அது. இந்த மாலைவேளையில் அங்கே கண்ணுக் கெட்டிய தூரம் வரையிலும் எந்தப்பக்கத்திலும் யாருமே தென்படவில்லை. அருவிக்கு இடப்புறமாக ஓர் ஒதுக்குப் புறத்தில் புதர் மண்டிக் கிடந்தது. அதைத் தாண்டி மறுபக்கத்துக்குச் சென்றார்கள். ஆள் உயரத்துக்கு வளர்ந்திருந்த லாலான் புல் இயற்கையாகவே சுற்றி வளர்ந்து ஒரு வேலி எழுப்பியிருந்தது. இடைவெளியில் இருந்த சமவெளியில் பச்சை நிற மெத்தை பரப்பியதுபோல் சிறு புல் அடர்ந்திருந்தது.

அந்த இடத்துக்குப் போய்ப் புல் தரையில் தன் முழங்கால்களைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்துவிட்டாள் கண்ணம்மா. அருகே ரப்பர் மரங்கள் இல்லை. எதிரில் சற்றுத் தொலைவில் சில காட்டு மரங்கள் வளர்ந்திருந்தன. பாலன் தன் சைக்கிளை அங்கே வைத்து விட்டு, புல் தரைக்குத் திரும்பி வந்தான்.

"லாலான் புல் மண்டிப் போய், சிறு வீடு மாதிரியே அமைஞ்சிருக்கே!" என்றான் பாலன்.

"இந்த இடத்தைப் பார்க்கிறப்ப எல்லாம் எனக்கு உங்களோட நினைவு வராமல் இருக்காது" என்றாள் கண்ணம்மா; "இனிமே ஒரு மாசத்துக்குத்தான் இந்த இடத்தைப் பார்க்கலாம்; அப்புறம்...அப்புறம்..."

அவளால் அதற்குமேல் பேச முடியவில்லை.

திடீரென்று கண்ணம்மா தன் தலையை முழங்கால்களைக் கட்டியிருந்த தன் கரங்களிடையே புதைத்துக் கொண்டாள். தலையைத் தூக்கவே இல்லை. அவள் கேசத்திலிருந்த அந்த ஒற்றை மலர் மட்டிலும் மெல்ல நடுங்கியது.

"கண்ணம்மா!"

இப்போது அவள் மெல்லுடல் முழுவதுமே நடுங்குவதைக் கண்ணுற்றான் பாலன்.

"என்ன கண்ணம்மா இது?"

அப்போதும் அவள் தலையைத் தூக்கவில்லை.

பாலனின் கண்கள், எதிரில் தென்பட்ட காட்டு மரம் ஒன்றில் பதிந்தன. மரத்தைச் சுற்றி வளைத்துக்கொண்டிருந்தது ஒரு பசுங்கொடி. அந்தக் கொடியின் ஒரு கிளை,மரத்தின் ஒரு கிளையை நோக்கி வளைந்து தொங்கியது. கொடியால் மரத்தின் கிளையைப் பற்ற முடியவில்லை. காற்று அதை அலைக்கழித்துக் கொண்டிருந்தது.

மரத்தைச் சுற்றிப் படர்ந்து கொழு கொம்பைத் தேடிக்கொண்டுவிட்ட பசுங்கொடிக்கே இந்த நடுக்கமென்றால் இன்னும் கொழு கொம்பைத் தேடிக் கொள்ளாத கண்ணம்மா நடுங்குவதில் வியப்பென்ன? திடீரென்று எங்கிருந்தோ முளைத்து விட்ட நோட்டீஸ் அவள் நம்பிக்கையின் ஆணிவேரையே அறுத்துக் கொண்டிருக்கிறதா?

சந்தனத்தின் நிறம் அவளுக்கு;

மலேசியர்களின் ஆயுட்காலம்

மலேசியர்களின் ஆயுள், சுதந்திரத்திற்குப் பிறகு உயர்ந்திருக்கிறது. 1957—1975க்கு இடையில் ஆண்களின் ஆயுள் 16 விழுக்காடும் பெண்களின் ஆயுள் 21 விழுக்காடும் உயர்ந்திருக்கிறது.

வயது அடிப்படையில் பார்க்கும்போது ஆண்களின் ஆயுள் 56 வயதிலிருந்து 64 வயதிற்கு உயர்ந்திருக்கிறது.

பெண்களின் ஆயுள் 58 வயதிலிருந்து 70 வயதிற்கு உயர்ந்திருக்கிறது.

பெரிய பெரிய விழிகள்; தளதளவென்ற உடற்கட்டு; அங்கமெல்லாம் பொங்கிப் பூரித்து வழிந்தோடும் புதுவனப்பு.

ஆனால் அந்த வேளையில் அவள் வேதனையால் வெந்து கருகிக்கொண்டிருந்தாள் என்பதை அவன் கண்டு கொண்டான். அவளுக்கு எப்படி ஆறுதல் சொல்வதென்றும் அவனுக்குப் புரியவில்லை.

"என்ன கண்ணம்மா இது? நான் ஒருத்தன் இல்லேன்னு நீ கலங்கறது சரிதான்."

கண்ணம்மா மெல்லத் தன் தலையை உயர்த்தித் தன் விழிகளை அவன் முகத்தில் பதித்தாள். அவள் விழிகளில் அரும்பு விட்டிருந்த நீர் மணிகள் முத்து முத்தாய்க் கன்னங்களில் வழிந்தன.

"என்மேலே கோபமா உனக்கு?"

"நீங்களும் உங்க பெரியண்ணனைப் போலே நடந்துக்க மாட்டிங்களே?"

தூக்கிவாரிப்போட்டது பாலனுக்கு. அவளுடைய பெரிய அண்ணன் முருகன் எப்படி நடந்துகொண்டு விட்டான்?

"யார் முருகனையா சொல்றே?"

"ஆமா."

முருகன்தான் ஒரு வகையில் பாலனுக்கு வழிகாட்டியாக இருந்தவன். சிம்னி விளக்கருகிலும் அரிக்கேன் விளக்கருகிலும் அமர்ந்து இரவெல்லாம் படிப்பான். பத்து மைல் தொலைவில் இருந்த ஆங்கிலப் பள்ளிக்குத் தினந்தோறும் பஸ்ஸில் போய் வருவான். லயனிலிருந்தும் பஸ் வரும். நெடுஞ்சாலைக்குப் போய் வருவதற்குத் தினமும் ஆறு மைல் நடக்க வேண்டும். அப்படியெல்லாம் சிரமப்பட்டுப் படித்து முன்னுக்கு வந்தவன் அவன். கோலாலம்பூரில் இப்போது அவன் ஆங்கிலப் பள்ளி ஆசிரியர். அத்துடன் ஓய்வு நேரத்தில் மேல் படிப்பும் படித்து வருகிறான். "எப்படியாச்சும் நம்ப படிச்சு முன்னுக்கு வந்துறணும்; நம்மளோட குடும்பத்தைக் கரை சேர்த்தறது நம்ப கையிலே தான் இருக்கு" என்று பாலனிடமே அவன் அடிக்கடி சொல்லியிருக்கிறான்.

"அவர் இப்போ என்ன செய்திட்டார்?"

"கோலாலம்பூரிலேயே ஒரு பணக்கார வீட்டுப் பெண்ணோடே பழகிகிட்டிருக்காராம். கல்யாணமும் நடக்கப் போகுதாம்.

இந்தச் செய்தியைப் பாலனால் நம்பவே முடியவில்லை.

"இருக்காது கண்ணம்மா. நம்ம குடும்பத்தை அவர் மறந்திடமாட்டார். அப்படி யெல்லாம் ஒண்ணும் நடக்கிடாது."

"எங்க தோட்டத்துப் பொண்ணு ஒருத்தி இப்போ கோலாலம்பூரிலே ஒரு வீட்டிலே வேலை செய்யறா. அந்த வீட்டுப் பொண்ணைத்தான் உங்க அண்ணன் பழகறாராம். அந்தப் பொண்ணுக்கு உங்க அண்ணன் யாருங்கறது தெரியும்."

"காமாட்சிக்கு இது தெரியுமா?"

"எங்க வீட்டிலே யாருக்குமே இது தெரியாது. சொல்ல வேண்டாம்னு நானே அந்தப் பொண்ணுகிட்டச் சொல்லிட்டேன்."

காமாட்சியிடம் முருகன் அன்பு கொண்டிருந்ததும் அவளை அவன் கல்யாணம் செய்துகொள்ள விரும்பியதும் பாலனுக்கு நன்றாகத் தெரியும். காமாட்சி படிப்பில் கெட்டிக்காரியாக இல்லாவிட்டாலும், குடும்பப் பாங்கில் கைதேர்ந்தவள். நல்ல அழகி. அதே ஆண்டில் கல்யாணம் நடத்தலாம் என்று கூடப் பெரியவர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள்.

பாலனால் அந்தச்செய்தியை நம்பவே முடியவில்லை.

"இல்லே கண்ணம்மா; நேருக்கு நேரா இதைப்பத்தி அண்ணன் கிட்ட நான் கேக்கப் போகிறேன்."

அவனுடைய பதிலை அவள் செவிகள் ஏற்கும் நிலையில் இல்லை. அவளுடைய எண்ணமெல்லாம் இப்போது பாலன் மீதே நிலைகுத்தி நின்றது.

"அத்தான், நான்...நான்... வந்து... உங்களைத்தான் நம்பிக்கிட்டிருக்கேன்.. நீங்களும் என்னைக் கை விட்டுட்டீங்கன்னா..."

சரேலென்று அருகில் நகர்ந்து சென்று கண்ணம்மாவின் வாயைத்தனது வலக் கரத்தால் பொத்தினான் பாலன். கண்ணம்மா தன் இரு கைகளாலும் அவன் கரத்தைப் பற்றித் தன் கண்களில் ஒற்றிக்கொண்டாள். அவனுடைய விரல்களில் படிந்த அவளுடைய வெதுவெதுப்பான கண்ணீர் அவனுடைய நெஞ்சையே கசக்கிப் பிழிந்தது.

தன்னுடைய கரத்தை அவளுடைய மென் பிடியில் விட்டவாறே, அவளுடைய அளவுக்கு மீறிய கலக்கத்தின் காரணத்தைப் புரிந்து கொள்ள முயன்றான் பாலன். தன்னுடைய அண்ணன் முருகனைப் பற்றி அவள் கேள்விப்பட்ட செய்தியோடு, நோட்டீஸ் தந்த பேரதிர்ச்சியையும் அவனால் தாங்க முடியவில்லை.

"எங்களையெல்லாம் இந்தத் தோட்டத்தை விட்டுத் துரத்திட்டா, அப்புறம் நான் எப்படி உங்களைப் பார்க்கறது? எப்படி உங்களோட பேசறது?"

"அப்படியெல்லாம் நடக்காது கண்ணம்மா".

"விவரந் தெரிஞ்ச நாளா உங்களைத் தவிர யாரையுமே நான் நெனைச்சதில்லே. உங்களையேதான் கல்யாணம் பண்ணிக்கப் போறேம்னு நினைச்சு..."

தொண்டையைக் கட்டிக் கொண்டு விட்டது அவளுக்கு. மேலே ஏதும் பேச முடியவில்லை. அவன் கரத்தை விட்டுவிட்டு முகத்தை மூடிக் கொண்டு தேம்பித் தேம்பி அழுதாள்; விம்மி விம்மி அழுதாள்.

துயரத்தின் எல்லைக்கும் அவநம்பிக்கையின் எல்லைக்கும் வந்துவிட்ட அவளை எப்படித் தேற்றுவது என்று தெரியாமல் ஒரு கணம் கலங்கினான் பாலன். பிறகு மெல்ல அவளருகில் சென்று அவள் தலையின் மீது கரத்தை வைத்தான். அவள் முகத்தை அவள் கரங்களிலிருந்து விடுவிக்க முயன்றான். சட்டென்று கண்ணம்மா அவன் பரந்த மார்பில் தன் முகத்தைப் புதைத்துக் கொண்டாள். அவளுடைய கண்ணீரால் அவன் சட்டை நனைந்தது.

கண்ணம்மாளைத் தனிமையில் சந்தித்து, தங்கள் எதிர்காலம் பற்றிக் குதூகலமாய்ப் பேச வேண்டுமென்று பல முறை அவன் முன்பே நினைத்திருக்கிறான். ஆனால் அவளோடு சேர்ந்து ஆனந்தக் கனவுகள் காண நினைத்தவனுக்கு. அதற்கு மாறாக இப்போது துன்ப நினைவுகளே குமுறிக் கொண்டு வந்தன. தனிமையில் சந்திக்கும் முதற்சந்திப்பே கண்ணீரின் சங்கமமாகவா அமைய வேண்டும்?

"எனக்கு நீங்க என்ன சொல்லப் போறீங்க?" என்று கேட்டாள் கண்ணம்மா.

அவள் எதைப் பற்றிப் பேசுகிறாள் என்பதே அவனுக்குப் புரியவில்லை.

"எங்களை இவங்க இந்தத் தோட்டத்தை விட்டுப் போகச் சொல்லிட்டாங்க. நாங்க இங்கே இனிமேல் வேலை செய்யவும் முடியாது; குடியிருக்கவும் முடியாது. நீங்க என்ன செய்யப் போறீங்க?"

"அப்படி எதுவும் நடக்காமல் இருக்கறதுக்கு நான் முயற்சி செய்யறேன், கண்ணம்மா?"

"எங்களைத் துரத்திட்டா நீங்க என்ன செய்வீங்க?"

அவளுடைய நம்பிக்கை இழந்த பேச்சில் அவளுக்கிருந்த பிடிவாதம், பாலனையே நிலைகுலைய வைத்துவிட்டது. இடையில் நின்று பயமுறுத்தியதோ ஒரே ஒரு மாதந்தான். இதற்குள் தனக்கு இரண்டு மூத்த சகோதரர்களும் அவளுக்கொரு மூத்த சகோதரியும் உள்ளபோது எப்படி அவளைக் கல்யாணம் செய்து கொள்ள முடியும்?

"சொல்லுங்க. ஏன் பேச மாட்டேங்கிறீங்க?"

"அப்படியே ஏதும் நடந்திட்டா எங்க வீட்டிலே நீங்க வந்து தங்கிக்குங்க. கிடைக்கிறதை எல்லாரும் பகிர்ந்து சாப்பிடுவோம். எங்கேயாவது மாமனுக்கு ஒரு வேலை கிடைக்கிற வரையிலே உங்களைக் காப்பாத்த முடியாதா என்ன?"

"உங்க தோட்டத்துக்குள்ளே எங்களை விடுவாங்களா?"

இந்தக் கேள்வி கூர்மையான அம்பாக அவனுடைய நெஞ்சில் பாய்ந்தது. தோட்டத்து வாழ்க்கை எவ்வளவு பாதுகாப்பற்ற நிலையிலுள்ளது என்பது அவனுக்கே அப்போதுதான் புரிந்தது. அவள் கேட்ட கேள்வி நியாயமான கேள்விதான்; உண்மையான கேள்விதான்.

"எது எப்படி இருந்தாலும் உன்னை நான் மறந்திடமாட்டேன் கண்ணம்மா. கட்டாயம் மறக்கமாட்டேன் கண்ணம்மா"

"என்னைக் கைவிட்டிடமாட்டீங்களே?"

"விடமாட்டேன் கண்ணம்மா!" என்று உறுதியோடு அவள் கரத்தைப் பற்றினான் பாலன். பற்றிய அந்தக் கரத்தை இழுத்துத் தன் கண்களிலும் உதட்டிலும் மாறி மாறிப் பதித்துக் கொண்டாள் கண்ணம்மா.

பாலனின் கண்கள் எதிர் மரத்தில் தொங்கிக் கொழுகொம்புக்காக ஊசலாடிக்கொண்டிருந்த சிறு கொடியை நோக்கின. கொடியால் இன்னும் கிளையைப் பற்றிக்கொள்ள முடியவில்லை. முன்போலவே அது நடுங்கித் துடித்துக் கொண்டுதான் இருந்தது.

கண்ணம்மாவைத் தேற்றுவதற்காக, நோட்டீஸுக்கு எதிராகத் தாங்கள் எடுக்கப் போகும் நடவடிக்கைகளைப் பற்றி அவன் விரிவாகப்பேசினான். அவனிடமிருந்த எல்லையற்ற நம்பிக்கை அவளையும் சற்றே தொற்றிக் கொண்டுவிட்டது போலும்! அவளும் அவனிடம் கலகலப்பாகப் பேசலானாள்.

மாலை நேரம் மயங்கி, மர நிழல்கள் நீண்டுவிட்டன. எழுந்திருக்க மனமில்லாமல் எழுந்தான் பாலன். தன்னுடைய சைக்கிளை எடுக்கப் போனவன் ஒரு குச்சியை எடுத்து, நடுங்கிக் கொண்டிருந்த பசுங்கொடியை அருகிலிருந்த கிளையின்மேல் திருப்பிவிட்டான்.

பின்னர் கண்ணம்மா அவனருகில் வரவே, இருவரும் மெல்ல அங்கிருந்து நடந்தார்கள். பாலனின் கண்கள் அந்தக் கொடியை ஒரு கணம் கண்ணோட்டமிட்டன. கொடி இப்போது கிளையின் மேல் இல்லை. மீண்டும் கீழே நழுவி முன்போலவே துடித்துக் கொண்டிருந்தது. அதனால் ஏற்பட்ட அதிர்ச்சியை அவன் கண்ணம்மாவிடம் காட்டிக் கொள்ள விரும்பவில்லை. அவளைச் சைக்கிளில் ஏற்றிக்கொண்டு திரும்பவும் லயனுக்கு அருகில் வந்தான். இறக்கிவிட்டுத் தானும் இறங்கி நின்றான்.

இருவருக்கும் பிரிந்து செல்லவே மனமில்லை.

"இருட்டறதுக்கு முன்னாலே வீடு போய்ச் சேருங்க"

கண்ணம்மாவையும் பசுங்கொடியையும் மாறி மாறி நினைத்துக்கொண்டே கனத்த இதயத்தோடு சைக்கிளை மிதித்தான் பாலன்.

(தொடரும்)

யார் தலைவர்?

உங்களின் தலைவர்களில் நல்லோர் யார், தீயோர் யார் என்பதனை நான் உங்களுக்கு அறிவிக்க வேண்டாமா? யார் யாரை நீங்கள் நேசிக்கின்றீர்களோ அவர்களும் யார் யார் உங்களை நேசிக்கின்றார்களோ அவர்களும் அன்றி யார் யாருக்காக நீங்கள் (இறைவனிடம்) இறைஞ்சுகின்றீர்களோ அவர்களும் யார் யார் உங்களுக்காக (இறைவனிடம்) இறைஞ்சுகின்றார்களோ அவர்களும்தாம் தலைவர்களில் மிக நல்லவர்கள் ஆவர்.

மேலும், யார் யார் மீது நீங்கள் வெறுப்புறுகின்றீர்களோ அவர்களும் யார் யார் உங்கள்மீது வெறுப்புறுகின்றார்களோ அவர்களும் அன்றி, யார் யாரை நீங்கள் சபிக்கின்றீர்களோ அவர்களும் யார் யார் உங்களைச் சபிக்கின்றார்களோ அவர்களும்தாம் தலைவர்களில் மிகத் தீயோர் ஆவர் என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினர்.

—அல்ஹதீஸ்

கலையுலக வினா — விடை

பரிதாமணாளன்

மு. மல்லிகா, கோலாலம்பூர்

கே: "இதயக்கனி"யில் நடித்த நடிகை ராதா சலூஜா அடுத்து எந்தத் தமிழ்ப்படத்தில் நடிக்கிறார்?

ப: "இன்றுபோல் என்றும் வாழ்க" படத்தில் எம். ஜி. ஆரோடு ராதாசலூஜா நடிக்கிறார்.

ஒய். நாகூர்கான், கோலாலம்பூர்

கே: சுஜாதா எம். ஜி. ஆருடன் ஏதேனும் படத்தில் நடிக்கிறாரா?

ப: இல்லை!

எஸ். ஏ. மல்லிகா மணியம், புங்தோங், ஈப்போ

கே: "அன்னக்கிளி"யை அடுத்து வெள்ளிவிழா காணும் படம் எதுவாக இருக்கும்?

ப: ஜோசியம் கேட்கிறீர்களா? அது தெரிந்திருந்தால் நாலுபேருடைய கையைப் பார்த்தாவது காலத்தை ஓட்டலாம்!

வெ. தென்னரசு, கோலாலம்பூர்

கே: மன்மதலீலை, அபூர்வ ராகங்கள், ஒரு ஊதாப்பூ கண் சிமிட்டுகிறது, மூன்று முடிச்சு - இவற்றில் கமலஹாசனுக்கு வெற்றி தந்த படம் எது?

ப: எல்லாமே அவருக்கு வெற்றிப்படங்கள்தாம்!

அஞ்சம்மா சூரியநாராயணன், லம்பாக் எஸ்டேட், குளுவாங்

கே. இரண்டு திலக நடிகர்களுக்கும் உள்ள வரவேற்பு குறைந்துவிட்டதாகவே நான் நினைக்கிறேன். எப்படி?

ப: அவர்கள் நடித்த நல்ல படங்களுக்கு வரவேற்பு இருக்கவே செய்கிறது. தோல்விப் படங்களையும் வரவேற்று ஆதரிக்கமுடியுமா?

அப்துல் ஹமீது, சுங்கை சிப்புட்

கே: அடுத்து இங்கு வரவிருக்கும் நடிகை சுஜாதாவின் படம் என்ன?

ப: சிவாஜிகணேசனுடன் சுஜாதா நடித்துள்ள "தீபம்" விரைவில் இங்கு வரவிருக்கிறது.

எம். குணசேகரன், பாரிட் புந்தார்

கே: நகைச்சுவை நடிகர் நாகேஷின் படவுலகம் எப்படி இருக்கிறது? இப்பொழுது ஏதாவது படங்களில் நடிக்கிறாரா?

ப: நாகேஷின் திரையுலகம் மிக வேகமாக சரிந்து கொண்டிருக்கிறது. மெரீனா மூவீஸின் "எல்லாம் அவளே" படத்தில் நடித்துக்கொண்டிருக்கிறார்.

ஆர். பி. எஸ். இளம்தோதேவர், கோலாலம்பூர்

கே: கலைமகன் கமலஹாசன் நடிப்பைப் பற்றிச் சில வரிகள்?

ப: நீங்களே "கலைமகன்" என்று சொல்லிவிட்டபின் நான் சொல்ல என்ன இருக்கிறது? உடம்பை அலட்டிக்கொள்ளாமல் அவர் நடிப்பதை நன்கு ரசிக்க முடிகிறது.

இ. கதீஜா மஜீட், சுங்கை

கே: புது நடிகைகள் நிறைய வந்திருப்பதால் பழைய நடிகைகளுக்கு வாய்ப்புக் கிடைப்பதில்லை என்பது உண்மையா?

ப: புதிய நடிகைகளுக்குக் கிடைக்கின்ற அளவு பழைய நடிகைகளுக்கு வாய்ப்புக் கிடைப்பதில்லை என்பது உண்மைதான். என்றாலும் பழசுகளின் மதிப்பு குறைந்துவிடவில்லை!

செல்வராஜூ, கிள்ளான்

கே: "பத்ரகாளி" படம் வெள்ளிவிழாவரை ஓடுமா?

ப: இளையராஜாவின் இசையமைப்புடன் வெளிவந்துள்ள "பத்ரகாளி" வெற்றிப்படமென்றாலும் வெள்ளிவிழாவரை ஓடவில்லை. 100 நாள் ஓட்டத்தையே கண்டது.

கே: தற்போது எம். ஜி. ஆர். நடிக்கும் படம் எது?

ப: நாவலாசிரியர் அகிலனின் கதையான "மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன்" படத்தை இயக்கி நடிப்பதில் மும்முரமாக ஈடுபட்டுள்ளார் எம். ஜி ஆர். சரித்திரப் படமான இது மிகப் பெருஞ்செலவில் தயாரிக்கப்படுகிறது.

தாரா எழிலழகன், சுங்கைவே

கே: சினிமா நட்சத்திரங்களுக்குத் திருமண வாழ்க்கை தேவைதானா?

ப: அவர்களும் மனிதர்கள்தாம் என்பதால் சினிமா நட்சத்திரங்களுக்கும் திருமண வாழ்க்கை அவசியமே. ஆனால் சில நடிகைகள் திருமணம் தேவையில்லை என்று சொல்கின்றனர்!

கே: இன்றைய புதுமை இயக்குநர் கே. பாலச்சந்தரை அடுத்து யாரைக் குறிப்பிட்டுச் சொல்லலாம்?

ப: இயக்குநர் எஸ். பி. முத்துராமனைக் குறிப்பிடலாம்.



காதல் மன்னன் ஜெமினி கணேசன் "இதயமலர்" படத்தை டைரக்ட் செய்தது நடிப்பரசி சௌகார் ஜானகிக்குக் கொஞ்சங் கூடப் பிடிக்காது. பல ஆண்டுகளாக நடித்து, நல்ல நடிப்பு அனுபவம் நிறைந்த அவர் ஏன்தான் இந்தப் படத்தை டைரக்ட் செய்ய ஒப்புக்கொண்டாரோ! படங்களில் சிறந்த குணச்சித்திர பாத்திரங்களை ஏற்று நடிப்பதை விட்டு, இப்படி டைரக்ஷன் என்று சொல்லி தன் பெயரைக் கெடுத்துக்கொள்ளவேண்டும்?" என்று வருத்தப்பட்டார் சௌகார்!

வானொலி நிலைய இசைத்தட்டு 'லைப்ரரி'யின் 'கியூபிகல்' அறையில் அன்று முழுவதும் அடைந்து கிடந்தேன். அங்கிருந்த கிராமில் ஏதோ ஒரு 'டிஸ்க்' ஓடிக்கொண்டிருந்தது. 'ஸ்பீக்கரில்' வெளிவந்த ஒலி எனக்கு எரிச்சலூட்டியது!

"சோம்பேறி நாய்கள்! கொஞ்சம் சத்தமா குரைச்சாத்தான் என்ன? என்னமோ மைக் முன்னே நிக்கிற புது ஆர்டிஸ்ட் மாதிரி. கொஞ்சம்கூட ஒரிஜினலிட்டி இல்லாம...!"

முணுமுணுத்தவாறு மேஜையில் சிதறிக்கிடந்த இசைத்தட்டுக்களை வெறுப்போடு பார்த்தேன். அவை அனைத்தும் நாய்களின் பல்வேறு சத்தங்கள். நான் நினைத்தபடி, நான் எதிர்பார்த்தபடி ஒரு நாய் கூட ஒழுங்காகக் குரைத்து வைக்கவில்லை!

பொறுமையை இழந்த நான் எல்லாவற்றையும் வாரிக்கொண்டு 'கியூபிகலை' விட்டு வெளிவந்தேன்.

"என்னப்பா, இவ்வளவு டிஸ்க்குகளை அள்ளி வச்சுக்கிட்டு...! ஏதாவது 'மாஸ்டர் புரொடக்ஷனா'" அடுத்திருந்த 'கியூபிகல்' அறைக் கதவைத் திறந்தவாறே கேட்டார் வசந்தமோகன்.

என்னைவிட வயதில் மூத்தவரும் வானொலி நிலையத்திற்குப் பழையவருமான வசந்தமோகன் சில ஆண்டுகளுக்கு முன் பல புதுமையான தயாரிப்புக்களை வழங்கி நேயர்களின் ஏகோபித்த பாராட்டையும் அபிமானத்தையும் பெற்றவர். இப்போது இசைத்தட்டுத் தொகுப்பு நிகழ்ச்சிகளை மட்டுமேசெய்யும் நிலை அவருக்கு. அனுபவசாலியான அவரிடம், நான் தேடிக்கொண்டிருக்கும் 'சவுண்ட் இஃபெக்ட்' டைப் பற்றிக் கூறினேன்.

"அந்த மாதிரி ஒரு 'டிஸ்க்' இருந்துச்சே...!" என்றவர் 'சவுண்ட் இஃபெக்ட்' தொகுப்பைப் புரட்டினார். சிறிது நேரத்தில் "இதோ இருக்குதே!" என்று இசைத்தட்டு இரவல் வாங்கும் பாரத்தில் அதற்கான எண்ணை எழுதிக்கொடுத்தார்.

இசைத்தட்டு 'லைப்ரரி' யிலிருந்து இசைத்தட்டுக்களை இரவல் வாங்க வேண்டுமானால் இருபத்து நான்கு மணி நேரத்திற்கு முன் அதற்கான பாரத்தில் எழுதி வைக்க வேண்டும். இருப்பினும் அப்போது 'லைப்ரரி'யில் இருந்தவர் இக்கட்டான நேரத்தில் விதிமுறைகளைக் காரணங்கூறித் தட்டிக்கழிக்க விரும்பாத விஜி!

விஜியிடம் ஒரு சிறு புன்முறுவலோடு பாரத்தை நீட்டினேன். என் நிலை உணர்ந்த அவர் பாரத்தைப் பெற்றுக்கொண்டு அந்த 'டிஸ்க்கை'த் தேட 'ஷெல்ப்'புகளின் நடுவில் நடந்து மறைந்து மீண்டும் வெளிப்பட்டார்.

"சாரி!...அந்த 'டிஸ்க்' உடைஞ்சிட்டது!" என்று அவர் கூறியதும் அசடு வழிய அவரைப் பார்த்தேன். வேறு வழி தெரியாது விஜிக்கு நன்றி கூறிவிட்டுத் திரும்பி வசந்தமோகனைப் பார்த்தேன். அவர் 'கியூபிகல்' அறையில் அமர்ந்திருந்தார். இனியும் அவருக்குத் தொந்தரவு கொடுப்பது அழகல்ல என்ற முடிவுடன் எனது இருப்பிடத்திற்கு நகர்ந்தேன்.

நான் வானொலி நிலையத்திற்குப் புதியவன். வானொலியில் சேர வேண்டும்; அறிவிப்பாளராகப் பணியாற்ற வேண்டும் என்ற நீண்ட நாளைய ஆவலில் சேர்ந்தவன்.

மூன்று மாதங்களுக்கு முன் நான் வேலைக்குச் சேர்ந்தபோது கண்ணைக்கட்டிக் காட்டில் விட்டதைப் போன்று என்ன செய்வது ஏது செய்வது என்று புரியாமல், எந்தப்பகுதியில் என்ன இருக்கிறது என்றுதெரியாமல்இந்தநான்குமாடிக் கட்டிடத்தில் எனக்கென்று ஒதுக்கப்பட்ட இடத்தில் விழிக்க விழிக்க உட்கார்ந்துகிடந்தபோது அன்போடு விசாரித்தவர் வசந்தமோகன் தான். புதிதாகவரும் ஒருவரின் பணிகள் என்னென்ன என்பதை அவர் விளக்கிக் கூறினார். அவர் கூறியபடி என்னை ஒலிபரப்பு அறையான 'கொண்டிக்கு' அனுப்பினார்கள்.

அறிவிப்பாளருக்குத் துணையாக இசைத்தட்டுக்களைச் சரியான நேரத்தில் ஓட விடுவதுதான் வேலை. ஆரம்பத்தில் அறிவிப்பாளர் ஒரு பாடலின் பெயரை அறிவிக்க, நான் தவறான பாடலை ஓட விட்டு விடுவேன். சில சமயங்களில் தவறான வேகத்திலும் ஓடவிட்டுச் சரிசெய்யும் நிலையிலிருந்தேன். பின் எனது பயமும் நடுக்கமும் தெளிந்தன. அதற்கு ஒரு மாதகாலம் பிடித்தது.



பிறகுதான் வானொலி அறிவிப்பு முறைகள் பற்றிய இரண்டு வாரப் பயிற்சிக்கு அனுப்பப்பட்டேன். அந்தப் பயிற்சிக்குப் பின் என் குரலைச் சோதித்தனர். நான் தேறினேன். அறிவிப்பாளராக மாறினேன்.

நான் அறிவிப்பாளராக மாறிய இந்த ஒரு மாதத்திற்குள் எனது விருப்ப நிகழ்ச்சி ஒன்றைப் படைக்கும் வாய்ப்பு வருமென்று எதிர்பார்க்கவேயில்லை!

அரைமணி நேரத்திற்கு விரும்பிய நிகழ்ச்சியினைப் படைக்கப் போகும் நான் எனது முதல் படைப்பான அதனைப் பற்றிக் கடந்த இரண்டு நாட்களாகச் சிந்தித்தேன்.

'அறிவிப்பாளர் விருப்பத்தில்' அனுபவசாலியான பல அறிவிப்பாளர்கள் புதுமையான படைப்புக்களை வழங்கிக்கொண்டிருக்கும் அவ்வேளையில் புதியவனான நான் படைக்கும் அந்த முதல் படைப்பே நேயர்களைக் கவர்ந்திட வேண்டுமென எண்ணினேன்.

வானொலியில் சேருவதற்கு முன்பே நான் நாடகங்கள் எழுதி வந்ததால் எனது விருப்ப நிகழ்ச்சியாக நாடகம் தயாரிப்பதென்ற இறுதியான முடிவுக்கு வந்தேன்.

பயங்கரமான, பரபரப்பான மர்ம நாடகம் ஒன்றை அரைமணி நேரத்திற்கு வருமாறு எழுதி முடித்தேன். அந்நாடகத்திற்கான இசை, ஒலி இவைகளைத் தேர்ந்தெடுக்கும் போதுதான் நன்றாக மாட்டிக்கொண்டு தவிக்க நேர்ந்துவிட்டது.

நாடகத்தின் ஒரு பகுதியில் கதாநாயகனை வெறிபிடித்த நாயொன்று துரத்தி விரட்டுவதாக இருந்தது. அந்த வெறிபிடித்தநாய் "லைப்ரரி"யில் இல்லவே இல்லை. இருந்தவை எல்லாம் ஸ்டுடியோ நாய்கள். பத்து நாள் பட்டினி கிடந்தவை போல கஷ்டப்பட்டுக் குரைக்கும் நாய்கள்.

'சவுண்ட் இஃபெக்'டில் இல்லாத அந்த நாயை நேரில்தான் 'சந்திக்கவேண்டும் என்ற முடிவுடன் நாடகத்தை ஒலிப்பதிவு செய்வதில் மும்முரமாக இறங்கினேன்.

நிலைய நடிகர்களின் ஒத்துழைப்போடு நாடகத்தைக் "லீவ் சவுண்ட்" எடுத்துக்கொண்ட பின் அந்த வெறிபிடித்த நாயை நேரில் சந்திக்கத் தயாரானேன்.

நான் தங்கியிருந்த பகுதியில் வாழும் மனிதர்களுக்கு நாய்கள் என்றால் பிடிக்காது போலும். அக்கம் பக்கத்தில் எந்த நாயுமே என் கண்ணில் படவில்லை!

'கேஸட் பிளேயரைத்' தூக்கிக்கொண்டு "உங்க வீட்டு நாயைக் கொஞ்சம் குரைக்கச் சொல்லுங்கள்" என்று யாரிடம் போய் கேட்பது எனத் தயக்கத்தோடு இரவு பத்து மணி வரை காத்திருந்தேன்.

தூரத்தில் எங்கோ ஒரு நாய் விடாமல் குரைத்துக் கொண்டிருந்தது!

பெரிய காம்பவுண்ட் உள்ள வீட்டில் 'நாய்கள் ஜாக்கிரதை' என்ற போர்டு தொங்கியது. இரண்டு அங்குலம் நாக்கை வெளியே தொங்கப் போட்டுக்கொண்டு கேட்டோரத்தில் நின்று கொண்டிருந்தது படு பயங்கரமான ஓர் அல்சேஷன் நாய்!

அருகில் சென்றேன். அந்த அல்சேஷன் தலையை உயர்த்தி என்னை ஊடுருவியது. என்னைப் பார்த்து எந்த நேரத்திலும் குரைக்கும் என்று எதிர்பார்த்து 'கேஸட் பிளேயரை' இயக்கி 'மைக்கை'க் கவனமாகப் பிடித்துக்கொண்டேன்.

அது என்னை விழுங்கி விடுவதைப் போலப் பார்த்தது! பின் மெல்ல நடந்து வந்து கேட்டோரத்தில் நின்றது. 'கேஸட் பிளேயர்' ஓடிக்கொண்டிருந்தது

"இதோ அது குரைக்கப் போகிறது" என எண்ணினேன். ஆனால் அது அப்படியே முன்னங்கால்களை நீட்டி மடக்கிப்படுத்துக் கொண்டு விட்டது!

ஏமாற்றம்!

"சோம்பேறி நாயே! குரையேன!" என்று முணுமுணுத்தேன்.

அது குரைக்கவில்லை.

நான் பொறுமையை இழந்தேன்.

அந்த நாயைக் குரைக்க வைக்க என்ன செய்வதென்று மண்டையைப் போட்டு உருட்டினேன்.

உடனே—

"லொள்.. லொள்!" -நாயைப் பார்த்து நான் குரைத்தேன்!

அவ்வளவுதான்.

"கர்ர் . !லொள்...லொள்!" அந்த நாய் பாய்ந்த இரும்புக்கேட்டைத் தாண்டி வெளியே வந்து நின்றது.

நான் தடுமாறிப் போனேன். என் உடம்பிலிருந்து ஒரு பவுண்டு சதையை ஒரே "கௌ"வில் எடுத்துவிடுமோ என்ற பயத்தில் தப்பித்தால் போதும் என ஓட்டம் பிடித்தேன்.

அது விடவில்லை! படுவேகமாக ஓடிவந்தது.

தலைதெறிக்க ஓட ஆரம்பித்தேன்.



"எல்மட் போட்டிருந்தா இப்படி ஆகியிருக்குமா?"
"எல்மட் வாங்கப் போகும் போதுதான் இந்த விபத்தே நடந்தது"

மறுநாள் மிகப் பிரமாதமாக நாடகத்தைத் தயாரித்து முடித்தேன்.

ஒலிப்பதிவு நாடாவை ஒலிபரப்பு அறையில் கொடுத்துவிட்டு நிகழ்ச்சி ஒலியேறும்போது மீண்டும் ஒருமுறை கேட்கவேண்டும் என அங்கேயே உட்கார்ந்துவிட்டேன்.

சரியான நேரத்தில் ஒலிப்பதிவு நாடா ஓட ஆரம்பித்தது. அப்போது பொறுப்பில் இருந்த அறிவிப்பாளர் சுவப்னாகூட என் படைப்பை ரசித்துக்கொண்டிருந்தது எனக்குப் பெருமையாக இருந்தது.

ஆயிற்று! அறிவிப்பாளர் விருப்பத்தில் எனது முதல் படைப்பு ஒலியேறி முடிந்தது.

அதனை வெற்றிகரமாகப் படைத்துவிட்ட திருப்தியில் சுவப்னாவைப் பார்த்துப் "புரோகிராம் எப்படிங்க இருந்துச்சு" என்று கேட்டேன்.

"வெரி குட்! நான் 'எஸ்பெக்ட்' பண்ணவே இல்லே; நீங்க இவ்வளவு நல்லா 'புரடியூஸ்' பண்ணுவிங்கன்னு..." என்றவர் அடுத்து அறிவிக்கவேண்டியதையும் நேரத்தையும் கவனித்துக் கொண்டிருந்தார்.

ஒலிபரப்பு அறையிலிருந்து நான் வெளிவர எண்ணியபோது மெயின் கண்ட்ரோல் அறையில் பணியாற்றும் மோகன் ஏதோ ஒரு கடிதத்துடன் உள்ளே நுழைந்தார். அதனை அறிவிப்பாளர் சுவப்னாவிடம் கொடுத்துவிட்டு ஒரு சிறு புன்முறுவலை என் மீது வீசிவிட்டு அகன்றார்.

அந்தக் கடிதத்தை வாங்கிப் பார்த்த சுவப்னா பலமாகச்சிரிக்கத் தொடங்கிவிட்டார்.

அவரின் அந்தச் சிரிப்பின் அர்த்தத்தை நான் புரிந்துகொள்ள சிரமப்பட்டேன்.

"இப்ப ஒரு அறிவிப்பு வந்திருக்கு. செய்யறேன் கேளுங்க..." என்றவர் அப்போது ஒலியேறிக் கொண்டிருந்த மெல்லிசை நிகழ்ச்சியின் முதல் பாடல் முடிந்ததும், மின்சாரக் கோளாறினால் சிற்றலை, மத்திய அலை மீட்டர்களில் குறிப்பிட்ட சில நிமிடங்கள் ஒலிபரப்புத்தடைப்பட்டதற்காக வருந்துவதாக அறிவித்தார்.

அவர் குறிப்பிட்ட அந்த நேரம்-காஜாங்கில் உள்ள ஒலிவாங்கி நிலையத்தில் மின்சாரக் கோளாறு ஏற்பட்ட அந்த நேரம்—

ஓ...! அந்த நேரத்தில்தான் என் நிகழ்ச்சி இடம்பெற்றது.

அப்படியென்றால்— அது அந்த நேரத்தில் வானொலிப் பெட்டிகளில் ஒலிக்கவில்லையா?

எவ்வளவோ சிரமங்களுக்கிடையில் ... அனுபவங்களுக்கிடையில் நான் தயாரித்தஅந்தமுதல் நிகழ்ச்சி...

சுவப்னா என்னைப் பார்த்தார். அத்தனை பேர் மீதும் 'வள்'ளென்று விழவேண்டும்போல் எனக்குத் தோன்றியது. ●

15 நாள் பலன்

மே 10 முதல் மே 25 வரை

கும்பம் (ஜன 20 — பிப் 18)

எதிரிகளை ஒருகை பார்ப்பதற்கு இது சமயமல்ல. வெறும் யூகங்களை வைத்துக்கொண்டு எதையும் செய்ய முயலாதீர்கள். தொழிலில் குறிப்பாக வியாபாரத்தில் லாபம் கிடைக்கும். பொதுசேவை உங்களுக்குக் கரும்பாக இனிக்கும். 21ஆம் தேதி நீங்கள் செய்யும் செயல்களெல்லாம் உங்களுக்கு நன்மை தருவனவாகவே அமையும். வாகனப் போக்குவரத்தில் கொஞ்சம் கவனமாக இருங்களேன்!

நல்ல நாட்கள்: 12, 13, 17, 18, 21
எச்சரிக்கை நாள்: 16

மீனம் (பிப் 19- மார்ச்சு 20)

திருமணமாகாத மீன ராசிக்காரர்களுக்கு வியாழன் பார்வை கிட்டும் நேரம் இது. பொருத்தமான பெண்ணோ மாப்பிள்ளையோ கண்ணிலும் கருத்திலும் தென்படும் நல்ல சமயம். விட்டுவிடாதீர்கள். சக தொழிலாளர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக இல்லாமல் போவதற்கு உங்கள் கிரகமே காரணம். ஒரு நல்ல சேதி! எப்படியாவது கையில் பணம் புரண்டுகொண்டே இருக்கும்.

நல்ல நாட்கள்: 12, 13, 17, 24
எச்சரிக்கை நாட்கள்: 16, 25

மேஷம் (மார்ச்சு 21 - ஏப். 20)

அறிவு முக்கியத்துவம் பெறுகின்ற எந்த வேலையையும் செய்தால் உங்களுக்கு வெற்றி கிடைக்கும். சக தொழிலாளர்கள் அனுகூலமாக விளங்கமாட்டார்கள். வேலைப்பளுவும் அதிகமாகலாம். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. வெளியூர்ப் பிரயாணங்களைத் தள்ளி வையுங்கள்.

நல்ல நாட்கள்: 12, 13, 17
எச்சரிக்கை நாள்: 16

ரிஷபம் (ஏப் 21 - மே 20)

பொருளாதார நெருக்கடி உண்டாகலாம். நண்பர்கள்-உறவினர்கள் முதலியோரால் செலவும் ஏற்படலாம். அளவோடு செலவழித்து வளமோடு வாழுங்கள். குடும்பத்தில் மேட்டுக்கு இழுத்தால் பள்ளத்திற்கு இழுப்பார்கள். எனவே குடும்பப் பிரச்சினைகளில் நிதானமான போக்கைக் கடைப்பிடியுங்கள். இல்லையென்றால் வீடு உங்களுக்கு நரகமாகிவிடும்.

நல்ல நாட்கள்: 12, 13, 17
எச்சரிக்கை நாட்கள்: 16, 25

மிதுனம் (மே 21 - ஜூன் 20)

13 என்னும் எண் மற்றவர்களுக்கு எப்படியோ, உங்களைப் பொறுத்தவரையில் இந்த மாதத்தில் அதிர்ஷ்டம் தரக்கூடியது. உடலாரோக்யம் நன்றாக இருக்கும். உங்களின் முன்னேற்றத்தில் பெரிய மனிதர்களின் பங்கும் சேரும். குடும்பத்தில் சில்லறைத் தகராறுகள் ஏற்படலாம் சமாளியுங்கள். வாகனப் போக்குவரத்திலும் இயந்திரங்களை இயக்குவதிலும் கவனமாயிருங்கள்.

நல்ல நாட்கள்: 12, 13, 17
எச்சரிக்கை நாட்கள்: 16, 23

கடகம் (ஜூன் 21-ஜூலை 20)

சிறுசிறு திட்டங்களை நிறைவேற்ற நல்ல வாய்ப்பு. அதற்கு உதவியாக நண்பர்களும் இருப்பார்கள். பொருளாதார நிலை நல்லபடி இருக்கும். என்றாலும் தேவையற்ற செலவுகள் எதிர்பாராத வகையில் வரலாம். நண்பர்களுடன் உல்லாசமாகப் பொழுதுபோகும். மற்றவர்களுக்கு உதவவேண்டியிருக்கும். உதவுங்கள். அதே வேளையில் தனக்கு மிஞ்சிதான் தருமம் என்பதை மறந்துவிட வேண்டாம்.

நல்ல நாட்கள்: 13, 14, 17
எச்சரிக்கை நாள்: 16

சிம்மம் (ஜூலை 21 - ஆக 21)

வெளியூர் உறவினரின் நன்மை கிட்டும். செய் தொழிலில் மேன்மை உண்டாகும். உங்களுடைய லட்சியங்களை நிறைவேற்றத் திட்டம் தீட்டும் நேரம் இது பொறுமையாய் இருந்தால் பல காரியங்களில் வெற்றி கிடைக்கலாம். உடலாரோக்கியத்தைக் கவனித்துக் கொள்ளுங்கள். சுவரை வைத்துத்தானே சித்திரம் எழுதவேண்டும்.

நல்ல நாட்கள்: 12, 13, 17
எச்சரிக்கை நாட்கள்: 16, 23, 25

கன்னி (ஆக 22-செப். 22)

தொழில் சுமுகமாக நடைபெறும். நண்பர்களின் உதவி உங்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும் பெரியோர்களின் ஆதரவும் உண்டு. குடும்பத் தகராறு தோன்றினாலும் சமாளித்துவிடுவீர்கள்! வாகனப் போக்குவரத்தைக் கூடுமானவரை தவிருங்கள். லாபம் கருதிவரும் உறவினர்களிடமிருந்தும் நாசுக்காக ஒதுங்குங்கள்.

நல்ல நாட்கள்: 12, 13, 17
எச்சரிக்கை நாட்கள்: 16, 25.

துலாம் (செப் 23-அக். 22)

மனதில் தோன்றும் எண்ணங்களைச் செயற்படுத்த முனையுங்கள். அவற்றில் ஒன்றேனும் உங்களின் வாழ்க்கையைச் சிறப்பான நிலைக்கு மாற்றியமைக்கலாம். உங்களுக்குள்ள திறமைகளை முழுமையாகப் பயன்படுத்தி முன்னேறும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. வெற்றி மங்கை உங்களை அணைக்க வரும்போது எட்டி உதைக்காதீர்கள்.

நல்ல நாட்கள்: 12, 13, 17
எச்சரிக்கை நாட்கள்: 16, 19, 25

விருச்சிகம் (அக்.23- நவ. 22)

கடும் உழைப்பு அதற்கேற்ற ஊதியத்தைத் தரும். ஆடம்பரமாகச் செலவழிப்பதை நீங்கள் கட்டுப்படுத்தாவிட்டால் சேமிப்புக் கட்டாயம் பூஜ்ஜியமாகிவிடும். எறும்பு ஊரக் கல்லும் தேயும் அல்லவா?

யாருடைய ஆலோசனையும் இல்லாமலேயே எதையும் செய்ய முயலுவீர்கள். அது சாதகமாகவே அமையும். நீண்ட நாட்களாகத் தீராது கிடந்துவந்த பிரச்சினை ஏதுமிருந்தால் இப்போது தீர வழியுண்டு.

நல்ல நாட்கள். 15, 19, 21
எச்சரிக்கை நாள்: 16

தனுசு (நவ 23 - டிச. 20)

குடும்பத்தில் உள்ளவர்கள் மடுவை மலையாக்கி உங்களுக்குத் தலைவலியைக் கொடுக்கலாம். "பெனடால்" வைத்திருந்து பலனில்லை; புத்தியைத் தீட்டுங்கள். உடலாரோக்கியத்தில் கவனம் தேவை கூட்டுத் தொழிலில் மாட்டிக்கொண்டு அவதிப்படாதீர்கள். கடன் வாங்கவும் வேண்டாம்; கொடுக்கவும் வேண்டாம். இரண்டுமே உங்கள் கழுத்தைத்தான் நெரிக்கும்.

நல்ல நாட்கள். 12, 15, 18
எச்சரிக்கை நாட்கள்: 16, 19

மகரம் (டிச 21- ஜன 19)


பிரச்சினைக்குரிய விவகாரங்களை நண்பர்களிடம் கலந்தாலோசியுங்கள். ஏதாவது வழி பிறக்கும். நீங்கள் செய்யும் வேலைகளில் அளவுக்கு மீறி திருப்திபடாதீர்கள். அதுவே பல தவறுகளுக்கு வழி உண்டாக்கிவிடும். குடும்பத்தில் கருத்து வேற்றுமை ஏற்படலாம். எதிர்பாராத செலவுகள் வரும். சமாளிக்க ஆயத்தமாகுங்கள்.

நல்ல நாட்கள்: 12, 13, 17
எச்சரிக்கை நாட்கள்: 16, 25

—தஞ்சை நகுலன்

அடுத்த இதழில் துவங்குகிறது
குறுக்கெழுத்துப் போட்டி

35



கற்பின் செல்வி
கண்ணகி
கதை: சரோ
படம்: பாலு
4
அன்றிரவு....
மாதவி, உன்னை ஒருக்கணம் கூட இனிமேல் என்னால் பிரிந்திருக்க முடியாது. எனது வீட்டுக்கும் இனி போகமாட்டேன். எனது மனைவி கண்ணகியையும் பார்க்கமாட்டேன்
என் கணவர் என்னைவிட்டுப் போனபிறகு இந்த நகைகள் எதற்கு? தலைக்கு எண்ணெய் தான் எதற்கு? ஆண்டவா, அவரைச் சீக்கிரம் என்னுடன் சேர்த்துவிடு.. அன்றுதான் நகைகளை திரும்பவும் அணிவேன்
மக்கள் கடற்கரையில் இந்திரவிழா கொண்டாடினர். அங்கு மாதவி பாடிய பாடல் கோவலனுக்குச் சந்தேகத்தைத் தருகிறது.
நீ என்னை மறந்து வேறு யாரோ ஒருவரை நினைத்துக்கொண்டு இருக்கிறாய். சீ! இனி நான் உன் முகத்தில் விழிக்கமாட்டேன்
வீட்டுக்குத் திரும்பிவிடும்படி கடிதம் எழுதி தனது தோழி வசந்தமாலையிடம் கொடுத்-தனுப்பினாள் மாதவி. ஆனால் கோவலன் அதை மதிக்காது கண்ணகியோடு வாழச் செல்கிறான்.....
தொடரும்...

சிறுவர்கதை

தங்கக் கத்தரிக்காய்

‘பழனி மாமா’

ஈப்போவுக்குப் பக்கத்தில் உள்ள கம்பம் ஒன்றில் பெரியய்யா, சின்னையா என்று இரண்டு பேர் அடுத்த அடுத்த வீடுகளில் வாழ்ந்து வந்தார்கள். அவர்களுடைய வீடுகளுக்குப் பின்புறம் நல்ல, பெரிய நிலங்கள் இருந்தன. அவற்றில் அவர்களிருவரும் காய்கறித் தோட்டம் போட்டு வந்தனர்.

பெரியய்யா சற்று முரட்டுக் குணமுடையவன். சின்னையாவோ மிகுந்த தந்திரசாலி, ஆனால் நல்லவன்தான்! பெரியய்யாவின நிலத்தின் வழியாகத்தான் சின்னையாவின் தோட்டத்திற்குத் தண்ணீர் பாய்ச்ச முடியும். எப்படியும் சின்னையா வாய்க்காலை ஒழுங்கு செய்யத்தானே வேண்டும் என்பதால் பெரியய்யா பேசாமல் இருந்துவிடுவான். சின்னையாவின் தோட்டத்தில் போடும்நத்தைமருந்தேதனதுதோட்டத்துக்கும் போதுமானது என்று நினைத்து அந்தக் காசையும் மிச்சம் பிடித்துவிடுவான் பெரியய்யா. பெரியய்யாவின் இந்தப் போக்கு சின்னையாவுக்குக் கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லை சமயம் வரட்டும் என்று காத்திருந்தான்.

சில நாட்கள் கழிந்தபின் பெரியய்யாவின் தோட்டத்தில் உள்ள கத்தரிச் செடிகள் யாவும் நிறையக் காய்த்திருந்தன; சின்னையாவுக்கு மூளை பலமாக வேலைசெய்தது. ஒரு தங்கத் துக்கானிடம் ஒவ்வொன்றும் ஐந்து வெள்ளி பெறுமானமுள்ள அளவில் சின்னச் சின்ன தங்க உருண்டைகளாக ஐந்தாறு செய்து வாங்கிவந்தான். ஒருநாள் பெரியய்யா வீட்டில் இல்லாத சமயம் பார்த்து சின்னையா தன் வேலையைத் தொடங்கினான்.



பெரியய்யாவின் கத்தரித் தோட்டத்திற்குப் போனான். அங்கு முற்றியிருந்த காய்களில்ஒன்றில்மட்டும் ஒரு சிறு ஊசித் துவாரத்தைப் போட்டு அதில் அந்தத் தங்க உருண்டையை வைத்துத் திணித்த பின்னர் சிறிது களிமண்ணை எடுத்து ஊசித் துவாரத்தை அடைத்துவிட்டான் இதேபோல் வெவ்வேறு அளவிலான ஐந்தாறு கத்தரிக்காய்களிலும் தங்க உருண்டைகளை வைத்து மூடிவிட்டான். எந்தெந்தச் செடிகளில் இந்தக் காய்கள் இருக்கின்றன என்று கவனமாகப் பார்த்துக் கொண்ட பின்னர் யாருக்கும் தெரியாமல் தன் வீட்டிற்குத் திரும்பிவிட்டான் சின்னையா.

மறுநாள் சின்னையா, பெரியய்யாவிடம் ‘அண்ணே, இன்னிக்கு ராத்திரி குழம்பு வைக்கிறதுக்கு ஒரு கட்டி கத்தரிக்காய் கொடுண்ணே!" என்று கேட்டான். "முப்பது காசை முதல்லே எடுத்து வை" என்று கேட்டு அதை வாங்கி இடுப்பில் வைத்துக்கொண்ட பெரியய்யா தோட்டத்துக்குப் போய் ஒரு கட்டி அளவு கத்தரிக்காய்களைப் பறித்து வந்து சின்னையாவிடம் கொடுத்தான்.

மிகுந்த மரியாதையுடன் அவற்றைப் பெற்றுக்கொண்ட சின்னையா "அண்ணே, இந்த ஊரிலேயே ஒன்னோட தோட்டத்துக் காய்தான் முதல் நம்பர்னு எல்லாருமே சொல்றாங்க... ஏண்ணே, ஒன்னோட நிலத்துப் பகுதியிலே ஈயம் இருக்குன்னு முந்தி சொன்னாங்களே, அதனாலே இப்படி இருக்குமோ?" என்று சற்று இளக்காரமாகக் கேட்டான்.

"ஈயம் என்னடா சின்னையா! என்னோட மண்ணுலே தங்கமே இருக்குடா" என்று சொல்லிவிட்டு மிகுந்த பெருமையோடு சிரித்தான் பெரியய்யா. "நிலத்திலே இருக்கிறது காயிலேயும் வரும்முன்னுதானே சொல்லுவாங்க... ஒங் கத்திரிக்காயிலே தங்கம் வந்திருக்கான்னு தான் பார்த்துப்பிடுவோமே" என்று சொல்லி ஒரு குறிப்பிட்ட காயை எடுத்துச் சின்னையா இரண்டாகப் பிளந்தான். உடனே "ஆ! இதென்ன அதிசயம்! கத்திரிக்காயிலே தங்கம் இருக்கு" என்று கத்தினான்.

அதற்குப் பிறகு பெரியய்யாவின் தோட்டத்துக் கத்திரிக்காயில் தங்கக்கட்டி இருக்கும் விவரம் பக்கத்துக் கம்பங்களுக்குக்கூடப் பரவிவிட்டது. தனது தோட்டத்தில் விளையும் கத்தரிக்காய்களில் தங்கம் இருப்பதாக நம்பிய பெரியய்யா எந்த நேரமும் தோட்டத்தைக் காவல் காத்தவண்ணம் இருந்தான். அதோடு பெருத்துவரும் காய்களில் ஒன்றைக்கூட விற்றுவிடாமல் அத்தனை காய்களையும் அவனும் அவன் மனைவியுமாகச் சேர்ந்து மிகச் சிரமப்பட்டு சின்னஞ்சிறு துண்டுகளாக வெட்டி அதிலும் திருப்திப்படாமல் அம்மியில்வைத்து அரைத்துப் பார்த்துவிட்டுத்தான் மறுவேலை பார்த்தனர். இவ்வாறு செய்துவரும் நாட்களில் மேலும் நாலைந்து கத்தரிக்காய்களில் தங்கக் கட்டிகள் கிடைக்கவே பெரியய்யாவுக்கு எந்தவிதமான சந்தேகமும் வரவில்லை. கத்தரிக்காய் அரைப்பதற்கு அந்தக் கம்பத்தைச் சேர்ந்த இரண்டு பேரை வேலைக்குச் சேர்த்துக்கொண்டான.

தங்கம் இருப்பதாகச் செய்தி பரவியதால் பலரும் அந்தத் தோட்டத்துக் காய்களைத் திருடுவதற்குச் சமயம் பார்த்துக் காத்திருந்தனர். பெரியய்யா சற்றும் தூங்காமல் இரவெல்லாம் காவல் காத்தமையால் சின்னையா தனது தோட்டத்தைக் காவல் காக்காமல் நிம்மதியாகத் தூங்கினான்.

இப்படியே அந்த வருஷம் முழுமையும் காய்த்த கத்தரிக்காய் அனைத்தும் அரைபட்டே வீணாயின. மறுமுறையும் கத்தரிக்காய் பயிரிட்டு அவற்றையும் அரைத்தே பாழாக்கினான் பெரியய்யா. இதனால் அவனுக்கு ஏகப்பட்ட பணம் நட்டமாயிற்று. மூன்றாவது முறை கத்தரி பயிரிட்டபோது இனியும் அரைத்துக் கெடுப்பதில்லை என்ற முடிவுக்கு வந்திருந்தான் பெரியய்யா. ஆனாலும் அவன் நிம்மதியைக் கெடுக்கும் வகையில் அங்கு விளையும் கத்தரிக்காய்கள் அத்தனையுமே திருட்டுப்போய்க்கொண்டே இருந்தன. இதிலிருந்து மீள்வதற்கான வழி பெரியய்யாவுக்கு இன்னும் தெரியவில்லை. சின்னையாவின் குள்ளநரித் தந்திரத்தால் பெரியய்யாவுக்கு ஏற்பட்ட நட்டத்தைப் பார்த்தீர்களா?

எழுந்திடு!



பாப்பா பாப்பா எழுந்திடு
பட்டுப் பாப்பா எழுந்திடு!

துள்ளி பாப்பா எழுந்திடு
பள்ளி செல்ல எழுந்திடு!

கதிரோன் கிழக்கே எழுகிறான்
காண்பாய் பாப்பா எழுந்திடு!

சேவற் கோழி கூவுதே
செல்லப் பாப்பா எழுந்திடு!

பாலும் ஆறிப் போகுமுன்
பாப்பா எழுந்து பருகிடு!

–நெ. முத்தெழிலன்

[.6 ம் பக்கத் தொடர்ச்சி]

தினங்களில் இதற்கு ஒப்புக் கொண்டார்கள். அதன் பயனுக ம.இ:கா.வில் புதிய தலைமைத் துவம் ஏற்பட்டு மகத்தான புதிய திருப்பங்களையும் என்றும் காணுத முன்னேற்றத்தையும் கண்டு வருகிறோம்.

1975-ல் ம.இ.கா. பொதுப் பேரவையில் நான் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டு பணியாற்ற வாய்ப்புக் கிட்டியுள்ளது. எனக்களிக்கப் பட்டிருக்கும் இப்பொறுப்பினை உங்கள் அனைவரின் ஒத்துழைப் பால் திறம்பட நிறைவேற்றுவேன் என நம்புகின்றேன்.

அரசியலில் மிகவும் முக்கியமானது இணக்கம். கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் சுமுகமான முறையில் அதனைப் பேசித் - தீர்த்துக் கொள்ள முடியும். அரசியலில் தீர்க்க முடியாத பிரச்சினை என்பது கிடையாது. அதனைத் தான் ஆங்கிலத்தில் "அரசியல் என்பது பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் கலை" என்று கூறுகின்றனர்.

நாம் அரசியலில் காரியங்களைச் சாதிக்க 5 நாள் ஆகலாம், 5 வாரங்கள் ஆகலாம் 5 மாதங்களாகலாம் 5 வருடம் ஆகலாம் இன்னும் சொல்லப் போனுல் 50 வருடங்கள் கூட ஆகலாம். எனவே நாம் பொறுமையைக் கடைப்பிடித்து அடக்கமாகவும் நிதானமாகவும் காரியங்களைச் சாதிக்க வேண்டும். அரசியலில் அவதியும் ஆவேசமும் கொள்வது பாதகமாகும்.

உலக அரசியலில் சோஷலிஸம், கம்யூனிஸம், பாசிசம், நாசிஸம், கேப்பிட்டலிஸம் அதாவது முதலாளித்துவம் போன்ற இஸங்கள் உள்ளன.

சோஷலிஸம் என்பது, உங்களிடத்தில் இரண்டு பசுக்களிருந்தால் ஒன்றை நீங்கள் வைத்துக் கொண்டு இன்னுென்றை அடுத்த வீட்டுக் காரருக்குக் கொடுத்துவிட வேண்டும்.

கம்யூனிஸம் என்றுல் இரண்டு பசுக்களையும் அரசாங்கம் எடுத்துக் கொண்டு, உங்களுக்குப் பாலை மட்டும் கொடுக்கும்.

பாசிஸம் என்றுல் உங்களையும் உங்கள் பசுமாடுகளையும் அரசாங்கத்திற்குச் சொந்தமாக்கிக் கொள்ளும். பாலை விலைக்கு விற்கும்.

நாசிஸம் என்றுல் உங்களை சுட்டுக் கொன்றுவிட்டு பசுக்களை எடுத்துக் கொள்ளும்.

கேப்பிட்டலிஸம் [முதலாளித்துவம்] என்றுல் இரண்டு பசுக்களையும் நீங்களே பெற்றிருப்பீர்கள். ஆனுல் ஒன்றை வைத்துக் கொண்டு பிறிதொன்றை விற்று, பசுவிற்குத் தீவனம், உங்களுக்குரிய தேவைகள், மற்றும் இதர வகைகளில் ஆதாயம் தரும் காரியங்கள் ஆகியவற்றிற்கு அப்பணத்தை ஈடுபடுத்துதல்.

ம.இ.கா.வின் நீலப் புத்தகத் திட்டமும் இதே போன்ற திட்டத்தைத் தான் கொண்டுள்ளது. டான்ஸ்ரீயின் தலைமைத் துவம் இப்போது மிகவும் முன்னேக்கிச் சென்று கொண்டிருக்கிறது. தொலை தூர முன்னேக்கும், காலத்தோடு போட்டி போடும் அரசியல் சாதுர்யமும் டான்ஸ்ரீயின் தலைமைத்துவத்தில் மிளிர்கிறது, நமது சமூகத்தை பொருளாதார பலம் வாய்ந்த சமூகமாக ஆக்குவதற்கு அவர் இருபது ஆண்டுகால தொலைநோக்குடன் திட்டம் போட்டு அதனை நிறைவேற்றி வருகிருர். அவரது

தாரப் பிரச்சினைகள் ஏராளம் உள்ளன. நான் அங்கு சென்றிருந்தபோது ஒரு இனிய நண்பர் ஒருவர் என்னிடம் கூறியதாவது .... ”

என்றுமே இல்லாத உற்சாகத்தோடும், மகிழ்ச்சியோடும் நாளை நடக்கப்போவதை அறிந்த ஒரு ஞானியைப் போல் பொருள் நிறைந்த ஓர் உரையை அவர் ஆற்றிக்கொண்டிருந்தபோது அவரது உரை இடையில் திடீரென்று நின்றது; நின்றது அவரின் உரை மட்டுமல்ல; மூச்சும்தான் என்பது பிறகு தெரிந்தது.

எப்படி அன்றைய தினம் "டத்தோ"வின் பேச்சு முடியாமல் முடிந்ததோ, அதேபோல அவர் நாட்டுக்கும் இந்திய சமூகத்திற்கும் ஆற்றவிருந்த சேவைகளும் முடியாமல் முடிந்தன.

எங்கு நீ சென்றாய்?

(சி. அன்பானந்தம், பிறுங்கு)

சின்னவர் பெரியோர் எல்லாம்
சிந்தனை மிக்க உன்னைத்
தன்னிகர் இல்லா மேன்மை
தந்திட வந்தாய் என்றும்
புண்ணிய வயத்தால் பெற்ற
பொக்கிசம் என்றும் எண்ண,
எண்ணிய முடிக்கும் முன்னே
எங்குநீ சென்றுய் ஐயா?

ஒன்றிய அன்பை டான்ஸ்ரீ
உன்னிடம் கொண்டே மக்கள்
நன்குறப் பணிகள் செய்ய
நம்பிய படிநீ சேவை
இன்புறச் செய்தாய்! சென்றுய்!
இப்புவி உளநாள் மட்டும்
உன்புகழ் நாமம் போற்றும்
"ஒப்பிலா டத்தோ" என்றே!

இம்மகத்தான பணிகளுக்கு என்றென்றும் நான் பக்கத் துணையாதப் பணியாற்றுவேன் என உங்கள் அனைவர்க்கும் உறுதியளிக்கின்றேன்.

அம்னேவின் பொருளாதாரக் கருத்தரங்கு இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அவர்களிடத்தும் பொருளா

அரசாங்கத்தின் பல குழுக்களில் பொறுப்பேற்றும், ம. இ. கா. வளர்ச்சிக்குப் பாடுபட்டும் நமது சமூகத்தின் மதிப்பை உயர்த்திய டத்தோ ஆதிநாகப்பன் அவர்களின் திருவுருவத்தை புதிய சமுதாயம் இந்த இதழில் அட்டைப் படமாக ஏந்தி இந்திய சமுதாயத்தின் சார்பில் அன்னுரை நினைவு கூர்கிறது.

நன்றி: இயக்கம் ஜுன் '76.







பரபரப்பூட்டிய சிலாங்கூர் ம.இ.கா. பலப்பரீட்சை

வென்றவர்கள் சொல்கிறார்கள்

"மாநில ம. இ. காவின் புதிய தலைவர் என்னும் முறையில் மந்திரி புசார் அவர்களை அண்மையில் சந்தித்தேன். அதன் பலனாக மூன்று மாதங்களுக்கு ஒரு முறை மாநில ரீதியில் இந்தியர்களின் பிரச்னைகள் பற்றித் தம்முடன் மாநில ம. இ. கா. கலந்துரையாடி அவற்றுக்குத் தீர்வு காண மந்திரி புசார் சம்மதித்துள்ளார்.

அண்மையில் நடந்து முடிந்த மாநிலத் தேர்தலைப் பற்றிச்சொல்ல வேண்டுமானால் அது உழைப்பாளிகளுக்கும் பட்டதாரிகளுக்கும் இடையே நடைபெற்ற தேர்தல் என்றுதான் சொல்ல வேண்டும். மக்கள் யாரை விரும்புகிறார்கள் என்பதுதான் தெரிந்துவிட்டதே"

ச. சாமிவேலு,

[தலைவராகத் தேர்வு பெற்றவர்]

துணைத்தலைவராகத் தேர்வு பெற்ற திரு. ஜி. வடிவேலு வெளிநாடு சென்றிருப்பதால் அவருடைய கருத்து இப்பகுதியில் இடம் பெறவில்லை.

"எனது அரசியல் கொள்கை குழுச்சார்பற்ற கொள்கையாகும். இரு குழுக்களும் என்னைத் தத்தம் அணியில் சேர்த்திருந்ததே அதற்குத் தகுந்த சான்று.

ஒரு கிளையின் இருதரப்பினருக்கிடையே ஏற்பட்ட பிரச்சினையில் நான் எத்தரப்பினரையும் சாராமல் இரு தரப்பாரும் ஏற்கக்கூடிய வகையில் முடிவு செய்யும் எனது கொள்கையே என் வெற்றிக்குக் காரணம் என்று நான் கருதுகிறேன்.

குடியுரிமைப்பிரச்சினையில் திரு. சாமிவேலு குறிப்பிட்டிருப்பது போல கிழ்நிலையில் முயன்று பயனிருக்காது என்பது உண்மை. ஆகவே அமைச்சரவை நிலையில் இதற்குப் பரிகாரம் காண நடவடிக்கை எடுக்குமாறு தேசிய ம இ. கா. விடம் வற்புறுத்துவேன். விரும்பும் எந்தவோர் இந்தியரும் சிலாங்கூரைப் பொறுத்தவரையில் ம.இ.கா. வின் உறுப்பினராக ஆவன செய்வேன்"

கோ. ராஜரத்தினம்,

[பொதுச் செயலாளர் பதவிக்கு ஒருமனதாகத் தேர்வு பெற்றவர்]





"இந்தியர்களிடையே வேலையில்லாப் பிரச்சினை தலைவிரித்தாடுகிறது என்பது தெரிந்ததே. வரவிருக்கும் ம. இ. கா. தேசியப் பேராளர் மாநாட்டில் இதன் தீர்வுக்கு வழிகாணும்படி வற்புறுத்துவேன்.

எங்கள் அணிக்குக் கிடைத்த வெற்றி, உழைப்போருக்கு கிடைத்த வெற்றி. அரசியலில் பேராளர்கள் மிகவும் தெளிவாகச் சிந்திக்கத் துவங்கியிருப்பது குறித்து மகிழ்ச்சியடைகிறேன்; அவர்களுக்கு நன்றி கூறுகிறேன்"

பி. கிருஷ்ணன்,

[துணைப்பொதுச் செயலாளராகத் தேர்வு பெற்றவர்]



"பொருளாதாரத் துறையில் மாநில ம. இ. கா.வையும், இந்தியர்களையும் மேலும் வலுப்படுத்தும் திட்டங்களைத் தீவிரமாக்கக் கருதி இருக்கிறேன்.

ஜனநாயகமும் மக்கள் சக்தியும் வெற்றி பெற்றிருப்பதைத் தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன அந்த ஜனநாயகத்தையும் மக்கள் சக்தியையும் நன்கு பயன்படுத்தி மக்களுக்கு உருவான முன்னேற்றத்தை மாநில ம. இ. கா. மூலம் வழங்க முயலுவேன்".

வி. கோவிந்தராஜு,

(பொருளாளராகத் தேர்வுபெற்றவர்)



"சிலாங்கூர் மாநில ம.இ.கா. நிர்வாகம் இதுவரை செய்திருப்பதைக் காட்டிலும் இன்னும் அதிகமாகச் சேவை செய்யமுடியும் என்னும் நம்பிக்கையிலேயே அந்த நிர்வாகத்தில் அமர்வதற்கு எங்கள் அணி போட்டியிட்டது.

என் தோல்வி எனக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தினாலும் பேராளர்கள் எடுத்த இந்த முடிவை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

என்னுடைய உழைப்பையும் சேவையையும் எதிர்காலத்தில் மேலும் அதிகப்படுத்தி ஒவ்வொருவரின் உள்ளத்திலும் நிலைத்து நிற்கப் பாடுபடுவேன்.

என்னை மத்தியசெயலவைக்கு மிகப் பெரும்பான்மையான வாக்குகளில் தேர்ந்தெடுத்த பேராளர்களுக்கு நன்றி. தேர்தலின்போது ஏற்பட்ட போட்டி மனப்பான்மையை மறந்து ஒன்றுகூடி மலேசிய இந்தியர்களின் முன்னேற்றத்திற்கு உழைப்போம்; பாடுபடுவோம்".

வி. எல். காந்தன்

(மத்திய செயலவைக்குத் தேர்வு பெற்றவர்)




'இப்போதும ம. இ. கா.வில் இளைஞர் அலை வீசுகிறது. அது ஒதுக்கவேண்டிய அலையல்ல; ஒதுங்கவேண்டிய அலையுமல்ல; இந்த எண்ணம்தான் நான் மாநில ம. இ. கா. தலைமைக்குப் போட்டியிடாததற்குக் காரணம்.

அரசியலில் துறவறம் பூணும் அளவுக்கு எனக்கு வயதாகவில்லை; சேவைசெய்ய முடியாமலும் இல்லை. இதனால்தான் மத்திய செயற்குழுவுக்குப் போட்டியிட்டேன். பேராளர்கள் என்னைப் புரிந்து கொண்டார்கள் என்பதோடு என் கருத்தையும் ஏற்கிறார்கள் என்பது தேர்தலின் முடிவு காட்டுகிறது.

நமக்குள்ள வீடு, நிலம், குடியுரிமை போன்ற முக்கிய பிரச்சினைகளின் தீர்வுக்கு முடிந்த மட்டும் பாடுபடுவேன்"

டத்தோ
என். எஸ். மணியம்,

[மத்திய செயலவைக்குத் தேர்வு பெற்றவர்]



"சமூகம் மாற்றத்தை விரும்புகிறது என்பதற்கு எனது வெற்றி நல்ல எடுத்துக்காட்டு. ம. இ. கா.வின் உச்சநிலையில் இளைஞர்களுக்கு வாய்ப்பு அதிகமாக வேண்டுமென்பதற்கும் அறிகுறி.

அம்னோ, ம. சீ. ச. இளைஞர்களின் ஆற்றலுக்கு ம.இ.கா. இளைஞர்களின் ஆற்றல்எந்தவிதத்திலும் குறைந்ததல்ல. ஆனால்அந்தஆற்றல் முழுமையாக இன்னும் வெளிக்கொணரப் படாதிருப்பதுதான் நமது துரதிர்ஷ்டம். நமது இளைஞர்களின்ஆற்றலைப்பூரணமாகவெளிப்படுத்துவதில் ஓர் இளைஞன் எனும் முறையில் நான் தீவிரமாகப் பாடுபடுவேன். சமூகம் எந்த நம்பிக்கையோடு என்னைத் தேர்ந்தெடுத்ததோ அந்த நம்பிக்கையை நான் காப்பாற்றுவேன்".

எம். ஜி. பண்டிதன்,

[மத்திய செயலவைக்குத் தேர்வு பெற்ற இளைஞர்]

கண்ணீர்க்கதை

தங்களின் "வேதனைக்கதை"யைப் படிக்கையில் என்னையறியாமலே என் கண்களில் நீர் நிரம்பியது.
—சு. அ. வீரசிம்மன், ஜோகூர் பாரு

ஏமாற்றம்! பூரிப்பு!

"தமிழ் நேசன்" ஆசிரியர் பொறுப்பிலிருந்து தாங்கள் விலகியது என்னைப் போன்றவர்களுக்குப் பெரும் ஏமாற்றமாகவும் பேரதிர்ச்சியாகவும் இருந்தது ஆனால் "புதிய சமுதாயத்தின்" வழி தங்களின் சேவை தொடர்வது குறித்து உள்ளம் பூரிக்கிறோம்.

—ம. வே. குமார், பினாங்கு

'பத்மா'வின் பதில்கள்

மாண்புமிகு கு. பத்மநாபன் அவர்களுடன் நடத்திய சந்திப்பு நன்று. கேட்கவேண்டிய கேள்விகள்; சிந்திக்கத் தக்க, பயன்தரும் பதில்கள்!

—வே. இராமசாமி, பினாங்கு

விறு விறு....

ஆரம்ப இதழ்களே விறுவிறுப்பாக இருக்கின்றன.

—எஸ். எஸ். அரசு, கோலலங்காட்

வளர்க!

"புதிய சமுதாயம்" தரணி புகழ வளரட்டும்.

—குமாரி எஸ். மகேஸ்வரி,
நைகல் கார்டினர் தோட்டம்

எவ்வளவோ சொல்லலாம்!

வானொலி நிகழ்ச்சிகளைப் பற்றிய குறைநிறைகளை வாசகர்கள் மனந் திறந்து எடுத்துச் சொல்ல ஒரு பகுதியைத் தொடங்குவது நல்லது. எனக்குச் சொல்வதற்கு நிறைய இருக்கிறது.

—இரா. இராமராவ், தலைநகர்

அவசியம்! அவசரம்!

"முருகுவைக் கேளுங்கள்" பகுதிக்குப் பக்கங்களைக் கூட்டவேண்டும்! அவசியம்!

—அ. பாஸ்கரன், ஜோகூர்பாரு

ஒரே இனிப்பு!

அடிக்கரும்பைப்போல் ஒவ்வொரு தமிழ்நெஞ்சத்திலும் "புதிய சமுதாயம்" இனிக்கத் தொடங்கி விட்டது.

—எம். மணிவேந்தன், கோலக்கெட்டில்

மனம் நெகிழ்ந்தேன்

முருகு அண்ணாவின் வேதனைக்கதை என் மனத்தை நெகிழ வைத்துவிட்டது.

—கே. எஸ். பிரசன்னா, பெட்டாலிங்

தேவை, மிகத்தேவை

"தேவை"யைப் போன்று இன்னும் பல கதைகள் நமக்குத் தேவை.

—எஸ். பாலகிருஷ்ணன், தைப்பிங்

நல்ல படப்பிடிப்பு!

நம் நாட்டுப் பாட்டாளி மக்களின் வாழ்க்கையைப் படம்பிடித்துக் காட்டுகிறார் அகிலன்.

—குமாரி த. கோமளா, ஈப்போ

நல்ல பலன்

இதழை இன்னும் நல்ல தாளில் வெளியிட்டால்மேலும் சிறப்பாக இருக்கும். "நாள் பலன்" என்னைப் பொறுத்த மட்டில் சரியாகவே உள்ளது.

—பத்துமலையான், தலைநகர்

தொடரட்டும்

டாக்டர் இரா. தண்டாயுதம் அவர்களின் பதில்களைத் தொடர்ந்து எதிர் பார்க்கிறேன்.

—ஆ. க. சின்னையா, பினாங்கு

கேட்டதும் கிடைத்ததும்

"முருகுவைக் கேளுங்கள்" பகுதியில் இடம்பெற்ற எஸ். வி. மாதவியின் இரண்டாவது கேள்வியும், அதற்குத் தாங்கள் கொடுத்த பதிலும் அருமை.

—ச. அ. நாராயணன், தெமர்லோ

மாணவர்க்கு மட்டும்

மலேசியமொழியில் கட்டுரை எழுத உதவும் "கட்டுரையும் கைப்பழக்கம்" என்போன்ற மாணவர்களுக்கு உபயோகமானது.

—க. கிருஷ்ணன், அலோர்ஸ்டார்

ஆண்டவன் இருக்கின்றான்

வேதனையைப் படித்தேன்; என் மனதில் நீண்ட நாட்களாக ஊசலாடிக் கொண்டிருந்த பிரச்சினைக்கு முடிவைக் கண்டுகொண்டேன். போனால் போகட்டும் சார்! ஆண்டவன் இருக்கின்றான்!

—இளஞ்செல்வம், கோலாலம்பூர்

வேண்டாத கவர்ச்சி

சினிமாக் கவர்ச்சிக்கு அதிக இடம் கொடுக்காதீர்கள்.

—க. தமிழ்ச்செல்வம்,
பெந்தா தோட்டம்

இரண்டுதானா?

நாற்பத்து நான்கு பக்கங்களில் கவிதைகள் இரண்டே இரண்டுதானா? இன்னும் கூட்டினால் என்ன?

—வே. இராமு, ஈப்போ

ஆனாலும் பரவாயில்லை

நல்லதோர் ஆசிரியரைக் கொண்டு நல்லதொரு பத்திரிகை காலங்கடந்து வந்திருக்கிறதே!

—"வில்லம்பு", தெலுக்கான்சன்

எப்படிப் படைத்தாரோ?

பல வருடங்கள் மலேசிய மண்ணில் வாழ்ந்து பழக்கப்பட்டவர்போல் தொடர்கதையைப் படைத்துள்ளாரே அகிலன்!

—ச. தமிழ்ச்செல்வன்,
செலாபா தோட்டம்

"அருமையான தண்டல்"

ஆர். சண்முகத்தின் "மூனுசாமி தண்டல்" அருமையான படைப்பு.

—மு. சிகாமணி, மலாக்கா

உருகிப் போனேன்

அகிலனின்" பால்மரக் காட்டினிலே" உருக்கமாக இருக்கிறது.

—குயவன்குடி
ஏ. என். முகம்மது இக்பால்,
பெட்டாலிங் ஜெயா